
கல்கி
ஜெகசிற்பியன் எழுதும் ஜீவகீதம்
அடுத்த இதழில் ஆரம்பமாகிறது
KALKI
10.1.1965
30 காசு





நல்ல காபி தயாரிக்க புத்தம்புதிய பொடியே ஆதாரம்.

ப்ரூக் பாண்ட் காபி

எப்பொழுதும் புதியது.

மற்ற காபி பொடிகளுக்கும் ப்ரூக் பாண்ட் காபிக்கும் என்ன வித்தியாசம். ப்ரூக் பாண்ட் காபி உள்ள ஒரு பையை திறந்து பாருங்கள் — விஷயம் புரியும். அது அப்போதே அரைத்த காபிக்கொட்டையின் உண்மையான, புது மணம் கமழும்.

பொறுக்கி எடுத்த காபிக்கொட்டைகளை பதமாய் வறுத்து, அரைத்து அவைகள் வீசும் இயற்கையான மணத்தை காற்றுப்புகாத அழகான ஸெலோபேன் பைகளில் அடைப்பதே ப்ரூக் பாண்டின் தனிச் சிறப்பு வாய்ந்தமுறை. இப்பொழுதே ப்ரூக் பாண்ட் காபி அருந்தி அதன் புத்தம் புதிய பூரணமான மணத்தை அநுபவியுங்கள்.

நீங்களும் ப்ரூக் பாண்டும் சேர்ந்து ஒரு கோப்பை அருமையான காபி தயாரிக்க முடியும். அதன் புதுமையையும் நறுமணத்தையும் ருசித்து அநுபவியுங்கள்.

அடுத்த வாரம்

பொங்கல் மலரில்:

* விசேஷக் கட்டுரைகள்:

மொழியில்லாமல் பேச்சு உண்டா?

— ராஜாஜி

கண்டதும் கேட்டதும்

(இங்கிலாந்து அநுபவங்கள்)

— இ. ராஜேந்திரன்

ஆலயத்தில் ஆதவன்

— வி. ஆர். மணி. எம். ஏ.

* புதிய தொடர்கதை:

ஜீவ கீதம் — ஜெகசிற்பியன்

* நெடுங்கதை:

இன்று புதிதாய்ப் பிறந்தோம்

— மணிவண்ணன்


* சிறுகதைகள்:

பி. எஸ். ராமையா, எஸ். ரங்கநாயகி, ஜயந்தி, கோமதி சுவாமிநாதன் ஆகியவர்கள் எழுதுகிறார்கள்.

கல்கி

பொருளடக்கம்

குரோதி மார்கழி 27 — ஜனவரி 10



"நந்தி விலகினாலொழியத் தரிசனம் கிடைக்காது!"
மக்கள்
காங்கிரஸ்
நல்ல நிர்வாகம்
அதனால் என்ன?
நமது நாட்டின் 14,000 சதுரமைல் பகுதியைச் சீனா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது!
அதனால் என்ன?
விலைவாசி ஒரே அடியாக உயர்ந்திருக்கிறது
அதனால் என்ன?
எங்கும் உணவுப் பஞ்சம்
அதனால் என்ன?
சொல்ல முடியாத லஞ்ச ஊழல்
அதனால் என்ன?
பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டுத் தவிக்கிறது.
என்ன! என்ன!
ஆங்கிலமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து....
PK



மலர் 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 24

புயலுக்குப் பின்...

தமிழ் மண்ணுக்காகக் கடலுக்கு ஆறாத பசி உண்டு போலும். லெமூரியாக் கண்டம் என்ற தென் தமிழகத்தையும், கவாடபுரத்தையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் கொண்டதாகப் பரம்பரையாக வந்த செய்தி உண்டு. புனித தனுஷ் கோடியிலும், ராமேசுவரத்திலும் கடல் மீண்டும் பாய்ந்து, பல உயிர்களை விழுங்கிப் பசி தீர்த்துக் கொண்டு இப்போதுதான் வடிந்து வருகிறது. உயிர் நஷ்டம் உட்படப் பலவிதமான கஷ்டங்கள் அடைந்தோருக்கு நாடு அநுதாபத்தையும், ஆதரவையும், சேவையையும் தந்துள்ளது.

அரசாங்கம் தன்னாலியன்ற வரை கஷ்ட நிவாரணப் பணியை நன்றாகவே ஆற்றி வருகிறது. புதுப் பாம்பன் பாலத்தை உடனடியாகக் கட்டவும், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை விரைவில் தொடங்கவும் மத்திய நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் முயற்சி எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. இத் திட்டங்களால் தற்போது வேலை இழந்து நிற்கும் அகதி மக்களுக்கு ஜீவனோபாயம் கிட்டும்.

நிவாரணப் பணிகளில் அரசாங்கம் கவனிக்க வேண்டிய சில அம்சங்களை இவ் விதழில் வெளியாகியுள்ள கட்டுரையொன்று எடுத்துக் காட்டுகிறது. சர்க்கார் துறைகளில் சில இன்னும் பொறுப்புடன் நடந்து கொண்டிருந்தால் புயலினால் பாதிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கை குறைந்திருக்கும் என்றும் அக்கட்டுரை தெளிவாக்குகிறது. இதைக் கட்சி அரசியலாக எண்ணி யாரும் குழம்ப வேண்டாம். பிரபல ஆங்கில தினப் பத்திரிகை யொன்று 'சர்க்கார் துறைகள் சிலவற்றின் தவறுக்காக ஆளும் கட்சியைத் தாக்கி எதிர்க்கட்சிகள் இச்சமயத்தில் மக்கள் ஆதரவைப் பெறப் பார்க்கின்றன' என்று கூறி யுள்ளது. நமக்குத் தெரிந்தவரையில் அப்படி எந்தப் பொறுப்புள்ள கட்சியும் கூறாது என்றே நம்புகிறோம். அதே சமயத்தில் கஷ்ட நிவாரணப் பணி புரியும் அரசாங்கமும் அது கட்சியின் பணியாகப் பிரசாரமாவதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கக் கூடாது. தனி மனிதர்களாகத் தானம் செய்பவர்கள் தானப் பொருளுடன் 'இன்ன காங்கிரஸ் தலைவரிடமிருந்து நல்வாழ்த்துக்கள்' என்று சீட்டு வழங்குவது போன்ற செய்கைகளை ஆளும் கட்சியினர் ஆட்சேபிக்க வேண்டும்.

கட்சி அரசியல்கள் ஒருபுறமிருக்க, தற்போது நேர்ந்த விபரீதங்களின் விளைவாகச் சர்க்கார் இனி முன்ஜாக்கிரதையாகப் பின்பற்ற வேண்டிய சில யோசனைகள் :

ஆபத்துக் கால உதவிக்காகத் தமிழகத்துக்கென்றே ஹெலிகாப்டர்கள் பெற வேண்டும்.

வானிலை கேந்திரங்கள் அபாய நிலைமையைத் தெரிவித்தால் அதனைச் சம்பந்தப் பட்ட பகுதிகளில் தெருத் தெருவாகத் தமுக்கடித்து அறிவிக்க வேண்டும்.

விபத்துக்குப்பின் மீட்சிப் பணி புரிவதுபோல், விபத்துக்கு முன்னும் மக்களையும் உடைமைகளையும் அப்புறப்படுத்திக் காப்பதில் உஷாராக இருத்தல் வேண்டும்.

ஐரோப்பாவில் நெதர்லண்ட்ஸ் முதலிய நாடுகளில் கடற்கரைகளில் நீண்ட நெடுந் தூரத்துக்கு வலுவான அரண் அமைத்துக் கடல் உட்புகாமல் காத்து வரு

கிறார்கள். அடிக்கடி கடலரிப்பு நேரக் கூடிய ராமேசுவரம் தீவுகள், கோடிக் கரை - நாகை பகுதிகளில் இவ்வாறு ஓர் அரண் அமைத்தால்கூட நலமெனத் தோன்றுகிறது.

★

ஆபத்துக் காலத்தில் அரணாக மட்டுமின்றி, தங்குமிடமாகவும் நமது ஆலயங்கள் பயன்பட்டதை அறியும் போது நம் முன்னோர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம். இவ்வளவு உற்பாதங்களுக்குப் பின்னும் ராமேசுவரத்திலும், தர்ப்பசயனத்திலும், உத்தரகோச மங்கையிலுமுள்ள புராதன ஆலயங்கள் நலிவுறாமல் பொலிந்து, மக்களுக்குத் தஞ்சம் தருகின்றன. மக்களின் உள்ளத்துக்கு மட்டுமின்றி உடலுக்கும் ஆலயங்களே காப்பு என்ற உணர்வை கோரப் புயலுக்குப் பின் நன்கு காண்கிறோம்.

புயல் கஷ்டத்திலும் படாத பாடு பட்டுச் சில யாத்ரீகர்கள் வெள்ளத்தைக் கடந்து ராமேசுவர ஆலயத்தை அடைந்ததாகவும், சில வட இந்தியர்கள் ஏதும் நடைபெறாதது போன்ற சாந்தத் தெளிவுடன் இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்ததாகவும் 'ஹிந்து' நிருபர் கூறுகிறார். எத்தனை உற்பாதத்துக்கும் அசைந்து கொடுக்காத ஆலயத்தைப் போலவே, ஆண்டவன் கோயில் கொண்டுள்ள மனித உள்ளமும் சலனமற்று விளங்கும் என்பதைப் பிரத்தியட்சமாகக் காணும்போது துயரத்திலும் ஆறுதல் பிறக்கிறது.

தென்னகத்துக்குத் துயர ஆண்டு

இவ்வருடம் தட்சிணபாரதத்துக்கு ஒரு துக்க வருஷமாகப் பிறந்திருக்கிறது. ராமேசுவரத்துக்குக் காப்பாக இருந்து வந்த முத்துச் சிப்பிச் சுவரினைச் சுண்ணாம்புக்கு விற்றுவிட்ட பின், கரையை உடைத்துக் கொண்டு கடல் பெருகினாற் போலவே ஆங்கிலம் என்ற காப்புக் கரையைத் தகர்த்துக் கொண்டு ஹிந்தி ஏகாதிபத்தியப் பெருவெள்ளம் பொங்கி வந்துவிட்டது. 'தென்னக மக்களின் சம்மதத்தின் மீதே, ஹிந்தி ஆட்சி மொழியாகும்' என்று நேருஜி தென்னாட்டு மக்களுக்கு ஒரு மகத்தான உரிமை சாஸனப் பிரமாணமாகத் தந்திருந்த பிரதிக்ஞைக்கு மதிப்பு தரப்படவில்லை. ஹிந்தி பேசாதவர்களின் சம்மதத்தை எவ்விதத்திலும் கேட்டுப் பெறாமலே இவ்வாண்டு குடியரசு தினத்திலிருந்து ஹிந்திக்கு அரியாசனம் அளிக்கப் போகிறார்கள். இது பேச்சை மாற்றுகிற சாதாரணக் குற்றம் மட்டுமல்ல. சொல்லொன்று செயலொன்றாக நம்பிக்கைத் துரோகம் செய்யும் காரியம் இது. ஓர் அரசாங்கம் இவ்விதம் நடக்கத் தலைப்பட்டுவிட்டால் அதனை எவ்வளவு கொடிய வார்த்தையால் கண்டனம் செய்தாலும் போதாது.

சீன ஆக்கிரமிப்பு, பொருளாதார நெருக்கடி, உணவுப் பஞ்சம், புதிய வகுப்புத் துவேஷங்கள் ஆகிய பல பெரும் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய தருணத்தில் இவை போதாவென்று தேச ஐக்கியத்தைப் பிளக்கும் ஹிந்தித் திட்டத்தை அமுல் செய்வது வடிகட்டின அறிவீனமாகும். இம்மாதம் 26ந் தேதியிலிருந்து ஹிந்தியை ஆட்சிபீடத்தில் ஏற்றியே தீர வேண்டும் என்பதற்கு எவ்விதமான அவசியமோ அவசரமோ கிடையாது. தேதியை மூல சாஸனம் நிர்ணயித்து விட்டது என்ற ஒரே காரணத்துக்காக இத்தகைய துடிப்புத் தேவையில்லை. ராஜாஜி சொல்வது போல், எத்தனையோ சாஸன ஷரத்துக்களை மாற்றியவர்கள் ஆட்சி மொழி ஷரத்துக்களை அரபுக் கடலில் எறிந்து விட்டு, தேசம் முழுவதையும் சமமாக நடத்தும் நிகழ்கால நடைமுறையைத் தொடர வேண்டும். தென்னக மக்களை ஹிந்தியர் போர் செய்து வெற்றி கொண்டு கீழ்த்தரக் குடிமக்களாக்கியதுபோல், ஹிந்தி மொழியை நிர்ப்பந்தம் செய்தால் தென்னாட்டிலுள்ள ஆறு கோடி மக்களின் உள் மனம் தேசப் பிரிவினையை ஆதரிக்கத் தொடங்கும். தேசப் பற்றுள்ள அறுநூறு லட்சம் மக்களைத் 'துரோகி'கள் என்று பட்டம் சூட்டும் நிலைக்கு ஆட்படுத்த வேண்டாம்!

ஹிந்தித் திணிப்பை எதிர்த்துத் தென்னாட்டுத் தலைவர்கள் எழுச்சி பெற்றால் 'இவர்கள் ஆங்கிலத்துக்காக வாதாடுபவர்கள்; தாய் மொழிப் பற்று இல்லாதவர்கள்' என்று பொதுமக்களிடம் திரித்துக் கூறி, மக்களுக்கும் படித்தவர்களுக்குமிடையே குழி பறிப்பது எளிதாயிருக்கலாம். ஆனால் அது முறையீனமாகும்.

முறையை எடுத்துச் சொல்வார் யாருமில்லை. நேரு அவர்கள் நமக்காகக் கோட்டையைக் கட்டிக் காத்து வந்

தார்கள். அவரது மறைவுக்குப் பின் தென்னக மக்களின் நியாயமான உணர்ச்சியை விளக்கி வைக்க ஆளும் கட்சியில் மனிதரில்லை. போதனை மொழிப் பிரச்னையில் திரு சாக்லா அவர்கள் காட்டும் தைரியத்தை ஆட்சி மொழி விஷயத்தில் கடைப் பிடிப்பதற்கு ஒருவரும் இல்லாதது நமது மகத்தான துர்ப் பாக்கியம்.

பலவித பாரபட்சங்களுக்கு ஆளாகி, நமது தாய்த்திரு நாட்டிலேயே—சுதந்திர அரசாங்கம் என்று சொல்லப்படும் சுதேச நிர்வாகத்திலேயே—நாம் தாழ்வுற்று நிற்கப் போகிறோம்.

சாகஸம் மட்டும் போதாது

இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர்களையும் தொண்டர்களையும் மின்னல் வேகத்தில் கைது செய்து மத்திய சர்க்கார் தீர சாகஸம் புரிந்திருக்கிறது. கேரளத் தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்பதைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. நம்மைப் பொறுத்த மட்டில் காங்கிரஸையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் எதிரெதிர்க் கட்சிகளாகவே நாம் கருதவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படையான சர்வாதிபத்தியக் கட்சி, காங்கிரஸோ மறைமுகமான சர்வாதிபத்தியக் கட்சி. வித்தியாசம் சொற்பமே.

சீனாவிடம் இந்தியாவைக் காட்டிக் கொடுக்க இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் முனைந்ததால் சர்க்கார் நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லப் படுகிறது. தேசத் துரோகத்தைத் தடை செய்வது நியாயமே.

தேசத் துரோக நடவடிக்கையைத் தடுத்து சாகஸம் புரிந்து விட்டால் மட்டும் அது தேசப் பற்று ஆகிவிடாது. சீனாவை முறியடிக்க வழியென்ன என்பதை விவேகத்துடன் ஆராய்ந்து, வீம்புக் கொள்கைகளில் உள்ள பற்றை விட்டு முன்னேறுவதே தேசப் பற்றாகும். இந்த அம்சத்தில் ஆட்சியாளர்கள் தங்களுடைய தேசப் பற்றை இன்றளவும் அறிவுக்குப் பொருந்திய முறையில் நிரூபித்துக் காட்டவில்லை. சீன ஊடுருவலைத் தடுக்க ஆட்சேபக் குறிப்புக்கள் அனுப்பினாலே போதும் என்பது பாரத சர்க்காரின் சித்தாந்தம். பழைய ஆக்ரமிப்பைச் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் லிக்கிம் பகுதியில் சீனா மேலும் உட்புகுந்ததாக அறிந்ததும் பாரத அரசினர் படாடோபமான ஆட்சேபக் குறிப்பை அனுப்பி வைத்திருக்கிறார்கள். பகைவனின் ஆயுதத்துக்கு முன் பொருளற்ற சொற்களை ஆயுதமாக உபயோகித்துப் பெருமை கொள்கிறார்கள். மேல்நாடுகளுடன் நாம் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்வதொன்றே சீனாவின் விஸ்தரிப்பைத் தடுத்து நிறுத்தும் காப்பு என்பதை ஆட்சியாளர் புரிந்து கொள்ளாததால் மேன்மேலும் நாட்டை இழந்து மானபங்கமடைந்து வருகிறோம். ஆண்டவன் இந்நாட்டிடம் சிறிதேனும் கருணை கொண்டு ஏதேனும் அற்புதம் விளைவித்தால் அன்றி காலத்தின் தேவையைப் பாரத சர்க்கார் உணருமென நமக்குத் தோன்றவில்லை.

சுதந்திரம் தெரியாதவர் செய்தி மந்திரியா?

ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் தனி நபர் சுதந்திரத்தைக் காப்பது பற்றிப் பேசுவது விசித்திரம். 'பத்திரிகைகள் தமது கருத்தை வெளியிடச் சுதந்திரம் பெற்றிருக்க வேண்டியது அவசியம்தான். ஆனாலும் இதனால் தேசிய நலன்களுக்கும், தனி நபர் சுதந்திரத்துக்கும் ஊறு நேருமாயின் எழுத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தத்தான் வேண்டும்' என்று ஸ்ரீமதி இந்திரா அம்மையார் சமீபத்தில் மொழிந்திருக்கிறார். தனி நபர் சுதந்திரத்தைப் பறிப்பதற்குப் பத்திரிகைகளுக்குச் சக்தி இருப்பதாக நாம் எண்ணவில்லை. அப்படி ஏதேனும் சக்தி இருக்குமாயின், அது மக்களின் சுதந்திரத்தை ஆளும் கட்சி பறித்து வருவதைக் கண்டும் காணாதது போல் சில பத்திரிகைகள் மழுப்புவதோடு, அல்லது அப்போக்கை வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு பாராட்டுவதோடு முடிந்து போகிறது. எனவே, தேசிய நலன் என்றும், தனிநபர் சுதந்திரம் என்றும் செய்தி மந்திரி குறிப்பிடுவது காங்கிரஸ் கட்சி நலனையும் காங்கிரஸ் கட்சி அங்கத்தினரின் நலனையும்தான் என்றே கொள்ளவேண்டும்.

சொந்த நலன்களைத் தேசிய நலனாகக் குழப்பிக் கொள்வதில் செய்தி மந்திரி

எவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கிறார் என் பதற்கு இன்னொர் உதாரணம்: காலஞ் சென்ற தம் தகப்பனார் அவர்களின் பெரு மையைக் குறைவுபடுத்திச் சில பத்திரி கைகள் எழுதுவதாகக் கூறி அவற்றை ஸ்ரீமதி இந்திரா பலமாகக் கண்டித்திருக் கிறார். நேரு அவர்களின் அருமைப் புதல்வியாகிய இந்திரா அம்மைக்குத் தமது தந்தையைக் கண்டித்து எழுதப் படுவதைப் படிக்க வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் நேருஜியை இன்று யாரேனும் தாக்கி எழுதினால் அது அவரது சொந்த வாழ்வையும் பாசங் களையும் குறித்தல்ல. நேருஜியின் பல கொள்கைகள் நாட்டுக்கு உகந்தவை யல்ல என்று சில பத்திரிகைகள் கருதுவ தால், 'நேரு மார்க்கத்திலேயே நாங் களும் செல்வோம்' என்று இன்றைய ஆட்சியாளர் முழக்கும்போது அந்த மார்க்கத்திலுள்ள குற்றம் குறைகளை எடுத்துக் கூறுகின்றன. நேருஜியின் கொள்கையைப் பின்பற்றுவதாலும், அவர் பெயரில் புதிய தவறுகள் செய்வ தாலும், அவர் பெயரைப் பயன்படுத்தி மக்கள் ஆதரவைப்பெற முயல்வதாலும், தேசிய நலன்களை முன்னிட்டு அதற்கு எதிர்ப்பு அளித்தேயாக வேண்டும் என்பதைச் சில பத்திரிகைகள் உணர்ந்து கடமையைச் செய்கின்றன.

மனச்சாட்சிப்படி நடக்க வேண்டியது தான் பத்திரிகைத் தருமம். மனச்சாட்சி யின் குரலை அமுக்கிவிட்டு அரசாங்கத் தின் கோஷ்டி கானத்தில் மட்டுமே பத்திரிகைகள் சேர்ந்து பாடவேண்டும், எதிர்க் கருத்தே இல்லாத ஹிரண்ய கசிபு ராஜ்யம்தான் வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஜனநாயகமல்ல.

சுதந்திரமான கருத்துக்கு மதிப்புத் தர நமது செய்தி மந்திரியம்மை அறிய வில்லையே என்று துயரப்படுகிறோம்.

தொழிலாளர் விழித்துக் கொண்டனர்

ஹைதராபாத்தில் மகாநாடு நடத் திய அகில இந்தியத் தொழிற்சங்கக் காங் கிரஸை ஆளும் கட்சிக்கு விரோத மானதென்று யாரும் கூறமாட்டார்கள். நகர்ப்புறச் சொத்துக்களுக்கும் உச்ச வரம்பு விதிக்க வேண்டும் , எல்லா நகரங்களிலும் இன்னும் பத்தாண்டு களுக்கு உணவு ரேஷனை அமுல் செய்ய வேண்டும் என்றெல்லாம் தொழிற் சங்கம் தீர்மானங்கள் நிறை வேற்றியிருப்பதே இதற்குச் சான்று. எனவே, இத்தொழிற்சங்கத்தின் தலைவர் ஸ்ரீ காசிநாத பாண்டே சர்க்காரின் தொழிற் கொள்கைகளில் முக்கியமான ஒன்றை வரவேற்க மறுக்கிறார் எனில் அவரது ஆட்சேபத்தை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சர்க்கார் எடுத்து நடத்தும் தொழில் களில் எத்தகைய ஊழல்கள் மலிந் துள்ளன என்பதையும், தொழிலாளர் அங்கு எவ்வித விசேஷச் சலுகையும் பெற்றிருக்கவில்லை என்பதையும் எடுத் துக்காட்டிய ஸ்ரீ பாண்டே அவர்கள், சர்க்கார் தொழிலில் தொழிலாளர்க ளுக்கு நம்பிக்கையில்லை என்று வியக்த மாகக் கூறியிருக்கிறார். தனியார் தொழி லைக் கொடுங்கோன்மையாக மதித்துச் சர்க்காரிடமே தங்கள் நியாயமான உரி மைகளைப் பெற முடியும் எனக் கருதும் தொழிலாளர்களுக்குச் சர்க்கார் தொழி லின் பலவீனங்களையும் குறைகளையும் யாருமே எடுத்துக் காட்டி உணர்த்த முடிந்ததில்லை. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் சர்க்கார் தொழில் நிறுவ னங்களில் அவர்கள் பெற்ற அநுபவமே இப்போது அவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறியிருக்கிறது. இது வரவேற்கத்தக்க விழிப்பாகும்.

மருந்தும் மந்திரியும்

தமிழக சுகாதார மந்திரி ஸ்ரீமதி ஜோதி அம்மாளின் புதல்விக்குக் குத்திய ஊசி மருந்து எதிர்பார்த்த நற்பயனை உண்டாக்குவதற்குப்பதிலாக ஜுரத்தை வளர்த்து விட்டிருக்கிறது. ஆராய்ந்து பார்த்ததில் மருந்து ஜுரத்தை விளை விக்கக் கூடியதுதான் என்று முடிவு காணப்பட்டது. இந்த மருந்தைத் தயாரித்தது கல்கத்தாவில் உள்ள ஒரு கம்பெனி. அவர்களுடைய சென்னை விநியோகஸ்தர்களிடமிருந்து அந்த மருந்தின் முழுக் கையிருப்பும் கைப் பற்றப்பட்டு விட்டது.

இது ஒரு மந்திரி வீட்டில் நடை பெற்றதால் இவ்வளவு சீக்கிரம் நட வடிக்கை எடுக்கப்பட்டது.







யாக நடந்தது. இவ்விழாவை டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் ஆரம்பித்து வைத்தார். ராஜாஜி, செ. பி. முதலியவர்கள் உரையாற்றினுர்கள்

★ ருஷ்யாவிலிருந்து வந்த கலைஞர் கோஷ்டியினரின் பாலே நடன நிகழ்ச்சிகள் சென்னை தேனும்பேட்டை எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியில் மூன்று நாட்கள் நடந்தன.



★ தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்கள் போட்டியில் ராஜாஜியின் அன்பளிப்பான தம்புராப் பரிசைக் குமாரி கே. கல்பகத்துக்கு விழாத் தலைவர் திரு சுப்பிரமணிய பிள்ளை அளிக்கிறார்.

★ சௌத் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் சங்கீத விழாவைச் சென்னை கவர்னர் திரு சந்திரா ரெட்டி ஆரம்பித்து வைத்தார். சங்கீத விழாவுக்குச் செம்மை வைத்தியநாத பாகவதர் தலைமை வகித்தார்.

★ முப்பத்தெட்டாவது சர்வப் பிரசாத மகாநாட்டுக்கு வந்திருந்த ரெவெரி அகாகானியன் பிரஸ் சென்டருக்கும் வருகை தந்தார்.

★ தமிழிசை விழாவைத் தொடங்கிவைத்த மந்திரி மன்றாடியார் அவர்கள் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளைக்கு 'இசைப் பேரறிஞர்' விருது வழங்கிக் கௌரவிக்கிறார்.

★ மூஸ்லிம் கல்விச் சங்கத்தின் வைர விழா டிசம்பர் 24-ந் தேதியிலிருந்து 30-ந் தேதிவரை ஜனுப் மஜீத் தலைமையில் விமரிசை





என்ன சேதி?

யோசனை சரியல்ல!

பற்பல பொருட்களுக்குப் பற்பல முனைகளில் பல விகிதங்களில் வரி வசூலிக்கப்படுவதால் கணக்கு வைத்துக் கொள்வதில் ஏற்படும் சிரமங்களை வியாபாரிகள் சுட்டிக் காட்டினர். இதற்கு மந்திரி ஸ்ரீ ஆர். வேங்கடராமன் கூறியுள்ள பரிகாரம் பரிதாபமாக இருக்கிறது. எல்லாப் பண்டங்களுக்கும் சகட்டுமேனியாக இரண்டு சதவிகித விற்பனை வரி விதித்துவிட்டால் சிரமம் தீர்ந்துவிடும் என்று யோசனை கூறுகிறார். கணக்கு வைத்துக் கொள்ளும் சிரமம் தீரலாம். ஆனால் வரிகொடுப்பவர்களின் கஷ்டம் அதிகமாகும். விற்பனை வரி கொடுப்பது வியாபாரிகள் அல்ல, பொது மக்கள். தற்போது ஆடம்பரப் பொருட்களாகக் கருதப்படுவனவற்றுக்கு அதிக வரி விகிதமும், பொதுமக்கள் அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் அத்தியாவசிய பண்டங்களுக்குக் குறைந்த வரி விகிதமும் விதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ வேங்கடராமன் அவர்களின் யோசனைப்படி ஆடம்பரப் பொருள்களின் வரி விகிதம் குறைந்து, ஏழை மக்கள் வாங்கும் பண்டங்களின் வரியும் - அதன் விளைவாக அவற்றின் விலையும் - உயரும். காங்கிரஸைத் தேர்ந்தெடுத்த குற்றத்துக்குத் தண்டனையாக மேலும் பளுவான வரியை மக்கள் தாங்க நேரிடும்.

வரி விகிதச் சிக்கல்களைக் குறைக்க வழி பல கட்டங்களில் வரிகளையே குறைப்பதுதான். பகாசுரப் பசி கொண்ட சர்க்கார் கஜானாவின் தீனி குறையாமலே வரி முறையை மாற்றப் பார்ப்பது மக்களுக்குத் தீங்காக முடியும்.

பரீட்சை முறையில் குறை

நிகழ்காலப் பரீட்சை முறையிலுள்ள பல குறைகளைச் சர்வ கலாசாலை மானியக் கமிஷன் கூறியுள்ளது. இவற்றில் முக்கியமாக நம் மனத்தை வருத்துவது விடைத் தாள்களைத் திருத்துவதில் ஒரு பொதுக் கொள்கை இல்லாமல், அந்தந்தப் பரீட்சாதிகாரியின் மனம் போனபடி தேர்வும் தோல்வியும் தரப்படுவதால் ஏராளமான மாணவர்கள் தோற்றுப் போகிறார்கள் என்று கண்டிருப்பதுதான். விடைத் தாளில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல: எந்த அளவுக்கு மாணவன் விஷயத்தைப் புரிந்துகொண்டிருக்கிறான், எந்த அளவுக்கு அதனைத் தெளிவாகக் கூற அறிந்திருக்கிறான், எந்த அளவுக்குப் புத்தகப் படிப்போடு தன் சுய புத்தியையும் உபயோகித்திருக்கிறான், அவனது ஞாபகசக்தி எவ்வளவு, கையெழுத்தின் தரமென்ன என்பது போல் பல விஷயங்களையும் கவனித்து ஒவ்வொன்றுக்குமாக மார்க் அளிக்க வேண்டும். தற்போது இவ்வாறு நடைபெறுவதால் ஒரேபோன்ற விடைத் தாள்களை இரு வேறு ஆசிரியர்கள் திருத்தும்போது சராசரியில் ஒரு விடைத் தாளுக்குப் பத்து மார்க் வித்தியாசப்படுகிறதாம். பொதுவாக இது மாணவன் தோல்வி பெறவே காரணமாக அமைகிறது எனத் தெரிகிறது. எனவே விடைத் தாள் திருத்துவதற்கான சில அடிப்படைகளை நிர்ணயிக்க வேண்டும்.

கேள்வித் தாள்கள் தயாரிப்பதற்கும் இதே போல் சில தரங்களை அமைத்துத் தரவேண்டும். நம்மை நம்பி வாழும் இளம் வாரிசுகளுக்குப் பரீட்சை முறையில் நீதி வழங்க ஏதேனும் செய்தே ஆக வேண்டும். மாறுதல் என்று சொல்லிக்கொண்டு குட்டையைக் குழப்பி விடாமல் தீர்க்காலோசனையுடன் புது வழிமுறைகளை ஆராய வேண்டும்.

ஆயுதம் பிடித்த கை!

ஆயுதத்தைப் பிடித்த கை சும்மாயிராது. காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கையில் ஏகாதிபத்திய விதிகள் ஒரு பேராயுதமாக உள்ளது. நெருக்கடி காலச் சட்டத்தின் கீழ் போதிய எதிர் வாதமும் விசாரணையுமின்றித் தண்டிக்கும் ஏகாதிபத்திய வாய்ப்புப் பெற்றுள்ள ஆட்சியாளருக்குச் சாமானியக் குற்றங்களையும் விசாரணையின்றித் தண்டித்துப் பார்ப்பதில் திருப்தி ஏற்பட்டு வருகிறது.

தரக் குறைவான பண்டங்களை விற்பவரைத் தண்டிக்கச் சாதாரணக் குற்றச் சட்டத்திலேயே இடமுண்டு. உணவு மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியமோ 'அரிசி மில்கள் தரக் குறைவான பண்டத்தை வெளியிட்டால், மில்காரர்களைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்போம்' என்று சமீபத்தில் கூறியிருக்கிறார். அரசாங்கத்தின் ஏகாதிபத்தியப் போக்குக்கு இது ஓர் அழுத்தமான எடுத்துக்காட்டு.

கந்தன் கருணை

10. விசுவரூபமும் வீராபிஷேகமும்

சிவபெருமானுக்கும் பார்வதி தேவியாருக்குமிடையே எழுந்தருளியிருந்த முருகக் கடவுள் தம் தம்பியரோடு பற்பல திருவிளையாடல்கள் செய்யத் திருவுளம் கொண்டருளினார்.

கந்தப் பெருமான் கழலிணைகளிலே தண்டையும் கழலும் சதங்கையும் ஒலித்தன. திருவரையிலே கிங்கிணி இசைத்தது. திருச்செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கின. இத்தகைய அலங்காரங்களுடன் கந்தன் தம் கருணையினால் திருவிளையாடல் புரிந்தார்.

இளம்பூரணனும் எம்பெருமான் சிறிது அசைந்து ஆடல் புரிகின்றபோது அப்பெருமானுடைய திருஅரையில் கட்டிய தங்கமணிகளாகிய கிண்கிணிகள் ''கல்'', ''கல்'' என்று அசைய, அந்த இன்னோசை பதினாலு உலகங்களிலும் பரவியது.

'உலகமுண்ட நாராயணரது நலம் புரியும் வலம்புரிச் சங்கத்தின் ஓசை அருகில் இருந்த கற்பகச் சோலையும் தடாகமும் மட்டுமே கேட்டன. மலைகள் பிளக்குமாறு திருவிளையாடல் புரியும் இச்சிறிய பெருந்தகையின் கிண்கிணியின் இனிய நாதம் ஈரேழு பதினாலு லோகங்களிலும் கேட்டது' என்று அருணகிரிப் பெருந்தகை அருளிச் செய்கின்றார்.

மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசையந்த
விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது.
வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி ஓசை பதினாலுலகமும் கேட்டதுவே

கந்தக் கடவுள் மன்றங்களிலும் குன்றங்களிலும் உலவுவார்; சோலைகள் ஆறுகள், கடல்கள், தடாகங்கள் தோறும் சென்று உலவுவார்; சிவத்தலந்தோறும் உலவுவார்; வடமொழி தென்



திருமுருக கிருபானந்தவாரியார்

மொழி கற்கும் கழகந்தோறும் கடிகை தோறும் உலவுவார்; மண்ணில் உலவு வார்; திக்குகளில் உலவுவார்; சந்திர சூரியர் முதலிய கிரகங்களும் நட்சத் திரங்களும் உள்ள இடங்களில் உலவு வார்; இந்திர லோகத்தில் உலவுவார்; பிரமலோகத்தில் உலவுவார்; நாராயண ரது உலகத்தில் உலவுவார்; சிவலோகத் தில் உலவுவார்; பிருதிவி அண்டங்கள் எங்கும் உலவுவார்; அப்பு அண்டங்க ளெங்கும் உலவுவார்; தேயு, வாயு அண் டங்களிலும் மற்றைப் புவனங்களிலும் உலவுவார்; ஆறுமுகங்கொண்டு பல ராய்த் திரிவார்; ஒரு முகங்கொண்டு ஒருவராய்த் திரிவார்; வேதியராகத் திரிவார்; வீரராயும், முனிவராயும் திரி வார்; திருவடிகளால் நடந்து செல்வார்; குதிரை, யானை, யாளி, தேர், விமானம் ஆகியவற்றின் மீதும் செல்லு வார்; மேகத்தின் மீது செல்லுவார்; மணியசைப்பார்; வீணை வாசிப்பார்; குழல் ஊதுவார்; கல்லையும் கனிய வைக்கும் இசை பாடிக் கூத்தாடுவார்.

மன்றதோ றலவுமலர்
வாவிதோ றலவுந்
துன்றசீர தென்றல்தவழ்
சோலைதோ றலவும்
என்றமுல வாதுலவும்
யாறதோ றலவும்
குன்றதோ றலவுமுறை
யுங்குமர வேளே

இவ்வாறாக, கந்தக் கடவுளின் திருவிளையாடல்கள் நாள்தோறும் பெரு கின. கந்தக் கடவுளின் திருவிளையாடல் களைக் கண்டு வியந்த உமாதேவியார், சிவபெருமானை வணங்கி, "எம்பெரு மானே! நம் குமரன் இச்சிறு குழவிப் பருவத்தே செய்யும் திருவிளையாடல்கள் அதியற்புதமாக இருக்கின்றன. இதனை எண்ணிப் பார்க்கின்றபொழுது, மாயை யில் அவன் தங்களுக்கு ஒப்பானவன் எனக் கருதுகிறேன்; அவனுடைய பெரு மையைத் திருவாய் மலர்ந்தருள வேண் டும்" என்று ஒன்றும் அறியாதவர் போல் வேண்டிக் கொண்டார்.

"உமையே! எல்லா உயிர்களும் இவ்வுண்மையை அறிந்து உய்யும் பொருட்டு உன் குமரனது இயல்பை நீ வினவினாய். நாம் அதனை மகிழ்ச்சியுடன் கூறுவோம்.

"தாரகப் பிரம்மமாயுள்ள நமது ஆறெழுத்தும் ஒன்றாகி உன் குமரனு டைய மந்திரமாகிய சடக்ஷரமாயிற்று. கந்தக் கடவுள் நமது சத்தியே; அவ னுக்கும் நமக்கும் வேற்றுமை யில்லை. அவன் நம்மைப் போல் யாண்டும் நீக்க மற நிறைந்திருக்கிறான். அவன் பாலன் போலத் தோன்றினாலும் எல்லாவற்றை யும் உணர்ந்த முற்றறிவினன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத் தையும், ஞானத்தையும் முக்தியையும் கொடுக்க வல்லவன்.

"ஆதலின் நமது சத்தி
அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போற்
பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்;
யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க்கு அருளவல்லான்."

இவ்வுலக இன்பமனைத்தும் தருப வள் உமையாகிய அன்னை. மறுவுலக இன்பம் தருபவன் சிவமாகிய அப்பன். குமாரனே இம்மை, மறுமை இரண்டை யும் தருவான் என்கிறார் அருணகிரி நாதர். இரு பயனும் தருவது அவனது சடக்ஷர மந்திரம் என்பதையும் உணர்த்துகிறார்.



''வசன மிக வேற்றி — மறவாதே
மனது துயர் ஆற்றில் — உழலாதே
இசை பயில் சடாட்சர — மதாலே
இகபர சௌபாக்கியம் — அருள்வாயே''

சிவபெருமான் உமையம்மையிடம் மேலும் கூறுவார்: ''பார்வதி தேவி! யான் ரூபமற்ற நிட்களன்; நீ அழிவிலா சத்தி. படைத்தல், காத்தல், அழித்தல், இம்மூன்றும் அடங்கும் மாயா லீலையான திரோபவம், இந்நான்கினின்றும் பக்தரை விடுவிக்கும் அநுக்கிரகம் ஆகிய ஐந்தொழிற்கு அதிபனாக, ஐந்து முகமுடைய சதாசிவனாக யாம் இருக்கிறோம். நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி. குமரன் உனது ஸ்வரூபத்தையும் எனது ஸ்வரூபத்தையும் ஒருங்கே கொண்டுள்ளான். ஆதலால், அவன் ஆறுமுகன் எனப்படுகின்றனன்; அவன் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரிகின்றனன்.

''பிரியமுள்ள கல்யாணி! இச்சகத்திடை வாழும் தேவர், மனிதர், மிருகம் முதலிய உயிர்களிடத்து வீரியம், செல்வம், அழகு, கல்வி, அறிவு என்பவற்றுள் எத்துணை யெத்துணை உள்ளனவோ, அவையனைத்தும் குமரனுடைய மகிமையே. முருகன் பெருமையை உனக்குச் சுருங்கச் சொன்னேன்; விரித்துச் சொல்வதாயிருந்தால் நூறு கோடி வருஷத்துக்கும் முடிவு பெறாது.''

''யத்ர யத்ர ஜகத்யஸ்மிந் தேஜஸ்வியம்
நாரத்ஜே!
வீர்யம் ஸ்ரீரத் காந்தீர் வித்யா
ஞானதிகம் ப்ரியே!
தத் ஸர்வ மஸ்ய கல்யாணி விபூதிர்
நீர்க்தம்!

என்று கூறியருளினார். உமாதேவியார் தம் அருமைத் திருக்குமாரருடைய பெருமையைக் கேட்டுத் திருவுளம் மகிழ்ந்து பூரித்தார்.

முருகப் பெருமான் உலகெங்கும் சென்று அரிய திருவிளையாடல் புரிந்தார். மலைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து சேர்ப்பார்; பின்னர் அம்மலைகளைத் தலைகீழாகப் பூமியில் நிறுத்துவார். ஏழு கடல்களையும் ஒன்றாக்குவார். சக்ரவாளகிரியைப் பாதாளத்தில் புகுத்துவார். கங்கை நதியை ஓட விடாமல் அடைப்பார். பாதாள லோகத்தில் உள்ள அஷ்ட நாகங்களையும் பிடித்து மேருமலை முதலிய பெரிய மலைகளில் பூட்டித் தேராக உருட்டிச் செல்வார். திசைகளில் உள்ள ஐராவதம் முதலிய எட்டு யானைகளையும் கொண்டு வந்து ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். கருடனையும் வாசுகியையும் பிடித்து ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். சூரியனைச் சந்திர மண்டலத்திலும், சந்திரனைச் சூரிய மண்டலத்திலும் சேர்ப்பார். மேகங்களுக்குள் இருந்த மின்னல்களையும் இடிகளையும் பறித்து மாலையாக்கித் தரித்துக் கொள்வார். ஆகாயத்தில் செல்லும் விற்கள் இரண்டையும் பிடித்து, கிரகங்கள் நட்சத்திரங்கள் இவற்றை உருண்டைகளாக்கி தேவர்களது தலை, மார்பு, கழுத்து, முகம் இவைகளைக் குறியாகக் கொண்டு எய்து வில் வன்மையைக் காட்டுவார். சராசரர்கட்கும், நரர்கட்கும் யாதொரு தீங்கும் நேராத வண்ணம் குமரக் கடவுள் திருவிளையாடல்களைப் புரிந்தார்.

ஆறுமுகப் பெருமானின் திருவுருவத்தைக் காணாமல் திருவிளையாடல்களாகிய பெரும் செயலை மட்டும் உணர்ந்த தேவர், வியப்புற்று, மேரு மலையிலிருந்த தேவேந்திரனிடத்து இவ்வதிசயங்களைத் தெரிவித்தனர். ''நாம் எல்லோரும் சென்று பிரம்மதேவரிடம் கேட்போம்'' என்றான் இந்திரன். தேவர்கள் உண்மையான தவம் புரிந்தவர்களாதலால் அவர்கள் கண்களுக்குத் தெரியும்வண்ணம் ஆறுமுகக் கடவுள் ஒரு திருமுகமுடைய பாலராக வந்து அங்கு தோன்றினார்.

தாம் முருகன் என்பதை உணர்த்தாமலே மேரு மலையை அசைத்து அதன் கொடுமுடிகளைத் தாமரை இதழ்களைக் கொய்வது போல் கொய்து வீசினார் எம்பிரான். இந்திரன் முதலிய இமையவர்கள், 'மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் மாறுபடச் செய்தவன் இவனே. இவனது ஆற்றல் அசுரர்களின் ஆற்றலைக் காட்டிலும் கொடியது. இவனைப் பாலன் என்று கருதாமல் போர் செய்து வெல்வோம்' என்று தீர்மானித்தார்கள். யாருக்காகத் தவமிருந்து பிரார்த்தித்தனரோ அவனையே எதிர்க்க முற்பட்டனர். இப்படித்தான் நாமும் ஆண்டவன் செயல் எது என்று அறியாமல் யார் யாரிடமோ பகை கொள்கிறோம். நமக்கு அவன் போதனையாக அளிக்கும் இன்னல்களைத் தீங்காக எண்ணி வருந்துகிறோம்.

அக்கினி மலையைச் சூழும் கொசுக்களைப் போல் தேவர்கள் முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டனர். இந்திரன் போர்க் கோலம் பூண்டு தன் வெள்ளை யானை மீது ஏறி, குலிசம், வாள், வில், வேல் என்னும் ஆயுதங்களைத் தாங்கிச் சென்று முருகக் கடவு



னோடு போர் செய்யத் தொடங்கினன். தேவர்களுக்காக அசுரருடன் போராடவே தோன்றிய ஐயனும் தேவருடனேயே போராட எண்ணம் கொண்டார். இந்திரன் ஏவிய ஆயுதங்கள் பூக்களைப் போல் முருகக் கடவுள் மீது விழுந்தன. அதனைக் கண்ட இந்திரன் வஜ்ராயுதத்தை எய்து ஆரவாரித்தான். அது முருகப்பெருமான் மீது பட்டு மணல் போலப் பொடியாயிற்று. அவனது ஐராவதம் கர்ஜித்துக் கொண்டு முருகன் திருமுன் சென்றது. அதனைக் கண்ட கந்தப் பெருமான், சங்கல்ப மாத்திரத்தில் ஒரு வில்லையும் பல கணைகளையும் படைத்து, கர்ஜித்து வந்த யானை மீது ஒரு கணையை விடுத்தார். அது யானையின் நெற்றியில் புகுந்தது. யானை புலம்பி வீழ்ந்து மடிந்தது. ஐராவதம் வீழ்ந்து மடிந்ததைக் கண்ட இந்திரன் பெரிதும் வருந்திச் சினமே மிகுந்தான். அவன் கோபத்துடன் தனது வில்லை வளைக்க இந்திரனின் தோள் மீது முருகப் பெருமான் ஒரு கணையை விடுத்தார். அக்கணை பட்டதும் இந்திரன் தனது ஆற்றலை இழந்தான். ஒருவாறு வேலை எம்பெருமான் மீது விடுத்தான். அது சிறு புல்லைப் போல் சென்று அழிந்தது. இந்திரன் வீழ்ந்தான். வருணன்மீது முருகப் பெருமான் நான்கு அம்புகளை விடுத்தார்; வருணன் இறந்தான். இயமன் மீது ஐந்து அம்புகளை விடுத்தார்; இயமன் இறந்தான். சந்திரன் இறந்தான். வாயு, அக்கினி யாவரையும் வதம் செய்தார். எஞ்சிய தேவர்கள், ''இவன் ஒருவனே எல்லோரையும் கொன்று விடுவான்'' என்று மனம் கலங்கி ஓடி ஒளிந்தார்கள். ஆறுமுகப் பெருமான் போர்க்களத்தில் சர்வசங்கார காலத்துக் காலாக்கினி ருத்திரரைப் போலத் தனித்து நின்று உலவினார்.

இவற்றை யெல்லாம் கண்ட நாரத முனிவர், கருணையின் மிகுதியினால் தேவகுருவாகிய வியாழ பகவானிடம் ஓடினார்; நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறினார். அது கேட்ட தேவகுரு, போர்க்களத்துக்கு ஓடினார். அங்கே மாண்டு கிடந்த தேவர்களைக் கண்டு மனங் கலங்கினார். அற்புதத் திருவிளையாடல்கள் புரிந்து கொண்டிருந்த கந்தவேளையடைந்து, திருவடித் தாமரை மீது வீழ்ந்து வணங்கினார்.

''எம்பெருமானே! தாரகன், சிங்கமுகன், சூரன் ஆகிய அசுரர்களின் தொல்லையால் இந்திரன் பெரும் துன்பமுற்று, தனது பொன்னுலகத்தையும் விட்டு இம்மேரு மலையில் மறைந்து வசித்திருந்தான். தேவரீரது கருணையினால் அசுரர்களை யெல்லாம் அழிக்க அவன் எண்ணியிருந்தான். அதற்காகப் பலகாலம் அருந்தவம் செய்து வாடினான். துயரெல்லாம் நீங்கியதென்று சரவணப் பொய்கையில் தேவரீரது திருஅவதாரத்தைக் கண்டு உளம் பூரித்தான். தேவரீருக்குத் தொண்டு செய்யவே விரும்பிய இந்திரன் தாங்கள் திருவிளையாடல் புரிவதை அறிந்திலன். திருமால் முதலியோர் தேடிக் காணாத சிவபெருமானும், உமாதேவியாரும், அவர் இருவருள் பெற்றோர் சிலருமன்றித் தேவரீரை யாரே அறிய முடியும்? சிற்றறிவு காரணமாக, தங்களை மதியாது போர் செய்தான். மற்ற தேவர்களும் தங்களை எதிர்த்து மாண்டனர். தவறு செய்த குழந்தைகளைத் தாய் தந்தையரே தண்டிப்பது நீதியாகுமோ? அருட்பெருங் கடலே! ஆற்றல் மிக்க அசுரர்களை அடியோடு ஒழித்தருளி, தங்கள் திருவடியை மறவாத தேவர்களுடைய பிழையைப் பொறுத்து அவர்கள் அறிவு பெற்று எழுமாறு திருவருள் செய்ய வேண்டும்'' என்று தேவகுரு இறைஞ்சினார்.

முருகப் பெருமான் திருமுறுவல் செய்து, இந்திரன் முதலிய தேவர்கள் வாகனங்களோடும், ஆயுதங்களோடும் எழும் வண்ணம் திருவுளம் கொண்டருளினார். உடனே தேவர்கள் யாவரும் உயிர் பெற்றெழுந்து மெய்யறிவு பெற்றனர். முருகனை முருகன் என அறிந்து மனமுருகினர். செய்த பிழைக்கு மனம் கலங்கி எம்பிரானுடைய சரணக் கமலங்களில் வீழ்ந்து பணிந்து, மொழி குழறி மெய் விதிர்த்துத் துதித்தனர்.

''கந்தநம: ஐந்துமுகர் தந்தமுரு
கேசநம: கங்கை உமைதன்
மைந்தநம: பன்னிரு புயத்தநம:
நீபமலர் மாலை புனையும்
தந்தைநம: ஆறுமுக ஆத்தநம:
சோதிநம: தற்ப ரமதாம்
எந்தைநம: என்றுமிளை யோய்நம:
குமாரநம என்று தொழுதார்''

தொழுது நின்ற தேவர்களுக்குக் கந்தவேள் திருவருள் செய்து அச்சமும் துன்பமும் நீக்கினார். தேவர்களும்,

"முன்பு தக்கன் வேள்வி செய்த போது சிவபெருமானை இகழ்ந்தான். அந்த வேள்வியில் தரப்பட்ட பாகத்தை அடியேங்கள் உண்டோம். அதனால் ஏற்பட்ட பாதகம் இன்னும் தொடருகிறது. அத்துடன் தேவரீருடன் போர் செய்ய முற்பட்ட பாதகமும் சேர்ந்தது. பரம பிதாவே! பரம கருணையால் அடியேங்களைத் தண்டித்து அப்பாவங்களைப் போக்கியருளினீர். தங்களுக்கு நாங்கள் என்றும் அடிமைகள். இவ்வாறு கூறுவதும் தவறு! ஏனெனில் சிறுவர்கள் தங்களைத் தங்கள் தாய் தந்தையருக்குத் தருவது என்பதும் தகுதியான செயலல்லவே" என்றனர்.

"நம்மைச் சிறுவன் என்று நினைந்து நீங்கள் போர் புரிந்தீர்கள். நமது வன்மையையும் பெருமையையும் இன்னும் நீங்கள் உணரும் வண்ணம் காட்டுவோம்" என்று கூறினார் சுவாமி. எதற்காக இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்தார்? பல கோடி அசுரர்களையும் தம்மால் மாய்க்க முடியும் என்ற நம்பிக்கையையும், ஆறுதலையும் தேவர்க்கு ஊட்டவே இவ்விதம் செய்தருளினார்.

இந்நேரம் புரிந்ததற்கும் மேலாகப் பேரற்புதம் புரிய எண்ணி அற்புதக் கோலம்கொண்டார் ஐயன். விசுவமுழுவதும் தம் வடிவான வடிவேலன், எட்டுத் திக்குகளும், பதினாறு உலகங்களும், எட்டு மலைகளும், ஏழு கடல்களும், புறக் கடலும், சக்ரவாள கிரியும், வெவ்வேறண்ட நிரைகளும், பிரம - விஷ்ணு - உருத்திரர்களும் அடங்கிய விசுவரூபமெடுத்தார்.

எண்டிசையும் ஈரேழு நிரத்துலகும்
எண்கிரியும் ஏழு கடலுந்
தெண்டிரையும் நேமிவரை யும்பிறவும்
வேறுதிசை பாகியவ சீர்
அண்டநிரை யானவும் அனைத்துயிரும்
எப்பொருளு மாகி அவனும்
விண்டுமா லுஞ்சேரிய வோர்உருவு
கொண்டனன் விறற் குமரனே

முருகப் பெருமான் விசுவரூபம் எடுத்துத் திவ்வியத் திரு தரிசனம் தந்தருளியபோது ஏழு பாதாள லோகங்களும் சுவாமியின் திருவடியில் இருந்தன. ஏழு தீவுகளின் புடவி கணைக்காலில் காணப்பட்டன. ஏழு கடல்களும் உடுத்த உடையில் காணப்பட்டன. திசைகள் புயங்களில் தெரிந்தன. ஆகாயம் நாபியில் அமைந்தது. தியுவென்னும் சுவர்க்கம் சென்னியிலும், சந்திரன் சூரியன் அக்கினி என்பன அழகிய மூன்று கண்களிலும் பொருந்தின. மேகங்கள் கேசங்களிலும், நட்சத்திரங்கள் அக்கேசங்களிலிருந்த அலங்கார மலர்களிலும் விளங்கின. சிவ பரம்பொருள் ஆன்மாவிலும், சிவசக்தியாகிய கௌரி மதியிலும், விஷ்ணு இடப் பாரிசத்திலும், பிரம தேவர் வலப் பாரிசத்திலும் காணப்பட்டனர். சரஸ்வதி வேத மணம் கமழும் வாக்கிலும் இலட்சுமி இருநிலையிலும் காணப்பட்டனர். பிராணன் முதலிய பத்து வாயுக்கள் வாயு நிலைகளிலும், காலாக்கினி ருத்திரன் சீற்ற நிலையிலும், அக்கினி தேவன் சாடராக்கினியிலும், அளவற்ற மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓஷதியனைத்தும் உரோமங்களிலும் பொலிந்தன. அந்த உரோமங்களில் நுண்ணிய கிருமிகளைப் போல் அண்டகோடிகளெல்லாம் காணப்பட்டனவாம்.

பேரொளி வாய்ந்த பேருருவத்தைத் தரிசித்த தேவர்களது விழிகள் பார்வையற்றுப் போய்விட்டன. சுரர்களாகிய பிரம, விஷ்ணுக்கள் முதலிய தேவ சிரேஷ்டர்கள் கந்தக் கடவுளது அளவிலாத தேஜோ மண்டலத்தில் ஆயிரத்தில் ஓர் அம்ச அளவையே அவன் அருளால் அறிய முடிந்தது.

தநஸ்தே விபுதேந்த்ராத்யா ப்ரஹ்ம
விஷ்ணவாதயஸ்ஸுரா|
தத்தேஜோ மண்டலஸ்யைதே
ஸஹஸ்ராம் சமலோகயந்||

தேவர்கள் வேத வாக்கியங்களால் எண்ணிலாத ஸ்தோத்திரங்களைச் செய்து "எம்பெருமானே! அடியேங்கள் தேவரீரது விசுவரூபத்தை முற்றும் தரிசிக்கும் வண்ணம் எங்களுக்கு ஆற்றல் தந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். கருணைக் கடலாகிய குமாரக் கடவுள் திருவுளம் இரங்கி அவர்களுக்குத் திவ்விய நேத்திரங்களைக் கொடுத்தார். (கண்ணபெருமான் கலித் தொடக்கத்தில் அர்ஜுனனுக்கு விசுவரூப தரிசனம் தந்தபோதும் அதனைக் காண திவ்விய நேத்திரம் நல்கினார்.) அநந்தகோடி சூரியர்கள் திரண்டாற் போலப் பேரொளி வீசி நின்ற விசுவரூபத்தை அடி முதல் முடி வரையும் தேவர்கள் தரிசித்து, ஆனந்த பரவசம் கொண்டு வணங்கி நின்றார்கள்.

"எம்பெருமானே! பிருதிவியண்டம் முதலிய அண்டங்களும், ஆங்குள்ள தேவர்களும், உயிர்ப் பொருள்களும், பிரமன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூம்மூர்த்திகளும், தேவரீரது திருமேனியில் இலங்கக் கண்டோம். அகிலம் எங்கும் இருப்பது தேவரீரது திருமேனிதான் என்பதைப் பெருங்கருணையுடன் தாமே அறிவித்ததால் பிரத்தியட்சமாக அறிந்து கொண்டோம். அருவமும் உருவமு

மாகிய தேவரீரது திருவருளைப் பெற்றுப் பேருருவத்தின் அடியையும் முடியையும் எங்களைப் போலக் கண்டவர் வேறு யார் உளர்? தங்களின் முழுப் பெரும் திருவுருவத்தைத் தரிசித்ததன் மூலம் இனி நாங்கள் பிறவித் துன்பமடையாது முத்தியின்பம் அடைவோம்'' என்று தேவர்கள் மகிழ்ந்து கூறினர்.

முருகப் பெருமான் தமது விசுவ ரூபத்தை மறைத்து, ஆறு முகங்களுடன் முன்னைய வடிவத்தில் காட்சி தந்தார். இந்திரன் முருகக் கடவுளை வணங்கித் துதித்து, ''கருணாமூர்த்தியே! அடியேனும் தேவர்களும் தொண்டு செய்ய விண்ணுலகத்தைத் தேவரீரே அரசு செய்து சூராதியரை அழிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

'தம்மை வழிபடும் அடியவர்க்கு இகம், பரம், வீடு என்னும் முத்திற நலன்களையும் கொடுத்தருளும் கருணைக் கடலாகிய ஆறுமுகக் கடவுளுக்கு இந்திரன் தனது அரசைக் கொடுப்பதாகக் கூறியது, அக்கினிதேவனுக்கு ஒருவன் தீபம் கொடுக்கிறேன் என்று கூறியதைப் போன்றிருந்தது!' என்கிறார் கச்சியப்பர்.

இகமொடு பரமும் வீடும்
ஏத்தினர்க் குதவுமுகன்
அகனமர் அருளால் நல்கும்
அறுமுகத் தவற்குத் தன்சீர்
மகபதி யளிப்பான் சொற்ற
வாசகம் கடரோன் தங்கீப்
பகவனுக் கொருவன் நல்கப்
பராவிய போலு மாதோ

கந்தப் பெருமான் இந்திரனை நோக்கி அருளுடன், ''நீ நமக்குத் தந்த அரசை நாம் உனக்கே இருப்பித் தந்தோம். நீங்கள் சேனைகள். நாமே சேனைகளுக்குச் சேனாதிபதியாகி அசுரர் யாவரையும் வெல்லுவோம். வருந்தாதிர்கள்'' என்று கூறி அருள் செய்தார். தேவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

''எம்பெருமானே! இந்த அண்டத்து மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கள் முதலியன வெல்லாம் இந்நாளில் தேவரீர் திருவிளையாடலால் முறை பிறழ்ந்தன. அவைகளை யெல்லாம் முன்பு போல நிறுவியருள வேண்டும்'' என்று இந்திரன் வேண்டிக் கொண்டான். எம்பெருமான் இளநகை புரிந்து, ''நம்மாலே முறை பிறழ்ந்தன எல்லாம் பண்டைய நிலையை அடையக் கடைவன்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே அவையெல்லாம் முன்னை நிலையை அடைந்தன.

இந்திரன் கந்தக் கடவுளிடம், ''மூவர் தேவாதிகள் தம்பிரானே! வேதமுடிவிலே விளங்குகின்ற தங்கள் திருவடிகளைப் பூசித்து வழிபட விரும்புகின்றோம். அதற்குத் திருவருள் புரிய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். ஐயன் இசைந்தார். தேவர்கள் பின்தொடர மேரு மலையிலிருந்து புறப்பட்டுத் திருக்கயிலை மலைக்கு அணித்தாயுள்ள ஒரு மலையை அடைந்தார். அங்கு இந்திரன் தேவதச்சனைக் கொண்டு நவமணிகள் பதித்த ஒரு செம்பொன் ஆலயமும், அதனுள் ஒப்பற்ற அரியணையும் அமைத்தான். தேவர்கள் திருமஞ்சனம் சந்தனம், நறுமலர், தூபம், தீபம், நிவேதனப் பொருள்கள் முதலியவற்றைக் கொண்டு வந்தனர். கோயிலினுள் அமைந்திருந்த அரியணையில் முருகக் கடவுள் எழுந்தருளினார். இந்திரனும் மாலயனாதி தேவர்களும் ''ஞானநாயகரே! நாங்கள் எல்லாரும் உமது சேனைகள். தாங்கள் எமக்குச்




சேனாதிபதியாகுக'' என்று கூறி ஆகாய கங்கையால் திருமஞ்சனம் செய்து அர்ச்சித்துப் போற்றி வழிபட்டார்கள். தேவசேனாதிபதியாக முடிசூட்டினார்கள்.


ஆன காலை அமரர்கள் வாசவன்
ஞான நாயக! நாங்கள் உனக்கோரு
தானை யாரும்! தலைவனை நீயெனு
வான நீர்தந்து மஞ்சனம் ஆட்டினர்

தேவசேனாதிபதியாகப் பட்டம் சூடிய பெருமானை ''தேவ தேவ தேவாதி தேவப் பெருமானே'' என்று வாய் நிறைய வாழ்த்துவார் அருணகிரிநாதர்.

கந்தக் கடவுளைத் தேவர்கள் பூசித்தற்கு அவர் எழுந்தருளிய அம்மலை 'கந்த வெற்பு' எனப் பெயர் பெற்றது. முருகப் பெருமான் கந்த வெற்பை நீங்கித் திருக் கயிலை அடைந்தார். இந்திரனும் தேவர்களும் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள். திருக் கயிலையில் இலக்கத்தொன்பது வீரர்களும், பூதர்களும் சேவிக்க முருகப் பெருமான் எழுந்தருளியிருந்தார். (தொடரும்)

டிவிஎஸ் ஒவ்வொரு நாளும்





3 பாடிகள் உற்பத்தி செய்கிறார்கள்

பல பஸ் சொந்தக்காரர்கள் டிவிஎஸ் ஸிடம் பாடி கட்டுவதையே விரும்புகின்றனர். விஷயமும் புரிந்தவர்கள்; சிக்கனத்தில் ஆற்றல் உடையவர்கள். பெரிய ஸ்தாபனத்தின் சிறந்த நன்மைகளை அவர்கள் அறிவார்கள். டிவிஎஸ் போன்ற பெரிய, திட்டமிட்டு வேலை செய்யும் ஸ்தாபனம் மட்டும்தான், சிறந்த, நவீன முறைகளில் பாடி கட்டுவதற்கு வேண்டிய விலை உயர்ந்த யந்திரங்களையும், சிறந்த நிபுணர்களையும் பராமரிக்க முடியும்.

பிரயாணிகள் சுகம்

நீண்ட தூரப் பிரயாணத்தில் ஏற்படும் களைப்பைப் போக்கும் வழிகளைக் கண்டுபிடிக்க டிவிஎஸ் நிபுணர்கள் இடைவிடாது இரவும் பகலும் ஆராய்கிறார்கள். உறுதியான டிவிஎஸ் பாடிகள் குலுங்காது, சத்தமிடாது. தொந்தரவுகளை நீக்கும். 'அசையும் அமைப்பு'ள்ள ஆசனங்கள், முதுகுவலியூட்டாமல் சுகம் அளிக்கும்.

அனுபவமுள்ள நிபுணர்கள்

டிவிஎஸ் வில் பஸ் பாடி கட்டும் வேலையை முதலில் டிசைன் எஞ்சினியர்கள் தயாரிக்கிறார்கள். போக்குவரத்துப் பிரச்னைகளைக் கவனத்துடன் ஆராய்வதால், அபிவிருத்தி ஏற்படுகிறது. சிறப்பாக அமைக்கப் பெற்றுள்ள டிரைவர் ஆசனம் ஓர் உதாரணம். டிரைவர், தனக்கு முன்புறத்திலும், பக்க வசங்களிலும் அதிகபட்சம் பார்க்கலாம். ஆனால் அதே சமயத்தில் டிரைவரின் உடல் நலனை பாதிக்கும் குளிர்காற்று, தூசி முதலியவற்றிலிருந்து டிரைவரைப் பாதுகாக்கிறது.

விஞ்ஞான ரீதியில் பரிசோதனை

பரிசோதிப்பதால், பாடியின் உறுதியிலும் உண்டான உழைப்பு நிச்சயம். டிவிஎஸ் கட்டும் பாடிகள் இலேசானவை; ஆனால் உறுதியானவை. எண்ணெய்ச் செலவைக் குறைக்க இலேசு; டயர் தேய்மானமும் குறைவு; காடு முரடான சாலைகளில் குலுக்காதிருக்க உறுதி.

தேவைக்கேற்ற பாடி

தேவைக்கேற்ற பாடிகள் கட்டுகிறோம். முழு உலோக எக்ஸ்பிரஸ் வான்கள்; எக்ஸ்போர்ட் டைப் பஸ்; முழு அலுமினிய பஸ்; மூன்றிலும் மூடிய லாரி; பிக் அப் வான்; பேட் டெலிவரி வான்; அம்புலன்ஸ்; ஸ்கூல் பஸ், உல்லாச கோச், முதலியன. அசோக் லேலண்டு கமெட், பெட்போர்டு, டாட்டா, பார்கோ, டாட்டா மெர்சிடிஸ் பென்ஸ், வில்லீஸ் ஜீப் ஆகிய எந்த செசிஸ் மீதும் பாடி கட்டுகிறோம்.



சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை (டிவிஎஸ் ஸ்தாபனம்)



பாரதத்தில் பட விழா

சி. ஆர். ஏகாம்பரம்

பாரதத்தின் மூன்றாவது சர்வதேச திரைப்பட விழா புதுடில்லியில் ஜனவரி எட்டாம் தேதி தொடங்கும். இரண்டு வாரங்களுக்கு நடைபெறவிருக்கும் இது பல வழிகளில் முதன்மையானதும் தனிச் சிறப்பு உடையதுமாகும். விழாவில் கலந்துகொள்ளும் திரைப்படங்களுக்கான போட்டி இதற்குத் தனித் தன்மை அளிக்கிறது.

1961ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சர்வதேசத் திரைப்பட விழாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த படங்கள் திரையிடப்பட்டதோடு விழா இனிது முடிந்தது. போட்டியோ, ஜூரர்களோ அதில் கிடையாது. திரையிடப்பட்ட படங்களும் அவ்வளவாக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை என்று சொல்வதற்கில்லை. சில படங்களே இதற்கு விதிவிலக்காக அமைந்தன. விழாவின் நோக்கமே தோற்றுப் போய்விட்டது என்னும் படியாகி விட்டது.

இன்றைய சினிமா உலகில் சிறந்தவை எவை என்பது பற்றிப் படத் தயாரிப்பாளரும், விமரிசகர்களும் கூடி விவாதிப்பதற்கான வாய்ப்பளிப்பதற்காகத்தான் திரைப்பட விழாக்கள் நடத்தப்படுகின்றன.

ஆனால் 1961ம் ஆண்டு விழாவின்போது திரையிடப்பட்ட படங்கள் எவரையுமே கவர முடியாத வகையில் தரக் குறைவாக இருந்தன. ஆயினும் இது ஒருசிலருக்குத் திருப்தியளிக்கத்தான் செய்தது. ஏ!

நமது படத் தயாரிப்பாளர்களும் டைரக்டர்களும் இவற்றைப் பார்த்து, உதட்டைப் பிதுக்கிவிட்டு ''இதுதான் உலகில் சிறந்த வெளிநாட்டுப் படங்கள் என்றால், நம் நாட்டுப் படங்கள் இவற்றுக்குச் சோடை போகவில்லை'' என்று மெத்தனமாகக் கூற முடிந்தது. மொத்தத்தில் இரண்டாவது சர்வதேசத் திரைப்பட விழா தரங்களை உயர்த்துவதற்கு அடிப்படையாய், ஓர் ஊக்க சக்தியாய் அமையவில்லை.

முதலாவது சர்வதேச விழா 1952ல் நடைபெற்றது. பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன என்றாலும் வரலாற்றை இப்போதிருந்து பின்னோக்கிப் பார்க்கையில் முதலாம் விழா பல விதங்களில் சிறப்புடையதாய் விளங்கியது புலனாகும்.

கற்பனைச் செறிவு மிகுந்த ஒரு திரை உலகை, பாரத மக்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் விமரிசகர்களுக்கும் இந்த விழா

மேலே: பிமல்ராய் தயாரித்த 'தோ பிகா ஜமீன்' படத்தில் ஒரு காட்சி

நிடரென்று அறிமுகப்படுத்தியது. சிறந்த திரைப் படங்களின் பிறப்பிடம் பிரிட்டிஷ் ஸ்டுடியோவாகவோ ஹாலிவுட்டாகவோ தான் இருக்க முடியும் என்ற எண்ணத்தை இது மாற்றியது. நிதன் விளைவாக இத்தாலி நாட்டுப் புதிய நிதர்சன வாதம் (Neo-realism) நம் நாட்டுப் படத் தயாரிப்பாளர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தது.

இந்தப் போக்கு நாட்டில் விரைவில் பரவியது. பிமல்ராய் 'தோ பிகா ஜமீன்'த் தயாரித்து ஒரு பரபரப்பை ஏற்படுத்தினர். அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஸத்யஜித் ரேயின் உலகப் புகழ் பெற்ற 'பதேர் பாஞ்சாலி' வெள்ளித்திரைக்கு வந்தது.

1952ம் ஆண்டு விழாவின் சாயல் தீவிரமாகப் படிந்தது என்று கூறுவது மிகையாகாது. திரைப்படச் சங்கங்கள் புத்துயிர் பெற்றன. விமரிசகர்கள் உலகத் தரங்களை ஒப்புநோக்குவ தற்கும் இது ஒரு சமயமாயிற்று. மேலும் கலைத் திறனுள்ள படைப்புக்கள் வேண்டுமென்று அவர்கள் தயாரிப்பாளர்களை வற்புறுத்தத் தொடங்கினார்கள். ரசிகர்களுக்கோவெனில் இத்தாலி, பிரான்ஸ், ஸோவியத் யூனியன், ஜப்பான் முதலிய நாடுகளின் சிறப்பான படங்களைக் காணும் வாய்ப்புக்கிட்டியது.

ரோஸலினியின் திறந்த நகரம் (Open City) விட்டோரியா டிஸிகாவின் சைக்கிள் திருடன் (Bicycle Thief) மிலான் அதிசயம் (Miracle of Milan) ஜப்பானிலிருந்து ரோஷோமோன், யூகிவாரிக, சோவியத் யூனியனின் பெர்லின் வீழ்ச்சி, (Fall of Berlin) பிரான்ஸின் சொர்க்கத்தின் குழந்தைகள் ஆகிய படங்கள் பாரதத்தில் அப்போதுதான் முதல் முறையாகத் திரையிடப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை என்றும் முக்கியமானவையாய்க் கருதப் படுகின்றன. திரை இலக்கியங்கள் இவை.

மூன்றாவது விழா பல வழிகளில் முக்கியமானதாய்த் திகழும் என்று நம்ப இடமிருக்கிறது. சமீபத்தில்தான் பாரத திரைப் படத் தொழிலின் பொன் விழா கொண்டாடப்பட்டது நினைவிருக்கலாம். 1913-ம் ஆண்டில் பிறந்த திரையுலகு வியத்தகு வளர்ச்சி யடைந்துள்ளது. அந்த வருஷத்தில்தான் முதலாவது மௌனப் படமான ராஜா ஹரிச்சந்திரா தயாரிக்கப்பட்டது.

சத்தியஜித்ரே தயாரித்துள்ள 'பதேர் பாஞ்சாலி'யில் ஒரு கட்டம்



கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் திரைப்படத் தொழில் பிரபல மடைந்த போதிலும் திரைப் படங்கள் பொதுவாக இறக்குமதி செய்யப்பட்டன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் முக்கிய நகரங்களிலும் பட்டினங்களிலும் ஊர்களிலும் சினிமாத் தியேட்டர்கள் மளமளவென்று உயர்ந்தன. சிற்றூர்களிலும் கிராமங்களிலும் டூரிங் சினிமா முகாம் இட்டது.

1931ம் ஆண்டு தயாரான முதலாவது பேசும் படமான 'ஆலம் அரா' பாரதத்தின் திரைப்படத் தொழிலில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியது. நாலே



'மூன்று'வில் ஒரு காட்சி

ஜப்பானிய 'யூகி வாரிக'



ஆண்டுகளில் பேசும் படங்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 233 ஆகப் பெருகி விட்டது.

இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் நகரங்களிலும் பட்டினங்களிலும் சினிமா தான் முக்கிய பொழுதுபோக்காய் விளங்கியது. உலகில் திரைப்படத் தயாரிப்பு நாடுகளிடையே பாரதம் அப்போது மூன்றாம் இடத்தைப் பெற்றுவிட்டது. உலகப் போர் நிகழ்ந்தபோது தியேட்டர்களின் எண்ணிக்கை தொடர்ந்து பெருகினாலும் படங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு நூறாகக் குறைந்து விட்டது.

யுத்த முடிவில் திரைப் படத் தொழில் புத்துணர்வு பெற்றது. பெரும் பட்டினங்களில் படப் பிடிப்பு ஸ்டுடியோக்கள் நிறுவப் பட்டன. பணமும் அதிக அளவில் முதலீடு செய்யப்பட்டது.

1960ம் வருஷம் திரைப்பட உற்பத்தி ஓர் உச்ச அளவை எட்டியது. அப்போது 324 கதைப் படங்கள் தயாரிக்கப்பட்டன. 549 படங்கள் எடுத்த ஜப்பானுக்கு அடுத்த இடம் பெற்றது பாரதம். மாபெரும் ஸ்டுடியோக்களும், நிதி கொழிக்கும் திரைப் படக் கார்ப்பொரேஷன்களும் மலிந்த அமெரிக்காவும் ஹாங்காங்கும் பாரதத்துக்கு அடுத்த இடங்களையே பெற்றன.

அந்நியச் செலாவணி நெருக்கடியும், சாதனங்கள், கச்சாப் பிலிம் ஆகியவற்றின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளும், உள்நாட்டுச் சிரமங்களும் தலைவலி அளித்துவரும் நிலையிலும் பாரதம் இன்று, மூன்றாவது மிகப் பெரும் படத் தயாரிப்பு நாடாய் விளங்கி வருகிறது.

நாட்டில் நடத்தப்பட்ட அதிகாரபூர்வமற்ற சர்வே ஒன்று பின்வரும் விவரங்களைத் தெரிவிக்கிறது.

மூலதன முதலீட்டில் பாரத திரைப்படத் தொழில் நடுத்தரத் தொழில்களில் இரண்டாம் இடம் பெறுகிறது.

தொழில் மூலமாய் அளிக்கப்படும் ஊதிய விஷயத்தில் நாலாவது ஸ்தானம் வகிக்கிறது.

தொழிலை மேற்கொண்டிருப்போர் எண்ணிக்கையில் ஐந்தாவது.

பாரதத் திரைப்படத் தொழிலில் சுமார் 85 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாயும், சினிமாக்கள், ஸ்டுடியோக்கள், ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பேர் வேலை பார்ப்பதாயும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நாட்டில் இப்போது ஐயாயிரத்துக்கும் மேலான நிரந்தர சினிமாத் தியேட்டர்களும், பல டூரிங் கொட்டகைகளும் இருக்கின்றன. ஏறக்குறைய அறுபது ஸ்டுடியோக்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் இருக்கின்றன. பூனா, மைசூர், கோயமுத்தூர், திருவனந்தபுரம், ஹைதராபாத் ஆகிய நகரங்களிலும் ஸ்டுடியோக்கள் இருக்கின்றன.

மிக அதிகமான படங்கள் ஹிந்தியில் தயாரிக்கப்படுகின்றன. அடுத்தபடியாக வருபவை தமிழ், தெலுங்கு, வங்காளி ஆகியவை. மற்றப் பிராந்திய மொழிகளிலும் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டிலிருந்து வர்ணப் படங்களின் தயாரிப்பு அதிகரித்து வருகிறது. மக்களிடையேயும் இவற்றுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

பாரதத் திரைப் படங்கள் அந்நிய நாடுகளிலும் பிரபலமாயிருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். 1963ம் ஆண்டில் நமது திரைப்படங்கள் ஒரு கோடியே அறுபத்தேழு லட்ச ரூபாய்க்கு அந்நியச் செலாவணி சம்பாதித்துக் கொடுத்தன.

இலங்கை, மலேஷியா, கிழக்குஆப்பிரிக்கா, பர்மா, இந்தோனீஷியா, மேற்கு ஆசிய நாடுகள், வடக்கு, கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் ஆகியவற்றில் மக்கள் நமது திரைப் படங்களைத் திரளாகக் கண்டு களிக்கிறார்கள்.

பாகிஸ்தானும் இலங்கையும் உள்நாட்டுத் தொழிலுக்கு ஆதரவு அளிப்பதற்கெனக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள நேர்ந்ததிலிருந்து பாரதத் திரைப்படங்களின் பிரபலத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். மற்ற இடங்களில் நமது படங்கள் நேச முறையிலேயே வரவேற்கப் படுகின்றன.

அரபு மக்களை நமது திரைக் கலை பெரிதும் கவர்ந்திருக்கிறது. லெபனன் தலைநகர் பெய்ரூட்டில் யுனெஸ்கோவின் ஆதரவில் நடைபெற்ற விமரிசகர் – நிபுணர் மகாநாட்டில் அரபுப் படத் தயாரிப்பாளருக்குப் பாரதப் படங்கள் மாதிரியாய் விளங்கக் கூடும் என்று கூறப் பட்டது.

அந்நிய நாடுகளில் நடைபெறும் சர்வதேசத் திரைப்பட விழாக்களில் பாரதப் படங்களும் பங்கு கொள்கின்றன. பதேர் பாஞ்சாலி, அபராஜிதோ, அபு ஸன்ஸார், தோ ஆங்கேன் பாரா ஹாத், ஜாக்தே ரஹோ, மூன்று, மஹாநகர் போன்றவை உலகப் புகழ் பெற்றிருக்கின்றன.

கதைப் படங்கள் தவிர டாகுமெண்டரிப் படங்களும் சர்வதேசப் போட்டிகளில் பரிசு பெற்றிருக்கின்றன. ஆண்டுதோறும் நாட்டில் நூற்றுக்கும் மேலான டாகுமெண்டரிகள் தயாரிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கான படங்களிலும் ஒரு தொடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் குழந்தைகள் திரைப் படச் சங்கத்தின் நிலைமை திருப்திகரமாக இல்லை என்பது இங்கே குறிப்பிடத்தான் வேண்டும். விளம்பரத் துறையும் திரை உலகத்தைத் தனதாக்கிக் கொண்டுவிட்டது.

இவை எல்லாமே வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அறிகுறிகள். ஆனால், எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் தரம் உயரவில்லையே?

பம்பாயிலும் சென்னையிலும் தயாராகும் படங்களில் இந்தக் குறை பளிச்சென்று புலப்படுகிறது. டிக்கட் வசூல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு படங்கள் நிறையத் தயாராகின்றன. குறிப்பிடத் தக்க புதிய முயற்சியோ, புதிய உத்தியோ அவற்றில் காணோம்.

ஒருசில படங்களில் சமூகச் சித்திரிப்போ, விமரிசனமோ ஓரளவுக்கு இருந்தாலும்

அதிசயமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பது





அப்பாஸ்



சத்யஜித் ரே



பிமல்ராய்

அதெல்லாம் பழைமையில் தோய்ந்ததாகவோ, நீதி போதனை செய்யும் முறையிலோதான் அமைந்துள்ளன. நமது சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்னைகளை நேரே எடுத்துக் கையாளும் துணிவு நம் பட அதிபர்களுக்கு இன்னும் வரவில்லை.

நமது பட உலகில் பெரும் தனிகர் ஆதிக்கமும், பெரிய நடிக, நடிகையர் ஆதிக்கமும் மிகுந்துள்ளன. புகழ் பெற்ற நடிக நடிகையர் பெருமளவுக்கு ஊதியம் பெறுவதோடு, அமித விளம்பரமும் பெற்றுவிடுகிறார்கள். அது மட்டுமல்ல. நமது நடிக நடிகையர் ஒரே சமயத்தில் பல படங்களில் நடித்து வருகிறார்கள். நிறைவான நடிப்புக்கு இந்தப் போக்கு ஊறு விளைவிக்கிறது. தாம் ஏற்று நடிக்கும் பாத்திரங்களுடன் ஒன்றிவிடும் நடிக நடிகையர் மிகக் குறைவு. அதற்கு அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை.

திரைப்படங்களும் ஏறக்குறைய ஒரே பாணியில் இருப்பதால் நடிக நடிகையரால் ஒரே சமயத்தில் பல படங்களில் நடிப்பது சாத்தியமாகிறது. கதையமைப்பில் சிற்சில வேறுபாடுகளைத் தவிரப் படங்கள் அனைத்தும் ஒரே போக்கிலேயே அமைந்திருக்கின்றன. நமது சிறந்த நட்சத்திர நடிக நடிகையர் பல படங்களில் ஒரே சமயத்தில் பல ரகமான பாத்திரங்களாக நடிக்கிறார்கள் என்பதை அறிந்து ஹாலிவுட் நடிகை ஷர்லி மக்லேன் பெரிதும் வியந்தார்.

படக் கலையில் முன்னேறிய நாடுகளின் அளவுக்கு நாமும் படங்கள் தயாரித்தாலும் தியேட்டர்களின் எண்ணிக்கை அந்த அளவுக்கு அதிகமாகவில்லை. நிரந்தரத் தியேட்டர்களாகட்டும், டூரிங் சினிமாக்களாகட்டும், அவற்றின் மொத்த எண்ணிக்கை மிகக் குறைவாகும்.

தியேட்டர்கள் குறைவாக இருப்பது படத் தொழிலை மிகவும் பாதிக்கிறது. இன்னின்ன தியேட்டர்கள் இன்னின்ன படக் கம்பெனிகளின் தயாரிப்புக்கு என்று நிர்ணயமாகிவிடுகின்றன. வெளிநாட்டுப் படங்களுக்கும் இந்த நிலைதான். தியேட்டர்கள் ஒருசில வெளிநாட்டு விநியோக ஸ்தாபனங்களுடனே ஒப்பந்தம் செய்துகொண்டுவிடுகின்றன. பிரிட்டிஷ் அமெரிக்கப் படங்களைத் தவிர மற்ற நாட்டுப் படங்களைக் காணும் வாய்ப்பு நமக்கு இருப்பதில்லை. இதனால் இத்தாலி, பிரான்ஸ், போலந்து, ஸ்வீடன் போன்ற நாடுகளில் பட உலகிலேயே புரட்சி ஏற்படுத்திவிட்ட படங்களை நம்மால் சாதாரணமாகப் பார்க்க இயலாமல் போகிறது.

இங்கேதான் திரைப்பட விழாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மிகப் புகழ் பெற்ற திரைப் பட விழாக்கள் பெர்லின், கான்ஸ் (பிரான்ஸ்), வெனிஸ், கார்லோ பிவேரி (செக்கோஸ்லோவேகியா) மாஸ்கோ, சான் செபாஸ்டியன், லோகார்னோ, சான் ஃப்ரான்ஸிஸ்கோ, எடின்பரோ ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. தகுதி, அளவு, தரமிடும் முறைகள், பரிசுகளுக்குப் படங்களைத் தேர்ந்தெடுக்கும் விதம் ஆகிய எல்லா அம்சங்களிலும் பாரதத்தின் மூன்றாவது சர்வதேசத் திரைப்பட விழா உலகப் புகழ் பெற்ற மற்ற விழாக்களுடன் ஒப்பிடத் தக்கதாக இருக்கும். சர்வதேச திரைப்படச் சங்க சம்மேளனம் பாரதத்தின் விழாவை அங்கீகரித்திருக்கிறது.

பாரதத்தில் நடைபெறவிருக்கும் விழாவுக்கு மத்திய அரசாங்கத்தின் தகவல், ஒலிபரப்பு இலாகா, பாரதத் திரைப்பட சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் நோக்கங்கள் மூன்று. தரத்தில் உயர்ந்த படங்களைப் பங்கு கொள்ளும் நாடுகள் திரையிட வாய்ப்பளிப்பது. திரைக் கலையின் மேம்பாட்டுக்கு உதவுவது. பல நாட்டு மக்களிடையே நல்ல படங்களின் மூலம் நேச பாவம் வளர வகை செய்வது ஆகியவை அவை.

திரைப்பட விழாவில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு நாடும் நீளமான படம் ஒன்றையும் சிறிய படம் ஒன்றையும் அல்லது இரண்டு சிறிய படங்களையும் திரையிட்டுக் காட்டலாம். 1963ம் ஆண்டு ஜனவரி முதல் தேதிக்குப் பின்னர் தயாரான படங்கள்தான் விழாவில் அனுமதிப்பார்கள். மற்றும் அவை இதற்கு முன்னர் வேறெந்த சர்வதேச விழாவிலும் காண்பிக்கப்படாதவையாக இருக்கவேண்டும். வெளிநாட்டுப் படங்களைப் பொறுத்த மட்டில் அவை இதற்கு முன்னர் பாரதத்தில் திரையிடப்படாதவையாகவும் இருக்க வேண்டும். போட்டி, தனித்தன்மை ஆகிய இந்த இரண்டும் இருந்தால்தான் சர்வதேச சம்மேளனத்தின் அங்கீகாரம் கிடைக்கும். ஆனால் இவற்றின் விளைவு என்னவெனில், மிகச் சமீபத்தில் திரையிடப்பட்டவை, இது வரை காணாதவை ஆகிய இருவகையான படங்களை மட்டுமே காணுதல் இயலும்.

மிகச் சிறந்த சில வெளிநாட்டுப் படங்கள் இந்த வரையறைக்குட்படாததால் இருந்தால் திரைப் பட விழாவில் பங்கு கொள்ள முடியாமல் போகும்.

இருப்பினும் போட்டிக்கான நிபந்தனைகளுக்குட்படாத சில தலைசிறந்த வெளிநாட்டுப் படங்களும், பாரதப் படங்களும் தனியாகத் திரையிட்டுக் காண்பிக்கப்படும். தில்லியில் மட்டுமின்றி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களிலும் இத்தகைய படங்கள் திரையிடப்படும். சென்னையிலும் கல்கத்தாவிலும் ஜனவரி 22ம் தேதி முதல் 28ந் தேதி வரை இந்தத் திரைப்பட வாரம் கொண்டாடப்படும். பம்பாயில் திரைப்பட வாரம் ஜனவரி 29ந் தேதி முதல் பிப்ரவரி 4ம் தேதி வரை நடைபெறும். முந்தைய திரைப்பட விழாக்களைப் போலவே இந்த மூன்றாவது சர்வதேச திரைப்பட விழாவும் நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்தப்படும்.

திரைப்பட விழாவிலோ மற்றத் திரைப் பட வாரங்களிலோ காண்பிக்கப்படும் படங்கள் எல்லாம் எந்த மொழிகளில் எடுக்கப்பட்டனவோ அந்த மொழிகளிலேயே திரையிடப்படும். ஆனால் ஹிந்தி ஆங்கிலம் இவையல்லாத மற்ற மொழிப் படங்களில் எல்லாம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் 'ஸப்-டைட்டில்'கள் காண்பிக்கப்படும்.

போட்டிக்கு உட்பட்ட படங்களும் சரி, போட்டிக்கல்லாது விசேஷ அழைப்பின் பேரில் காண்பிக்கப்படும் படங்களும் சரி, மாமூலான தணிக்கை விதிகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

ஒரு முக்கியமான விஷயத்தில் இந்த மூன்றாவது திரைப்பட விழாவுக்குச் சர்வதேச திரைப்பட சம்மேளனம் பூர்வாங்க ஆட்சேபம் தெரிவித்தது.

வெளிநாட்டுப் படங்களுக்குக் கட்டுப்பாடு இருக்கும் நாடுகளில் சர்வ தேச விழா நடத்த அங்கீகாரம் அளிப்பதற்குச் சம்மேளனம் தயங்கியது. ஆனால் இப்போதுள்ள நிலைமையில் இதற்கு விதிவிலக்களிக்கப் பாரதத்துக்கு இயலவில்லை. ஆயினும் சம்மேளனம் நமது விழாவை ஆதரிக்கும் வகையில் ஒரு சில மாறுதல்கள் செய்யப்பட்டன.

பட இறக்குமதிக் கட்டுப்பாடு பாரபட்சமாகச் செய்யப்படுவதில்லை என்றும் நமது வர்த்தகப் பற்று வரவு நிலைமையினாலேயே இறக்குமதிக் கட்டுப்பாடு அவசியமாகிறது என்றும் தெளிவாக்கப்பட்டது.

ஆனால் இந்தக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. இரு தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் இறக்குமதி செய்து கொள்ளப்படும் படங்கள் தவிர ஆண்டுதோறும் முப்பது கதைப் படங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கிறது. முக்கிய சர்வதேசத் திரைப்பட விழாக்களில் பரிசு பெற்ற படங்களும் அனுமதிக்கப்படும்.

திரைப்பட விழாவில் கலை நுணுக்கத்திலும் தொழில் நுட்பத்திலும் மிகச் சிறந்த தரங்களைக் கொண்டு படங்கள் பரிசீலனை செய்யப்படும். கதைப் படங்களுக்கு ஒன்றும் செய்தி படங்கள் — டாகுமெண்டரி படங்கள் ஆகியவற்றுக்கு ஒன்றும் ஆக இரண்டு சர்வதேச ஜூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கதைப் படத்துக்கான ஜூரியில் பதினொரு உறுப்பினர் இருப்பார்கள். இதன் தலைவரான ஸத்யஜித் ரேயும், க்வாஜா அஹ்மத் அப்பாஸும், பாரத நாட்டவர்கள். ஜூரியின் தலைவராக ஸத்யஜித் ரே நியமிக்கப்பட்டிருப்பது அவருக்கும் பாரதத்துக்கும் அளிக்கப்பட்ட தனிப்பெரும் கௌரவமாகும்.

ஜூரியின் மற்ற உறுப்பினர்கள் முக்கிய படத் தயாரிப்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஸோவியத் யூனியன், போலந்து, இத்தாலி, எகிப்து, ஜப்பான் போன்ற நாடுகளில் புகழ் பெற்றவராய் இருப்பார்கள்.

இரண்டாவது ஜூரிக்கும் பாரத நாட்டவரான ஜே. எஸ். பவநாகரி தலைவர். கானடா, செக்கோஸ்லோவேகியா, போலந்து, நெதர்லாண்ட்ஸ் முதலிய நாடுகளில் சிறந்த டாகுமெண்டரி படத் தயாரிப்பாளர்கள் ஜூரியின் மற்ற உறுப்பினர்கள்.

விழாவின் இறுதி நாளான இருபத்தோராம் தேதியன்று பரிசுகளைப் புதுதில்லியில் உப ராஷ்டிரபதி வழங்குவார். சிறந்த படங்களுக்கும், சிறந்த நடிகருக்கும் சிறந்த நடிகைக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

சிறந்த கதைப் படத்துக்கும் டாகுமெண்டரிக்கும் தங்க மயில்களும், நடிகர்களுக்கு வெள்ளி மயில்களும் பரிசாக வழங்கப்படும். மற்றப் பரிசுகளுக்கு வெண்கல மயில்கள் அளிக்கப்படும்.

திரைப்பட விழாவின்போது 'ஸினிமாவும் சமுதாயமும்' என்னும் பொருள் பற்றி உரைக் கோவை ஒன்று நடைபெறும்.

தேசிய வாழ்வையும் பண்பாட்டையும் திரைப்படம் எவ்வாறு சித்திரிக்கிறது, பிரசாரத்திலும், கல்வியிலும் சிறு திரைப் படங்களைப் பயன்படுத்துவது, அந்நிய நாடுகளில் பாரதப் படங்களும் நம் நாட்டில் அந்நியத் திரைப் படங்களும், திரைப் படத்தில் நடிப்பின் பங்கு, பெரும் நடிக நடிகையர் ஆதிக்கம், குழந்தைப் படங்கள் ஆகியவை பற்றி விவாதமும் நடத்தப்படும்.


இவை பாரத நிலைமையோடு நெருங்கிய சம்பந்தமுடையவை. நமது தயாரிப்பாளரும், டைரக்டர்களும், நடிக நடிகையரும் டெக்னீஷியன்களும் உரைக் கோவையிலிருந்து முக்கியமான படிப்பினைகள் பெற முடியும்.

இந்த விழாவுக்குக் கிடைத்துள்ள வரவேற்பு ஊக்கமளிப்பதாய் இருக்கிறது. அழைக்கப்பட்ட எழுபது நாடுகளில் முப்பத்து நாலு நாடுகள் கலந்து கொள்ளச் சம்மதித்திருக்கின்றன.

பங்கு பெறும் நாடு ஒவ்வொன்றும் இரண்டு பேர் கொண்ட பிரதிநிதி கோஷ்டியை அனுப்பலாம். இவர்களில் ஒருவர் பிரபல கலைஞராக இருத்தல் வேண்டும். மேலும் விழாவுக்கு முக்கியத்துவமும் வனப்பும் அளிப்பதற்கென விமரிசகர்களும், தொழிலில் முக்கியமானவர்களும் பிரபல நடிக நடிகையரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மொத்தமாகப் பார்க்கப் போனால் மூன்றாவது சர்வதேசத் திரைப்பட விழா மிகவும் முக்கியமான பெரும் நிகழ்ச்சியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.


கயல்விழி
அகிலன்
மூன்றாம் பாகம்
இவனே தலைவன்!



பூர்வகதை

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியர் மதுரைத் தலைநகரிலிருந்து பாண்டிய நாட்டை ஆட்சி செய்துகொண்டிருந்த காலம். பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் அதற்கடுத்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் அவர் சோழ சாம்ராஜ்யத்துக்கு அடங்கிய சிற்றரசாக அரசு செலுத்தி வந்தார்.

குலசேகர பாண்டியரின் தம்பியான இளவரசன் சுந்தரபாண்டியன் அறிவாற்றலிலும் வீரத்திலும் தியாகத்திலும் சிறந்தவன். அவனுக்குப் பாண்டிய நாடு காலம் காலமாகச் சோழ சாம்ராஜ்யத்திடம் அடிமைப்பட்டுக் கிடப்பது பிடிக்கவில்லை. முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகச் சோழர்களிடமும் அதற்கு முன்பு பல்லவர்களிடமும் அதற்கும் முன்பு களப்பிரரிடமும் அடிமைப்பட்டுக் கிடந்த நாடு அது. இளவரசன் சுந்தர பாண்டியன் விடுதலை வேட்கை கொண்டு விட்டான். அவனிடம் பெரு நம்பிக்கை வைத்து, அவனை அன்போடு பேணி வருகிறார் குலசேகர பாண்டியர்.

சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி மூன்றாம் குலோத்துங்க சோழரோ தமது வலிமையான பிடிக்குள் பாண்டிய நாட்டை என்றென்றும் வைத்துக் கொள்ளத் திட்டமிடுகிறார். ஆனால் அவருடைய குமாரன் இராஜ இராஜனின் திறமையில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அவன் அரசியல் பொறுப்பேற்கத் தகுதியற்ற கோழை; இன்பவிழைவில் நாட்டம் கொண்டு கடமைகளை மறப்பவன்.

ஆகவே, எதிர்காலப் பாண்டிய நாடு இளவரசன் சுந்தரபாண்டியன் தலைமையில் வீறு பெற்றெழுந்து தமது மைந்தனுக்கும் சாம்ராஜ்யத்துக்குமே ஆபத்து விளைவிக்கக் கூடும் என்று குலோத்துங்கர் அஞ்சுகிறார். இந்த அச்சத்தின் காரணமாகப் பாண்டிய நாட்டைச் சிறுமைப்படுத்தவும், சுந்தர பாண்டியனின் மன உறுதியை அழித்து அவனை எழுப்ப விடாமல் தடுக்கவும் ஒரு வழி வகுக்கிறார். பாண்டிய நாட்டின் பெயரையே மாற்றி அமைத்து அதைத் தமது சோழ மண்டலத்தோடு இணைக்க வேண்டும் என்றும், அதை ஒரு விழாவாகக் கொண்டாடி அப்போது மதுரைத் தலைநகரில் தாம் வீராபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் என்றும் பாண்டியருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கிறார்.

குலசேகர பாண்டியருக்கும் சுந்தர பாண்டியனுக்கும் அந்தக் கட்டளை அதிர்ச்சி தருகிறது. கட்டளைப்படி நடந்தால் பாண்டிய மண்டலத்தைச் சோழ நாட்டின் பகுதியாகவே இணைத்துவிட வேண்டும். பாண்டியர்களுக்குள்ள சிற்றரசு என்ற உரிமையும் பறிபோய் விடும். கட்டளையை மறுத்தாலோ கடுமையான போர் நடக்கும்; போர் நடந்தால் பாண்டிய நாடு அழியும். என்றாலும் தீமைக்கு அடிபணிய வேண்டாம் என்கிறான் சுந்தர பாண்டியன். தம்பியின் கருத்தை ஏற்று, அவ்வாறே சோழருக்குப் பணிய மறுத்து விடுகிறார் குலசேகர பாண்டியர்.

பகையுண்டெழுந்த குலோத்துங்கர் பாண்டிய நாட்டின் மீது பயங்கரமான போர் தொடுக்கிறார். மதுரை மாநகருக்குத் தீயிடுகிறார். அதோடு இளவரசன் சுந்தரபாண்டியனையும் பிடித்துக் கொன்று விடும்படி வீரர்களுக்கு ஆணையிடுகிறார். தலைவன் இல்லாத நாடு தலை எடுக்காது என்பதால், அதன் எதிர்காலத் தலைவன் சுந்தரபாண்டியனை முளையிலேயே கிள்ளி எறியச் செய்கிறார்.

சுந்தர பாண்டியனின் ஆசிரியரும் பாண்டியரின் உற்ற நண்பருமான புலவர் விழுப்பரையர் சோழரின் திட்டத்தை அறிந்து சுந்தர பாண்டியனின் உயிரைக் காக்க ஒரு சூழ்ச்சி செய்கிறார். தமது குமாரனையே இளவரசனின் வேடத்தில் போருக்கு அனுப்பி, அவனைப் பலி கொடுத்து, சுந்தர பாண்டியனைக் காப்பாற்றுகிறார். கொல்லப்பட்டவன் சுந்தரபாண்டியன்தான் என்று அனைவருமே நம்புகிறார்கள்; பாண்டியரும் நம்பி விடுகிறார்.

கொல்லப்பட்டதாக நம்பப்பட்ட சுந்தர பாண்டியன் போரில் காயமுற்று, பைந்தமிழ்க் குமரன் என்ற பெயரில் புலவனாக மறைந்து வாழ்கிறான்.

போர் நடக்கும் போது சோழ இளவரசன் இராஜ இராஜன் போர் நெறிகளுக்கு மாறான இழி செயல்களில் ஈடுபடுகிறான். பெண்களைத் துன்புறுத்திச் சில தீச்செயல்கள் செய்து களிக்கிறான். அந்தக் கொடுமையின் துன்பம் தாங்காது கயல்விழி என்ற பாணர் குலப் பெண் வைகையாற்றில் குதித்து உயிர்



மாய்த்துக் கொள்ள ஓடி வருகிறாள். அவளைத் தடுத்து நிறுத்துகிறான் புலவனாக மாறியுள்ள இளவரசன். அப்போது கயல்விழி பேசிய ஆவேசப் பேச்சு அவன் உள்ளத்தில் சக்திக் கனலாகக் குடிபுகுந்து விடுகிறது. அவளிடம் பாண்டிய நாட்டை மீட்டு விடுவதாகச் சபதம் செய்கிறான்.

போரில் பாண்டிய நாடு தோற்று விடுகிறது. என்றாலும் அதைத் தம்மால் ஆள முடியாது என்று கண்ட குலோத்துங்கர், முன்போலவே பாண்டியரிடம் அதை விட்டு ஆளச் செய்கிறார். தம்முடைய ஒற்றர் தலைவர் சயங்கொண்ட சோழ வல்லபருக்கு மேலதிகாரம் வழங்கிச் செல்கிறார்.



புலவனான இளவரசனும் போரில் அநாதையாகிவிட்ட கயல்விழியும் திருக்கொடுங்குன்றத்துக் கானகத்தில் நெருங்கிப் பழகுகிறார்கள். வள்ளுவரைத் தனது வழிகாட்டியாகக் கொண்ட பைந்தமிழ்க்குமரன் புலவர் படை திரட்டி அதைக் கொண்டே நாட்டை மீட்கப் போவதாகக் கயல்விழியிடம் பெருமை பேசுகிறான். அவனே இளவரசன் என்பதை அறியாத இளவரசி அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுக்கிறாள்.

ஆனால் ஏதோ ஓர் இரகசியமான துன்பம் அவளை அவனுடைய காதலுக்கு எதிராக வாட்டி வதைக்கிறது. அதை அவள் வெளியிட மறுக்கிறாள். பைந்தமிழ்க் குமரனால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பைந்தமிழ்க் குமரன் அந்தப் போரில் நடைபெற்ற ஓர் அக்கிரமச் செயலைக் கேள்வியுற்றுத் திடுக்கிடுகிறான். அவனுடைய பணியாளன் மணக்க இருந்த ஓர் உத்தமப் பெண்மணி, சோழநாட்டு வெறியன் ஒருவனால் களங்கப் படுத்தப்பட்டு விட்டாள். அதனால் அவள் தன் காதலன் கரம் தீண்டாமலே தீக்குளித்து விடுகிறாள். பெண்மையை அழித்துக் களியாட்டம் நடத்திய பகைவர்களின் இந்த வெறிச் செயல் பைந்தமிழ்க் குமரனைக் குமுறி எழச் செய்கிறது.

இந்த நிகழ்ச்சியை வைத்து ஒரு கூத்துப் புனைந்து, கயல்விழியைக் கொண்டு அதை நாடெங்கும் நடத்த

விரும்புகிறான். கயல்விழி அதில் நடிப்பதற்கு முதலில் மறுத்து விட்டு, பின்பு அவன் மன வேதனையைக் கண்டு நடிக்க இசைகிறாள். கூத்தின் அரங்கேற்றத்தின்போது, மெய்யாகவே தீயில் விழுந்து அவள் உயிர் விடத் துடிக்கிறாள். புலவன் அவளைக் காப்பாற்றுகிறான்.

'வெற்றித் திருமகள்' என்ற அந்தக் கூத்து பாண்டிய மக்களிடையே மிகவும் தீவிரமான எழுச்சியை ஏற்படுத்துகிறது. பைந்தமிழ்க்குமாரனைக் குடிமக்கள் தங்களுக்குப் புத்துயிர் கொடுக்க வந்தவன் என்று போற்றுகிறார்கள். அவனுக்குத் தங்கள் செல்வத்தை வாரி வாரி வழங்குகிறார்கள். அவனோ அவ்வளவையும் பாண்டியருக்கு அனுப்பி, அழிக்கப்பட்ட மதுரையைப் புதுப்பிக்கச் செய்கிறான்.

அவன் ஏற்படுத்தி வரும் புத்தெழுச்சி குலோத்துங்க சோழரைக் கலங்கச் செய்கிறது. புலவனை ஆதரிப்பவர் போல் வஞ்சகமாக அவனைத் தமது தலைநகரான கங்காபுரிக்கு வரவழைக்கிறார். அங்கே இளவரசன் இராஜ இராஜன் புலவன் மீது வஞ்சம் கொண்டு அவனை மாளிகைச் சிறையில் அடைக்கிறான்.

கங்காபுரிக்கு அப்போது கோசல சாம்ராஜ்யத்தின் இளைய சக்கரவர்த்தி வீரநரசிம்மனும் அவர் குமாரத்தி பாமினியும் விருந்தினர்களாக வந்திருக்கிறார்கள். பாமினி கவிதையிலும் கலைகளிலும் ஈடுபாடு கொண்டவளாதலால், புலவனிடம் அன்பு கொள்ளுகிறாள். அவனைச் சிறையிட்டிருப்பதால் அவனிடம் அநுதாபம் காட்டுகிறாள்.

திடீரென்று சிறையிலிருந்து தப்பி, மாறுவேடத்தில் இருமுனைப்பாடி நாட்டுக்குச் சென்று விடுகிறான் பைந்தமிழ்க் குமரன். சோழர் குலோத்துங்கர் அவனை எங்கு கண்டாலும் சிறைப்படுத்தும்படி ஆணை பிறப்பிக்கிறார். பாண்டிய நாட்டுக்குள்ளேயும் நுழைய முடியாமல் அவன் தலைமறைவாகச் சேர நாட்டின் ஏலமலைக் காட்டில் சிலகாலம் மறைந்து வாழ்கிறான்.

கயல்விழி புலவனைக் காணாமல் துடிக்கிறாள். இந்த நிலையில் சோழ சாம்ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பு இளவரசன் இராஜ இராஜனிடம் வருகிறது. அவன் கயல்விழியைப் பிடித்து வரச் சொல்லிக் கட்டளையிடுகிறான். அவளும் தப்பி ஓடி ஏலமலைக் காட்டில் பைந்தமிழ்க்குமாரனைச் சந்திக்கிறாள். அங்கே அவன் பெரிய படை திரட்டிப் பயிற்சி அளித்து வருவதைக் கண்டு வியப்படைகிறாள்.

அவர்கள் இருவரும் பாணனும் விறலியுமாக மாறுவேடம் தரித்து வந்து, கோசல சாம்ராஜ்யத்து இளவரசி பாமினியைச் சந்திக்கிறார்கள். அவளிடம் உளவறிந்து கொண்டு மதுரைக்குத் திரும்புகிறார்கள். மதுரையில் புலவன் மீதிருந்த சிறைத் தண்டனைக் கட்டளையையும் மீறிப் பயங்கரமாகக் கூத்து நடத்துகிறார்கள்.

சோழ நாட்டு மேலதிகாரியும் அமைச்சருமான சோழ வல்லபர் அவனைப் பிடித்து விலங்கிடுகிறார். குலசேகர பாண்டியர் முன்னிலையில் விசாரணை நடக்கிறது. சபையின் கட்டுப்பாட்டை மீறி, அமைச்சர் சோழ வல்லபர் வாள் வீசவே, பைந்தமிழ்க் குமரனும் வாள் வீசி அமைச்சரைத் தோல்வியுறச் செய்கிறான். அவன்தான் சுந்தரபாண்டியன் என்பது அப்போது தெரிகிறது.

பாண்டியரும் குடிமக்களும் பேரானந்தமடைகிறார்கள். மாண்டு விட்டதாக நினைத்திருந்த தலைவன் மீண்டு விட்டதால் பாண்டிய நாடே குதூகலமடைகிறது. ஆனால் எந்தப் பெண் இந்தச் செய்தியைக் கேட்டு எல்லையற்ற பரவசமடைய வேண்டுமோ அவள் எல்லையற்ற துயரத்தை அடைகிறாள். கயல்விழி செயலிழந்து விடுகிறாள் — அவளுடைய துன்பத்தின் காரணம்? சுந்தரபாண்டியனின் அகப்புறப் போர்க்களங்கள்? அவற்றின் விளைவுகள்?

முதல் அத்தியாயம்

இறைவன் எங்கே?

சுந்தர பாண்டியன் மீண்டுவிட்டான் என்ற செய்தி பாண்டிய நாடு முழுவதும் எல்லையற்ற குதூகலத்தைச் சுமந்துகொண்டு பரவியது. புலவனாக அவர்களிடம் உலவி அவர்களுக்கு எழுச்சியூட்டியவனும் அவனே என்பதை அறிந்த பாண்டிய மக்கள் மகிழ்ச்சிப் பெருங் கடலில் நீந்தினார்கள். அவர்கள் ஆடினார்கள்; பாடினார்கள்; ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

'' கலியிருள் பரந்த காலைக்
கலியிருள் கரக்கத் தோன்றும்
ஒலிகடல் அருக்க னென்ன
உலகுய்ய வந்து தோன்றி...''

சோழ நாட்டில் முதல் குலோத்துங்கன் தோன்றிய காலத்தில், பரணி பாடிய கவிஞர் ஜயங்கொண்டார் இவ்வளவு பேரானந்தத்துடன் அவன் வரவைப் பாடுகிறார்.

சுந்தர பாண்டியன் தனது மக்களிடையே மீண்டும் வந்துவிட்ட பெருமையைப் பாடுவதற்கு, அம் மக்கள் அவனது வரவால் பெற்ற பேரானந்தத்தைச் சொல்வதற்கு, நான் கவிஞனாகப் பிறக்கவில்லையே என ஏங்குகிறேன்.

பாண்டிய நாட்டை முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக விழுங்கியிருந்த அடிமை இருளைச் சுட்டெரிக்கும் இளங் கதிரவனாக அவன் முளைத்து




'KEPLER'

க்ருஷன் ஸால்ட்ஸ்

அருந்துங்கள்

அது **மூட்டு வலியை** அகற்ற உதவுகிறது

அதன் பயன்
மிக்க 7-வழிச்
செயல்முறை
உங்கள் உடல்
நலனைத்
தக்கபடி
பாதுகாக்கிறது



நிக்கோலஸ் Ⓝ தயாரிப்பு

[illegible]


BI-KS-5 TAM

ஆல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஒரு சிறந்த டானிக்

உங்களுடைய உடல் வளர்ச்சிக்கு ஆல்போ-ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளையோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங்கில் இருக்கின்றன.





ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

விட்டான். அந்தக் கதிரவன் தங்களை உய்ய வைப்பதற்கே வந்திருக்கிறான் என்பதை உணர்ந்த மக்கள் கூட்டமாகிய மாபெரும் கடல் ஒலி எழுப்பி ஆரவாரம் செய்து, ஆனந்தக் கூத்தாடத் தொடங்கியது.

ஒரு மனிதன் தன்னைச் சுற்றியுள்ள கோடானு கோடி மக்களிடம் எங்ஙனம் இவ்வளவு நம்பிக்கையை எழுப்ப முடிந்தது? எங்ஙனம் அவர்களுக்குப் புத்துயிரும் புது வலிமையும் கொடுக்க முடிந்தது? முடியும், அவன் குடி மக்களுக்காகவே தன்னை அர்ப்பணிப்பவனாக இருந்தால்! முடியும் அவன் சான்றாண்மை மிக்க வீரனாக இருந்தால்! முடியும் அவன் மனிதத் தன்மையை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் மனிதனாக இருந்தால்!—சுந்தர பாண்டியனால் மட்டும் எப்படி முடிந்தது?

மக்களின் குதூகலம் அடங்குவதற்கு முன்பாகவே பாண்டிய நாட்டில் மற்றொரு பேரதிசயமும் நடைபெற்றது. சுந்தர பாண்டியனின் புகழைப் பாடிக் கொண்டே நாட்டின் எண் திசைகளிலிருந்தும் நால்வகைப் படைகள் மதுரையை நோக்கிப் பொங்கி எழுந்து வந்தன. படைகளா அவை? பொங்குமா கடல்கள்!

மேற்கில் ஏலமலைக் காட்டிலிருந்து, அழகிய பெருமாள் தலைமையில் மலைக் கூட்டமென யானைப் படைகள் மதுரையை நோக்கி விரைந்து வந்தன. அத்தகைய கொம்புக் களிறுகளையும் உரோமம் அடர்ந்த உடல்களைக் கொண்ட பிடிகளையும் பாண்டிய நாட்டினர் அதற்கு முன்பு கண்டதில்லை. தென் பாண்டிய நாட்டிலிருந்து மழவச் சக்கரவர்த்தியின் தலைமையில் புயல் காற்றெனச் சீறி வந்தன குதிரைப் படைகள். அரபு நாட்டு ஆண்மை அழகு மிக்க அற்புதமான புரவிகள். இன்னும் கிழக்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் தேர்ப் படைகளும் காலாட் படைகளும் மதுரையை நோக்கி வந்த வண்ணமாகவே யிருந்தன.

மதுரைத் திருநகரத்துக்குள் பாண்டிய நாடு முழுவதுமே குடிபுகுந்து விட்டதோ என்று திகைப்புறும் வகையில் படைகள் அதற்குள் நிறைந்து விட்டன. அந்த நாட்டின் வீரச் சிறப்பு முழுவதும், விடுதலை நெருப்பு முழுவதும், தியாகச் செழிப்பு முழுவதும் அங்கே அலைமோதி ஆர்ப்பரிக்க முனைந்து விட்டது. வானவெளியெங்கும் மண்டிக் கிடந்த புழுதிப் படலம் செம்மேகக் கூட்டங்களாக மாறிக் கதிரொளிக்குத் திரையிட்டுத் திரிந்தன.

◆◆◆◆◆◆◆◆ குட்டிக் கதை ◆◆◆◆◆◆◆◆

ஓர் இடத்தில் ஏதோ வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல கூலியாட்கள் மிகக் கனமான தூண்களைத் தூக்க முயன்றுகொண்டிருந்தார்கள். அம்முயற்சியில் வியர்த்து விறுவிறுத்துப் போய் நின்றார்கள். அப்பொழுது நெப்போலியன் அவ்வழியே வந்தான். வேலை வாங்கியவண்ணம் கட்டட வேலையைக் குத்தகை எடுத்தவன் அங்கே நின்றுகொண்டிருந்தான். நெப்போலியன் அவன் அருகில் சென்று, ''பாவம்! இவர்கள் செய்யும் இந்த வேலையில் நீங்களும் ஏன் கை கொடுத்து உதவக் கூடாது?'' என்றான்.

இதைக் கேட்டதும் அந்தக் கண்டிராக்டருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. பற்களைக் கடித்து, ''தெரியுமா உனக்கு நான் யாரென்று? இந்த வேலையை எடுத்துச் செய்யும் கண்டிராக்டராக்கும்!'' என்றான்.

நெப்போலியன் பிறகு ஒன்றும் பேசவில்லை. கூலிகளோடு சேர்ந்து தூண்களைத் தூக்கும் அந்த வேலையில் தானும் ஈடுபட்டுவிட்டான். 'பைத்தியக்காரனாயிருப்பான் போலிருக்கிறதே இந்த மனிதன்' என்று எண்ணிய கண்டிராக்டர் அவனிடம் சென்று, ''நீ யார்? நான் உன்னைக் கூலி வேலைக்கு அமர்த்திக் கொள்ளாமல் இருக்கும்பொழுது நீயாகப் போய் வேலை செய்கிறாயே!'' என்று கேட்டான்.

நெப்போலியன் பதில் கூறினான்: ''சகோதரரே! உங்களுக்கு என்னைத் தெரியாது போலும். இந்த ஏழையைத்தான் நெப்போலியன் என்று கூறுவார்கள்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பட்டத்து யானையின் மீதேறிப் பவனி வந்த சுந்தர பாண்டியன் படைகளினூடே புகுந்து எட்டுத் திசைகளிலும் தனது பார்வையைப் பரவ விட்டான். களிறுகள், களிறுகள், களிறுகள்! புரவிகள், புரவிகள், புரவிகள்! தேர்கள்! தேர்கள்! தேர்கள்! வீரர்கள்! வீரர்கள்! வீரர்கள்! — யானையின் மீது வீற்றிருந்த சுந்தர பாண்டியனுக்கு அந்தக் காட்சி இளஞ் சிங்கத்தின் மன வலிமையைக் கொடுத்து விட்டது.

அவனைப் பொறுத்தவரையில் வெற்றியை நாடி இனி அவன் போராட வேண்டும் என்பதே இல்லை. அது அவனை அப்போதே, அந்த இடத்திலேயே அந்தக் கணத்திலேயே தேடி வந்து சரணடைந்து விட்டது!

குலசேகர பாண்டியரும் விழுப்பரையரும் மேல் மாடத்திலிருந்தவாறே அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு பரவச மடைந்து நின்றனர். பாண்டியருக்குப் பேச நா எழவில்லை. அவர் கண்களின் முன்னே ஒரு புதிய நாடு—வீறு பெற்ற நாடு, இளந் தலைவனின் தெய்வத் திருநாடு

உதயமாகிக் கொண்டிருந்தது. அச்சமற்ற, அடிமையற்ற, அறியாமையற்ற, வறுமையற்ற, நோயற்ற எதிர்காலப் பொன்னாட்டின் மறு பிறப்பை அவர் கண்டு களித்துக் கொண்டு நின்றார். அவரது குலம் செய்த பாக்கியமும், நாடு செய்த பாக்கியமும் சுந்தர பாண்டியனாகத் தோன்றிச் செயற்கரிய செயல்களைச் செய்து கொண்டிருந்தது.

புலவர் விழுப்பரையரின் விழிகள் ஆனந்தக் கண்ணீர் சிந்தின. அங்கிருந்தவாறே திருப்பரங்குன்றத்தை நோக்கித் தம் இரு கரங்களையும் கூப்பினார். திருப்பரங்குன்றத்து முருகனிடம் தம்மை வழிப்படுத்திக் கொண்டு புலவர் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படை அவர்தம் உள்ளத்தில் எழுந்தது. உருக்கமாகப் பாடினார்.

'உலகமே மகிழ்ச்சிக் கடலாகத் துள்ளும்படி உதய ஞாயிறு போல் முருகன் தோன்றி விட்டான்! திசையெங்கும் ஒளி பொங்கக் குமரன் தோன்றி விட்டான். தம்மை நம்பும் நல்லோரை வாழவைப்பவனும், அல்லாத தீயோரை இடியெனத் தாக்கி அழிப்பவனுமாகிய இளைஞன் தோன்றி விட்டான்! மறு இல்லாத கற்புடை மங்கையின் கணவன் தோன்றிவிட்டான்!' என்று உதய கீதம் பாடுகிறாரல்லவா நக்கீரர்?

அதையே பாடினார் விழுப்பரையரும்:

''உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண்டு ஆங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்''

''அரசே! உலகத்தை உய்விப்பதே இறைவனின் தொழில். மற்றவர்களை உய்விக்க வேண்டுமென்ற தொழிலை, யார் யார் எங்கெங்கே எந்த எந்த வகையில் செய்தாலும் அவர்களிடம் இறைவன் வெளிப்படுகிறான். இறைவனைக் குடிமக்களிடம் காணும் தன்மையைப் பெற்றிருக்கிறார் இளவரசர். அந்த அன்புக்கு உள்ள ஆற்றல் எத்தகைய அற்புதங்களெல்லாம் நிகழ்த்துகிறது கண்டீர்களா?''

''சுந்தர பாண்டியனிடம் எனக்குத் திருப்பரங்குன்றத்தான் தோன்றுகிறான்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார் குலசேகர பாண்டியர்.

படைகளைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பிய சுந்தர பாண்டியன் தன் தமையனிடமும் விழுப்பரையரிடமும் சிறிது நேரம் அடுத்த கடமைகள் பற்றிப் பேசினான். மூவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டார்கள். பிறகு மௌனமாக எழுந்து தன்னுடைய கூடத்துக்குத் தனிமையை நாடிச் சென்றான் சுந்தர பாண்டியன்.

விழுப்பரையருக்குச் சுந்தர பாண்டியனின் போக்கில் திடீரென்று ஒரு மாறுதல் தென்பட்டது. போர்வீரர்களுக்கு இடையில் உலாவிய அஞ்சா நெஞ்சனாக அவன் இப்போது இருக்கவில்லை. அரண்மனையில் நுழைந்துவிட்டால், அதிலும் பெண்டிர் கூட்டம் நிறைந்த அந்தப்புரத்தைக் கண்டுவிட்டால், அவன் முகத்தில் துயரம் சூழ்ந்து விடுகிறது. அவன் மாறிவிடுகிறான். மனம் துடிக்கிறான்; ஏங்குகிறான். இதை விழுப்பரையர் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் வந்தார்.

அன்று அவனுடைய கூடத்துக்குள் அவர் நுழைந்தபோது, அவன் வேறு எங்கோ சாளரத்தின் வழியாக நோக்கிக்கொண்டிருந்தான். அரை நாழிகைப் பொழுது அவர் அவன் பின்னால் நின்றிருப்பார். அவன் அதைக் கவனிக்கவில்லை. விழுப்பரையர் அவனுக்குத் தெரியாமல் அவன் விழிகளில் பொங்கி வடிந்த நீரைக் கண்டு திடுக்கிட்டார்.

''இளவரசே!'' என்றழைத்து மெல்ல அவன் கரத்தைப் பற்றினார்.

''என்னால் ஏதுமே செயலாற்ற முடியாதுபோலிருக்கிறது. என் உறுதியெல்லாம், வலிமையெல்லாம், ஆற்றலெல்லாம் என்னை விட்டுப் போய்விடும் போலிருக்கிறது. இந்த நாட்டுக்கும் குடிமக்களுக்கும் நான் பயனற்றவனாகி விடுவேனோ என்ற அச்சம் என்னுள் ஏனோ அடிக்கடி இப்போது எழுகிறது. காரணம் விளங்கவில்லை.''

''காரணம் எனக்கு விளங்குகிறது. உங்களுடைய சக்தி உங்களை விட்டுப் பிரிந்து போய் விடுமோ என்ற ஐயம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது உங்களை விட்டு ஒரு கணமும் பிரியாத சக்தி; பிரிக்க முடியாத சக்தி. பரம்பொருளின் மறு பாதியாக இணைந்துவிட்ட சிவ சக்தி போல் கயல்விழி என்றும் உங்களுடன் கலந்திருப்பாள். — கயல்விழிதானே இப்போது உங்களுக்கு வேண்டும்? அவளுடைய அன்பு மொழிகளோ, பணிவிடைகளோ, துணையோ இல்லாததால்தானே இவ்வளவு கவலை? அந்தக் கவலைகளை மட்டும் என்னிடம் விட்டு விடுகிறீர்களா?''

மறுமொழிக்காக அங்கே விழுப்பரையர் காத்திருக்கவில்லை. சுந்தர பாண்டியனின் செவிகளுக்கு அவருடைய குதிரையின் குளம்பொலிச் சத்தம் கேட்டது. (தொடரும்)

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ ஃபாஸ்ஃபோமின்

உங்கள் குடும்பத்தினர் அனைவரும் வலிவும் ஆரோக்கியமும் பெற்றுத் தெம்புடன் திகழ வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ ஃபாஸ்பேட்கள் கலந்துள்ளது.

ஃபாஸ்ஃபோமின் அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. களைப்பை நீக்கும். பசியைத் தூண்டும். வலிமை பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமயமாய் வாழ உதவுவது பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக் ஃபாஸ்ஃபோமின்.



அழகிய இளம் பெண்ணொருத்தி ஆபரணங்கள் பல அணிந்து நின்றது போல், நிலவொளி பட்டுப் 'பளபள'த்துக் கொண்டிருந்தது 'உல்லாச பவனம்'. பிரும்மாண்டமான காம்பவுண்டுச் சுவர்களுக்குள்ளிருந்த அழகிய வண்ண மலர்த் தோட்டத்தின் நடுவே, ஒய்யாரமாக நின்ற 'உல்லாச பவனம்' கண்களுக்குப் பெருவிருந்தாகக் காட்சியளித்தது.

பேரெழில் மிக்க அந்த உல்லாச பவனத்துக்குள்ளே, இன்று எழில் நட்சத்திரமொன்று தன் ஒளிக் கதிர்களை இழந்து, குடும்ப விளக்காக ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. திரை வானில் மின்னும் நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருந்த நடிகை ஸ்வர்ணலேகா, இன்று குடும்பப் பெண்ணாக உல்லாச பவனத்துக்குள்ளே உலவிக் கொண்டிருந்தாள்.

கோடானு கோடி இளைஞர்களின் கனவுக் கன்னியாக விளங்கியவள், இன்று ரவி ஒருவனுக்கே உடலாலும் உள்ளத்தாலும் உரிய பொருளாகி விட்டாள்.

தமிழோடு இந்திப் பட உலகிலும் தனியாட்சி நடத்திக் கொண்டிருந்த நடிகை ஸ்வர்ணலேகாவுக்கும், ஆலைகள் பலவற்றுக்கு அதிபரான பரமசிவம் பிள்ளையின் ஒரே புதல்வன் ரவிக்கும் பிரமாதமாகத் திருமணம் நடைபெற்று இன்றோடு ஒரு வார காலமாகியும் 'உல்லாச பவனம்' இன்னும் தன் பேரழகு குறையாமல் புது மணப் பெண்ணைப் போலப் பொலிவுடன் நின்றது. நாளொரு விருந்தும், பொழுதொரு கச்சேரி, கலை விருந்துகளுமாகத் தடபுடல் பட்ட உல்லாச பவனம், இன்று தான் கொஞ்சம் கொஞ்சமாகச் சற்று அமைதியாகிக் கொண்டிருந்தது.

நேற்று வரையில் இருந்த உள்ளூர் உறவினர்கள்கூட, இன்று காலையில்தான் ஒருவர் பின் ஒருவராக வெளியேறியிருந்தனர். இன்றைய இரவில்தான் மணமகன் ரவியும், மணமகள் ஸ்வர்ணலேகாவும் சந்திக்க விருந்தார்கள்.

உல்லாச பவனத்தின் மூன்றடுக்கு மாடியின் நடுவில் இருந்த அழகிய ஹாலிலே, எழில் மேடை போன்று புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. அம்மேடையில், வண்ணமலர்த் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய, பளபளப்பான தோதகத்திக் கட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. பார்க்கப் பரவசமூட்டும் பச்சை நிறப் பட்டு மெத்தைகள் இரண்டு, அக்கட்டிலின் மேல் விரிக்கப்பட்டிருந்தன. அழகிய ரோஜா மலரின் மெல்லிதழ்களோடு மணங்கமழும் மல்லிகை, முறுவலிக்கும் முல்லை முதலியன பட்டு மெத்தைகளின் மேல் பரப்பி வைக்கப்பட்டிருந்தன.

அம் மலர்மஞ்சத்தின் ஒரு பக்கத்தில் உயரமான முக்காலியொன்றின் மேல் பன்னீர், பத்தி, புனுகு, ஜவ்வாது போன்ற வாசனைத் திரவியங்களுடன் கூடிய வெள்ளித் தாம்பாளத் தட்டு வைக்கப்பட்டிருந்தது. இன்னொரு பக்கத்தில், ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, கொய்யா, மாதுளை போன்ற தீஞ்சுவைக் கனிகள் இருந்தன. கற்கண்டும் வறுத்த முந்திரிப் பருப்பும் இன்



நட்சத்திரம்!

இரா. கலைச்செல்வன்



ஒரு தாம்பாளத்திலே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஆசைக் கனவுகளை மூட்டி வளர்த்த அழகிய பெண்ணை, இன்னும் சற்று நேரத்தில் சந்திக்கப் போகும் இன்ப நினைப்போடு, மலர் மஞ்சத்தில் அமர்ந்திருந்தான் ரவி. ஆசைக் கனவுகளிலே மூழ்கிக் கிடந்த ரவிக்கு, ஸ்வர்ணலேகா வராமல் கழியும் ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகம்போலத் தோன்றியது. ''இன்னும் ஏன் அவள் வரவில்லை?'' என்றவன் இதயக் கடலிலே வினாவலைகள் எழுந்தடித்துக் கொண்டிருந்தன.

அலை மோதும் எண்ணத்தின் திசையை மாற்ற விரும்பிய ரவி, வெள்ளித் தாம்பாளத் தட்டிலே கிடந்த அழகு ரோஜா மலர் ஒன்றை எடுத்து, மெல்ல முகர்ந்தான். இதழ் மலர்ந்து சிரிக்கும் எழில் மலரைக் கூர்ந்து நோக்கினான். மலர்ந்த மலரின் நடுவிலே கூட, ஸ்வர்ணலேகாவின் மதிமுகம் தோன்றிப் புன்முறுவல் பூப்பது போலத் தோன்றியது. ஸ்வர்ணலேகாவின் செழுமை நிறைந்த கன்னக் கதுப்புகளைச் சுவைத்து அனுபவிப்பதாக எண்ணிக் கொண்டே, ஒவ்வொரு ரோஜா இதழாகத் தின்று தீர்த்துக் கொண்டிருந்தான் ரவி.

ஆலைகள் பலவற்றின் அதிபரும் கோடீசுவரருமான பரமசிவம் பிள்ளையின் ஆசைக்கும் ஆஸ்திக்கும் ஒரே மகன் ரவிச்சந்திரன். சிறு வயதிலேயே தாயை இழந்த ரவியைத் தாயில்லாக் குறை தோன்றாதபடி, சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார் தந்தை. அழகு மங்கையரின் இன்பத் தாலாட்டிலே தூங்கிக் கொஞ்சு மொழிப் பெண்களின் குயிலிசையில் துயிலெழுந்து பழக்கப்பட்டவன் ரவி. பாலும் பழமும் சாப்பிடக்கூட அவனுக்குப் பாவையரின் பாடல் தேவைப்படும். இப்படிச் செல்வச் செழிப்பிலும், செல்லக் களிப்பிலுமாக வளர்ந்த ரவி, வாலிபப் பருவமடைந்தபோது ஆடல் பாடல்களில் அக்கறையுள்ளவனாகவும், சினிமா, நாடகப் பித்தனாகவும் மாறி விட்டான்.

நாளொரு சினிமாவிலும் பொழுதொரு வானொலி இசையிலுமாகப் பொழுதைக் கழிய விட்டுக் கொண்டிருந்த ரவி, கட்டுடலும் கலையழகும் கனிமொழியும் படைத்த நடிகை ஸ்வர்ணலேகாவை ஓர் அழகுத் தேவதையாக, கலைப் பொக்கிஷமாக எண்ணி, அவளைத் தன் மனைவியாக அடைவதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு விட்டான்.

மகனுக்கு மணம் முடிக்க விரும்பிய பரமசிவம் பிள்ளை, ரவியின் லட்சியத்தைக் கேட்டு முதலில் திடுக்கிட்டுத்தான் போய் விட்டார். எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும் மகனின் மனத்தை மாற்ற முடியவில்லை. ''மணந்தால் ஸ்வர்ணலேகாவை மணப்பேன்! இல்லாவிடில் மரணத்தை அணைப்பேன்!'' என்று ரவி உறுதியாகச் சினிமா வசனம் பேசி விடவே, பாசமிக்க பிள்ளையவர்களால் அதை நிறைவேற்றி வைப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

தாயில்லாப் பிள்ளையான ரவியின் இன்பமே தன் வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருந்த நடிகை ஸ்வர்ணலேகாவை இழந்த திரையுலகம், ஒளியிழந்து இருண்டு விட்டதாகப் படவுலகப் பிரமுகர்களும் பத்திரிகையாளர்களும் பெரிதாக ஓலமிடலாயினர்.

இன்ப மயக்கத்திலே கற்பனைச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த ரவி, கதவு திறக்கும் ஓசை கேட்டே தன்னுணர்வு பெற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். தங்கத் தாம்பாளத்திலே பாலும் பழமும் ஏந்தி, அழகு மயிலாக, ஆனந்த உருவாக, இன்பச் சிலையாக, சரடி பின்னித் தடுமாறத் தலைகவிழ்ந்து வந்து கொண்டிருந்த ஸ்வர்ணலேகாவைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தான்.

கொண்டு வந்த பழத் தட்டை மேஜை யொன்றின்மீது வைத்து விட்டுக் கணவனது காலடிகளில் வீழ்ந்து வணங்கினாள் ஸ்வர்ணலேகா. முதலிரவுக் காட்சிகளில் பல தடவை நடித்துப் பழகிய பழக்கம், வாழ்க்கையிலும் சமயத்தில் நினைவுக்கு வந்து உதவியது. கணவனை மதிப்புக்குரிய தெய்வமாகப் பாவித்துத்தான் காலடிகளில் வீழ்ந்து வணங்கினாளோ, அன்றி என்ன செய்ய வேண்டும் என்று புரியாத நிலையிலே, பழகிய நடிப்பைப் பயன்படுத்திக் கொண்டாளோ தெரியாது.

பாதங்களில் விழுந்து வணங்கிய பாவையை வாரியெடுத்துப் பஞ்சணையில் தன் பக்கத்தில் அமரச் செய்தான் ரவி. நாணத்தால் முகம் சிவக்க, எதிரில் அமர்ந்திருந்த கணவனை ஏறிட்டு நோக்க முடியாமல் தலை கவிழ்ந்திருந்தாள் லேகா. ''கணவனது கால்களில் விழுந்து வணங்கி, அவன் வாரியெடுத்துப் பக்கத்தில் அமரச் செய்தபின்பும் அவனை ஏறிட்டு நோக்காமல் தலைகவிழ்ந்து, புன்னகை பூத்திருக்க வேண்டும்'' என்று திரைப்படத்தில் நடிக்க டைரக்டர் சொல்லிக் கொடுத்த பாடம் நன்றாக நினைவு வந்து உதவியது! அவள் நெஞ்சமெல்லாம் இனித்தது.

பட்டுப் போல் மென்மையானதும், ரோஜா போல் சிவந்ததுமான ஸ்வர்ண லேகாவின்

கதுப்புக் கன்னங்களை இலேசாகத் தொட்டு, மலர்முகத்தை மேல் நோக்கி நிமிர்த்தினான். லேகாவும் தான் ஏற்கனவே திரைப்படங்களில் நடித்தது போல மெல்லத் தலை நிமிர்ந்து ரவியை நோக்கிப் புன்னகை சிந்தியபடியே கண் மலர்ந்தாள்.

அப்போது அவள் கண்களில் தோன்றிய கனிவையும், வில் புருவங்கள் நெற்றி மேலேறி நெளிந்தாடிய அழகையும், முகத்தில் மலர்ந்த முறுவலையும் கண்டு இன்ப வெறி கொண்டான் ரவி. ''ஸ்வர்ணு!'' என்று குழைந்தபடியே கவிழ்ந்திருக்கும் முகமலரை வலக் கையால் மெல்ல நிமிர்த்தினான்.

ஆனால் ஸ்வர்ணலேகாவோ, அந்நேரம்தான் என்ன செய்ய வேண்டும், என்ன பேசப் பேச வேண்டும் என்று அறியாமல் குழம்பினாள். ஒவ்வொரு படத்திலும் அந்தப் படத்துக்குத் தகுந்தபடி பேசியும் ஆடிப் பாடியும் நடித்திருக்கிறாள். அதுவும்கூட வசனகர்த்தா எழுதிக் கொடுத்து ஒப்பித்ததை, டைரக்டர் சொல்லிக் கொடுத்தபடி நடித்தும் பின்னணி இசைக்குத் தகுந்தபடி வாயசைத்து ஆடியும் இருக்கிறாள். தானாகத் தன் இஷ்டம் போல் எதையும் செய்ததில்லை. எனவேதான், இப்போது என்ன பேச வேண்டும், எப்படித் தன் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க வேண்டும் என்று அறியாமல் குழம்பி மௌனமானாள்.

செயலற்றுக் கிடந்த லேகாவைக் கண்டு வியப்படைந்தான் ரவி. அப்போது லேகா நடித்த ''மயிலும் குயிலும்'' என்ற படத்தின் முதல் இரவுக் காட்சி நினைவுக்கு வந்து, நெஞ்செலாம் இனித்தது. அப்படத்திலே நடிகர் நடேசனோடு முதலிரவுக் காட்சியில் நடித்த லேகா, கணவனது காலில் விழுந்து எழுந்தவுடன் மயில் போல ஆடிக் குயில் போலப் பாடுகிறாள். வாழ்க்கையிலும் அது போலவே லேகா ஆடிப் பாடுவாள் என்று எதிர்பார்த்த ரவி, ஏமாற்றமடைந்தான்.

இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''ஸ்வர்ணு !.... 'மயிலும் குயிலும்' என்ற படத்தின் முதலிரவுக் காட்சியில், உன் கணவனாக நடித்த நடேசன் முன்னால் ஆடிப் பாடினாயே, அது போல் என் முன்னால் ஒரு தடவை ஆடிக் காட்டு லேகா!'' என்று குழைந்த குரலில் வேண்டினான்.

ஆசிரியர் கேட்ட கேள்விக்குப் பதில் தெரியாத மாணவனைப் போலப் பரிதாபமாக விழித்தாள் லேகா! அவள் நடித்துச் சக்கைப் போடு போட்ட அப்படம் வெளி வந்து, பல வருடங்கள் உருண்டோடி விட்டன. அதில் நடிகர் நடேசனோடு தான் நடித்தது மட்டுந்தான் நினைவிருந்ததே யொழிய, எப்படி ஆடினோம், என்ன பாட்டுப் பாடுவது போல வாயசைத்து நடித்தோமென்பதெல்லாம் அவள் நினைவுக்கு வரவில்லை. ஆனால் அப்போது, லேகாவின் பிரியனாயிருந்த ரவி மட்டும் பல தடவைகள் அந்தப் படத்தைப் பார்த்து, ஒவ்வொரு காட்சியையும் உள்ளத்தில் நன்கு பதிய வைத்திருந்தான்.

லேகாவின் பாடு பெருந் திண்டாட்டமாகி விட்டது. ''அது...அந்தப் படம் வெளி வந்து, பல வருஷங்களாகி விட்டன. அதில் எப்படி நடித்தேன் என்பதெல்லாம் இப்போது எனக்கு நினைவில்லை. அதன் பிறகு எத்தனையோ படங்களில் எப்படியெல்லாமோ நடித்து விட்டேன். ஒவ்வொரு படத்திலும் டைரக்டர் சொல்லிக் கொடுக்கிறபடி நடிப்பேனே தவிர, என் இஷ்டப்படி நடிக்க மாட்டேன். பாட்டுப் பாடவும் எனக்கு வராது. பின்னணிப் பாடலுக்கு ஏற்ப வாயசைப்பேனே தவிர, சொந்தக் குரலில் நான் பாடினால் கேட்க நன்றாயிராது!''

கைக்கெட்டிய கனியைச் சுவைத்துத் தின்ன முடியாத தவிப்பு, ரவியின் அழகு முகத்திலே பிரதிபலித்தது. இருந்தாலும் மனந் தளராமல், ''பரவாயில்லை லேகா! உனக்கு ஆடத் தெரியாவிட்டாலும் பாட முடியாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. அழகுச் சிலை போல நீ என் அருகிலிருந்தால் போதும்! பயனடைவேன்!'' என்று ஆறுதலோடு பேசினான்.

திரைப் படத்திலே கூடக் கேட்க முடியாத கருத்துள்ள இவ்வாசகங்களைக் கேட்டுப் பூரித்துப் போனாள் ஸ்வர்ணலேகா. பழையபடி ஏதாவது நடிப்பு, ஆடல், பாடலென்று பேச்செடுத்துவிடுவானோ என்று மனத்துக்குள் எண்ணிப் பயந்த லேகா, ரவியின் சிந்தனைக் குதிரை செல்லும் திசையை மாற்றிவிட நினைத்தாள்.

சமீபத்தில் நடித்த ''பூம்பாவை'' என்ற படத்திலே தான் நடித்த காட்சியொன்று லேகாவின் நினைவுக்கு வந்தது. சோர்வடைந்து வீடு திரும்பிய கணவனை மகிழ்விக்கச் சிற்றுண்டி கொடுத்துவிட்டு, அவன் சில தினங்களுக்கு முன் எடுத்துக் கொடுத்த சேலை நன்றாயிருக்கிறதெனப் புகழ்ந்து பேசுவதாக ஒரு காட்சி. அதே யுக்தியைக் கையாண்டு ரவியின் எண்ணத்துக்குத் தடை போட முயன்றாள் லேகா.

''அத்தான்!... நீங்கள் எடுத்த இந்த முகூர்த்தப் புடவை நன்றாக இருக்கிறதே! என்ன விலை இது?'' என்றாள் சாதுர்யமாக.

லேகாவின் திரைப்பட நடிப்புச் சாமர்த்தியம் எட்டுச் சுரைக்காய் போலப் பயனில்லாமல் போய்விட்டது. சேலை பற்றிய பேச்செடுத்ததும் விருட்டென்று எழுந்த ரவி, பீரோவைத் திறந்து, சிறு பொட்டலமொன்றை எடுத்து வந்தான். ''ஸ்வர்ணு! இதைப் பிரித்து என்ன இருக்கிறதென்று பார்!'' என்று ஆவலோடு அதை லேகாவின் மலர்க் கரங்களிலே போட்டான்.

ஆவலோடு பிரித்துப் பார்த்த லேகா, ''புடவை! ஏது அத்தான் இது? ரொம்ப நல்லா இருக்கே?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''இந்தப் புடவையைப் பார்த்ததும் உனக்கு என்ன நினைவுக்கு வருகிறது லேகா?'' என்று புதிர் போட்டான் ரவி.

நன்கு சிந்தித்துப் பார்த்தவள் ''ஒன்றும் நினைவுக்கு வரவில்லையே!'' என்றாள் பயந்த குரலில்.

''ஸ்வர்ணு! என் ஸ்வர்ணப் பிம்பமே! உண்மையாகவே உனக்கு அந்தக் காட்சி நினைவுக்கு வரவில்லையா? சரித்திரக் கதைப் படமொன்றில் நடித்த நீ கதாநாயகனை



தில்லியில் தமிழ் நாடகம் போடுகிறார்கள், அதுவும் சேவாஸ்டேஜ் பல இடங்களில் நடித்துப் புகழ்பெற்ற 'வடிவேலு வாத்தியார்' நாடகம் என்றால், இந்த அமெச்சூர் முயற்சி அப்படியொன்றும் பிரமாதமாக இருக்காது என்ற எண்ணத்துடன் போனவர்கள் எல்லாரும் ஒவ்வொரு காட்சிக்கும் 'ஆஹா' போடும்படி ஆயிற்று. நாடகத்தின் டைரக்டர் சுப்புடு என்று 'அறிந்தபோது ஒரு 'டபிள் ஆஹா' போட்டார்கள். சுப்புடு டைரக்ட் செய்த நாடகம் நன்றாக இல்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்?

◆◆

முதன் முதலாக மலர் வனத்தில் சந்தித்தாயே, அந்தக் காட்சி உன் நினைவுக்கு வரவில்லையா லேகா? சோழ நாட்டு இளவரசியாக வந்து அந்த வீரனை மதிமயங்கச் செய்தபோது அணிந்திருந்தாயே அதே ஆடைகள் தான் இவை! அப்போது நீ அணிந்திருந்த ஆபரணங்கள், உடுத்தியிருந்த உடை, சந்தித்த பூங்கா, பார்த்த பார்வை, நாணித் தலை குனிந்த காட்சி எல்லாம் இன்றும் என் நினைவிலிருக்கின்றன! லேகா!...சீக்கிரமே இவ்வாடைகளை அணிந்து கொண்டு சோழ நாட்டு இளவரசியாக என் முன் வரவேண்டும்!...நான்தான் அந்த வீரக் கதாநாயகன்! உம்!... எங்கே, சீக்கிரம்!'' என்று துரிதப்படுத்தினான்.

ரவியின் ஆசை உரைகளைக் கேட்டு, உள்ளபடியே அசந்துவிட்டாள் லேகா. பூமி இரு கூறாகப் பிளந்து, தான் எங்கோ அதல பாதாளத்தை நோக்கித் தலை கீழாக விழுந்து கொண்டிருப்பது போன்றதொரு பிரமை ஏற்பட்டது.

''அத்தான்!... அதே ஆடை அணிகள் இருந்தால் மட்டும் போதுமா? சரித்திர காலத்திலிருந்த மாதிரி யெல்லாம் ஒப்பனை செய்ய எனக்குத் தெரியாதே? இளவரசி போல ஆபரணங்கள் அணியவும், உடைகள் உடுத்தவும், கூந்தல் அலங்காரம் செய்யவும் 'மேக்கப்மேன்' வேண்டுமே! அன்று 'மேக்கப்' செய்த ஆள்கூட இன்று இல்லையே! அந்த ஆள் காலமாகி ஆண்டுகள் பல ஓடி விட்டனவே! வேறொரு நபர் வந்தாலும் உங்கள் உள்ளத்திலிருக்கும் இளவரசி போல ஒப்பனை செய்ய முடியுமா?'' என்று விளக்கமாக உரைத்தாள்.

லேகாவின் பணிவான சொற்கள் கூட ரவியின் செவிகளில் சோக கீதமாக ஒலித்தன. ஏக்கமும், ஏமாற்றமும் சேர்ந்து ரவியின் முகத்திலே பிரதிபலித்தன. தினவெடுத்த ரவியின் கரங்கள், தலை முடியைத் தாறுமாறாகக் கலைத்தன.


இளமையும் அழகும் கொண்டு, இணையில்லா நடிப்பாலும் திரை உலகில் சுடர் விட்டுப் பிரகாசித்த நடிகை ஸ்வர்ண லேகாவை மணந்துகொண்டு எப்படி யெல்லாம் இன்ப வாழ்வு வாழவேண்டுமென்று கற்பனைக் கோட்டை கட்டியிருந்தான்! அந்தக் கோட்டையெல்லாம் இன்று இடிந்து தான் தூளாகச் சிதறிவிட்டன! இன்பக் கற்பனைகளெல்லாம் கைக்கு எட்டாத கானல் நீராகப் போய் விட்டனவே! இவ்வளவு பெரும் ஏமாற்றங்களை யெல்லாம் எப்படித் தாங்குவான் ரவி?


''லேகா!... பாடத் தெரியாதென்றாய்! பரவாயில்லையென்றேன்! ஆடத் தெரியாதென்றாய்! அதையும் ஏற்றுக் கொண்டேன்! அழகாக உடை உடுத்தி ஆபரணங்களை அணிந்து கண்களுக்கு விருந்தளிக்கக்கூட 'மேக்கப்மேன்' உதவி வேண்டுமென்கிறாயே, என் செய்வேன்?'' என்று புலம்பியபடியே அறையை விட்டு வெளியே வந்து பால்கனியில் நின்று விரிந்த வானத்தை நோக்கினான்.

பிரகாசமான ஒளியோடு, நீல வானில் நின்று பிரகாசித்துக் கொண்டிருந்த நட்சத்திரமொன்று கீழ் நோக்கி விழுந்து கொண்டிருந்தது. பூமியில் விழுந்ததும் அதன் ஒளியெல்லாம் மங்கிக் கூழாங்கல்லாக மாறி மதிப்பிழந்து விடும். விண்ணிலிருக்கும் போதிருந்த 'நட்சத்திர' மதிப்பு மண்ணில் விழுந்தவுடன் மறைந்து விடும்.

திரை வானில் அழகு நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருந்த ஸ்வர்ணலேகா வீட்டு விளக்கானதும் வெளிச்சம் குறைந்து விட்டாள். அந்த வெளிச்சம் வீட்டு வேலைகளுக்கு உதவுமே தவிர, விண்ணிலிருந்து சுடர் விட்டுக் காண்போரை யெல்லாம் களிப்படையச் செய்யாது!


ராஜயோகம் -17- கதை: தம்பு * சித்திரம்: செல்லம்
ஆ, யார் புதிதாயிருக்கிறதே? நான் சென்றமுறை வந்தபோது பார்க்கவில்லையே?
சமூக சேவா சங்கத் தலைவி ரமாபாய் கொண்டுவந்து சேர்த்தாள். இவள் தான் ஒரு ராஜபத்தினி என்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். தூக்கத்தில் நடக்கிறாள்.
என்னை என்ன சொல்கிறீர்கள்? காது செவிடாகிப்போய்விட்டதே.
இவளுக்கு விதம் விதமாய் வியாதி ஏற்படுகிறது.
காது வெறும் செவிடா? ஏன் மலையப்பன்! இந்த நர்ஸிங் ஹோமில் எனக்கும் பங்கு உண்டென்பதை மறந்து விடுகிறீர்? இங்கே சேருகிறவர்களைப் பற்றி எனக்கு உடனுக்குடனே தகவல் தெரிவிப்பதில்லை. இங்கே சில முற்றிப்போன பைத்தியங்களும் இருப்பது நல்லது... இவள் அழகாயில்லை? உடம்பு...
ரம்பா ஊர்வசிகளைத் திருச் சந்திரன் அனுப்பியிருக்கிறானா என்ன?
பைத்தியத்திலும் ஓர் அழகு! படித்த பைத்தியமாகிரும்! ராஜா விஷயம் சீக்கிரம் தீர்ந்துவிடும். பிறகு இவளைக் கவனித்துக் கொள்கிறேன். வியாதியை முற்றச் செய்யுங்கள்.
அப்படி எல்லாம்...
உன்னை நன்றாகக் கவனித்துக்கொள்ளும்படி சொல்லியிருக்கிறேன். கவலைப் படாதே.
என்னைத் தொட்டால் நீ வெறும் 'வாயிட்' குழந்தையாக மாறும்படி சபித்துவிடுவேன்.


ஹா! பிரின்ஸ்பாலா? காலேஜில் தான் இடம் கொடுக்கவில்லை. இங்கிருந்தும் விரட்ட வந்து விட்டீரா?
இல்லை தம்பி! நான் வக்கீல் வீராசாமி!
இவன் துரைசாமி. இவனை நீங்கள் முன்னேயே பார்த்திருக்கிறீர்கள். சிறிது கூடக் குணமடையவில்லை.
நான் போய் வருகிறேன். இவர்கள் எல்லாம் இப்படி சுற்றித் திரிகிறார்களே?
அவர்களை அறைக்குள் வைத்துத் தாளிடுவதில்லை. ஏதாவது எக்கச்சக்கமாக நடந்துவிடும். அவர்கள் தாங்கள் வைத்தியம், நோயாளி என்று நினைத்துக் கொள்ளாதிருப்பதற்காக அவர்களுக்குப் பழக்கமான உடையைத் தரித்துவிடுகிறோம்.
பத்தாயிரம் ரூபாய் பணம் அனுப்பிவையுங்கள்.
அன்று மாலையில்.
யோகமா? இங்கேயா வந்தீர்கள்?
கூடைப் பருப்பு படி மூன்றேமுக்கால் ரூபாய்க்குக் குறைத்துக் கொடுக்க மாட்டேன்.


யோகம், நான் வக்கீல் வீராசாமி அல்ல. நீங்கள் செவிடு என்று நம்புவதற்கு.
அப்படியானால், நான் காற்று வாங்க வந்தேன் மிஸ்டர்...
...துரைசாமி, துரையென்றும் அழைக்கலாம். ஆனால் நான் ஷெர்லாக் ஹோம்ஸிடம் குருகுல வாசம் செய்திருக்கிறேன். நீங்கள் எனக்கு ரிஷிபத்தினி அல்ல. நான் உங்களுக்குப் புத்தகத்தைக் கிழிக்கும் பைத்திய துரை அல்ல.
நீங்கள் ஒரு ஸி.ஐ.டி.
ஆமாம். நீங்கள் வக்கீலிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.
உங்களுக்கு இவர்களைப் பற்றி எல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கும். விபரமாகச் சொல்லுங்கள்.
துரைசாமி, யோகத்திடம் விவரங்களைச் சொல்கிறான். அவளும் தன்னைப் பற்றிச் சொல்கிறாள்.
நாம் ஒருவரை யொருவர் சந்தித்துப் பேச விரும்பினால் தலையைத் திமிர்த்தி உயரே பார்ப்போம்.
சந்தித்துக் கொள்ள முடியாவிட்டால் ஒரு காகிதத்தையோ, இலையையோ சுருட்டி ஒருவர் அறைக்குள் மற்றொருவர் போடுவோம்.
தொடரும்







சிரிக்கவும் சிந்திக்கவும்



பிரிட்டனில் அரசாங்க அதிகாரிகளுள் மிக அதிகமாகப் பரிகாசம் செய்யப்படும் பெருமை வருமான வரி இலாகாவைச் சேர்ந்தது. ஜனரஞ்சக எழுத்தாளர் அவர்களைக் 'கொள்ளைக்காரர்கள்' என்று குறிப்பிடுவது வழக்கம். அவர்கள் பிறப்பிக்கும் நோட்டீஸ்கள், 'பயமுறுத்திப் பணம் பறிக்கும் கடிதங்கள்' என்று ஓர் ஆசிரியர் ஒரு வேடிக்கை வழக்குக் கதை எழுதியிருக்கிறார்.

சென்ற வருடம், பம்பாயின் பிரபல நட்சத்திரமான மீனாகுமாரியின் வீட்டில் சுமார் மூன்று லட்சம் ரூபாய் ரொக்கமாகத் திருட்டுப் போயிற்று. போலீஸ்காரர்கள் திருடனிடமிருந்து பணத்தைக் கைப்பற்றியபோது வருமானவரி அதிகாரிகள் அது தங்கள் பணம் என்று கூறிப் பறித்துக் கொண்டனர். இதே போன்று இன்னும் சில திருட்டுச் சம்பவங்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

சென்ற வாரம் கோவா ராஜ்யத்தின் தலைநகரான பாஞ்சாவில், கமலாகாந்த் லக்கோக்கார் என்ற ஒருவர் ஒரு பாங்கில் 50,000 பணம் வாங்கிக் கொண்டு வந்தபோது கொள்ளைக்காரர்கள் அவரை டாக்ஸியில் ஏற்றிச் சென்று கொலை செய்து பணத்தைப் பறித்துக் கொண்டனர். ஆனால், அவர்கள் அகப்பட்டுக் கொண்டுவிட்டனர். ஆனால் வழக்கம் போல் வருமானவரி இலாகா அதிகாரிகள் இந்தப் பணம் எப்படி வந்தது என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை.

பாங்கிலிருந்து அரை லட்சம் ரூபாய் பணம் வாங்கிவந்த கமலாகாந்த், கோவா ராஜ்ய முதன் மந்திரியின் வீட்டுக் குமாஸ்தாவாம்! வாங்கிரல் பெரிய இடம்!

பதுக்கல் பணத்தை வெளிக் கொண்டுவர அதிகாரிகளே சோதனை செய்வதோடு, திருடர்களையும் உபயோகிக்கலாம் என்றும் அவர்களுக்குப் பரிசு கொடுக்கலாமென்றும் சிலர் எண்ணக் கூடும். பத்தாயிரம், இருபதினாயிரம் பரிசு கிடைப்பதென்றால் திருட்டுக் குற்றத்துக்காக ஒரு வருடம் சிறையிலிருக்கத் தயாராய் எத்தனையோ பேர் இருப்பார்களே!

ஃ ஃ ஃ

'கோடீஸ்வரர்கள் திடீர்மரணம்' என்று ஒரு கதை படித்தேன். ஒரு தேசத்தில் பெரிய கோடீசுவரர்கள் பலர் திடீர், திடீரென்று இறந்து போய் விடுகிறார்கள். போலீஸ் இலாகாவின் நாய்களாலே துப்புத் துலக்க முடியவில்லை. சட்டசபையில் நிதிமந்திரி தமது வருடாந்தர வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துக் கொள்ளும் நாள் வருகிறது. அன்று அதைச் சமர்ப்பித்துக் கொண்டுவிட்டு அவர் சொல்கிறார்: ''நான் இந்த வருடம் வரவு செலவைச் சரிக்கட்டி விட்டேன். புது வரிகள் எதுவும் போடவில்லை. இருபது இருபத்தைந்து கோடீசுவரர்கள் மரணமடைந்ததால் இப்படிச் செய்வது சாத்தியமாயிற்று. அவர்கள் சொத்திலிருந்து கோடிக்கணக்கில் 'எஸ்டேட் வரி' கிடைத்தது. அவர்கள் மரணமடைந்ததற்கு நான்தான் காரணம். அவர்களுக்கு என் வீட்டில் அளித்த தனிப்பட்ட விருந்துகளில் விஷத்தைக் கலக்க ஏற்பாடு செய்திருந்தேன்'' நிதி மந்திரி இவ்விதம் கூறிச் சட்ட சபையிலேயே தானும் உயிர் விட்டு விடுகிறார்!

ஃ ஃ ஃ

பர்மா அரசாங்கம் சில தினங்களுக்கு முன்னர் ஒரு புரட்சிகரமான உத்தரவு பிறப்பித்தது. அத்தகைய உத்தரவு இந்தியாவில் பிறந்திருந்தால் அடுத்த இருபத்துநான்கு மணி நேரத்திற்குள்.

மாணவர்கள் (தமிழ் நாட்டு மாணவர்களைத் தவிர மற்றவர்கள்) சட்ட சபைக்குள் புகுந்து மேஜை, நாற்காலி நிக்ரகம் செய்திருப்பார்கள். முதல் மந்திரி, கல்வி மந்திரிகளின் பங்களாக்களைச் சுற்றி முற்றுகையிட்டு, 'முர்தாபாத்' பல்லவி பாடியிருப்பார்கள். பல உபாத்தியாயர்களும் பேராசிரியர்களும் கறுப்பு உடையணிந்து துக்கம் கொண்டாடியிருப்பார்கள். சில புத்தகப் பிரசுரகர்த்தர்கள் தங்களது மூன்றாவது மோட்டார் வண்டியை விற்றுவிட வேண்டியதுதான் என்று துக்ககரமான முடிவுக்கு வருவார்கள்.

அந்தப் பர்மிய அரசாங்கத்தின் உத்தரவு இதுதான்:

''எந்த அச்சாலய சொந்தக்காரரும், பிரசுரகர்த்தரும் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களுக்கு **நோட்ஸ்** அச்சடிக்கக் கூடாது.''

'நோட்ஸ் கிடையாது' என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் மாணவர்களின் கண்களில் நீர் அரும்பும். அவைதான் நமது உயர்தரக் கல்வியின் மூச்சு, உயிர் எல்லாமாக இருந்து வருகிறது. அதுவும் நமது தேசத்தில் தயாரிக்கப்படும் 'நோட்ஸ்கள்' கேவலம் குறிப்புகள் அல்ல. அவை கதாகாலட்சேப வகையைச் சேர்ந்தவை!

'நோட்ஸ்' என்றால் எத்தனை உபயோகங்கள்! உபாத்தியாயர் வகுப்பில் சொல்லிக் கொடுத்துத் தொண்டையைச் சிரமப்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை. மாணவர்கள் வருடம் முந்நூற்று அறுபது நாளும் பாடத்தைக் கட்டிக் கொண்டு அழாமல் பரீட்சையின்போது நோட்ஸ்களைப் படித்தால்போதும்.

அப்டன் சிங்க்ளயர் என்ற பிரபல அமெரிக்க நாவலாசிரியர் தாம் மாணவராயிருந்தபோது அவருக்கு ஒரு கவிஞரின் கவிதை பாடமாக வைக்கப் பட்டிருந்தால் அதை மட்டும் படிப்பதோடு இருக்க மாட்டாராம். அந்த ஆசிரியரின் கவிதைகள் எல்லாவற்றையுமே படித்து முடிப்பாராம்.



ஆனால் நமது மாணவர்கள் இத்தகைய பைத்தியக்காரத்தனமான காரியம் செய்ய வேண்டியிராது. ''ஏன், நோட்ஸ் இருப்பதனால் மூல பாடத்தையே கூடப் படிக்க மாட்டோம். இது சத்தியம்'' என்பார்கள்.

* * *

பல வருடங்களுக்கு முன்னர் தாக்கரேயின் நாவல் ஒன்றுக்கு நோட்ஸ் வெளியாகியிருந்தது. அதில் வரும் கதையை 'பெண்டென்னிஸ்' என்று இரு ஆண் பெண் பாத்திரங்கள் சொல்கிறார்கள். பரீட்சைக் கேள்வியில் அவர்களைப் பற்றிய கேள்வி கேட்கப்பட்டிருந்தது. பல மாணவர்கள் இந்தப் பேர்வழிகள் யார் என்று விழித்தார்கள். தாக்கரே எழுதிய நாவல்களுள் 'பெண்டென்னிஸ்' என்ற தலைப்புள்ள நாவல் ஒன்றுமிருக்கிறது. அதன் கதாநாயகன், கதாநாயகியாயிருக்குமோ என்று குழம்பினார்கள். காரணம் 'நோட்ஸில்' அந்த இரண்டு நபர்களைப் பற்றிக் குறிப்பிட விட்டுப் போயிருந்ததுதான்!

* * *

லோகசபையில் ஜனசங்கக் கட்சித் தலைவரான ஸ்ரீ திரிவேதி, ஓர் ஐ. வி. எஸ். உத்தியோகஸ்தருடன் (அயல் நாட்டு ஊழிய இலாகா அதிகாரி) பேசிக் கொண்டிருக்கிறார்:

ஸ்ரீ திரிவேதி: ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் அவர்கள்...

ஐ.எப்.எஸ். அதிகாரி: அவர் யார்!

அதிகாரியின் வெட்கக் கேடான கேள்வியைப் பற்றி ஸ்ரீ திரிவேதி லோக சபையில் பிரஸ்தாபித்தார்.

அந்த அதிகாரி, திமிர் பிடித்தவர் என்றோ மதாபிமானம், தேசாபிமானமற்றவர் என்றோ நான் கூறத் தயாராயில்லை. அவர் அநேகமாக 'நோட்ஸ்'கள் கேள்வி பதில்கள் இவற்றைப் படித்தே பரீட்சை தேறியிருக்கக் கூடு.. ''ஜகத் குரு சங்கராச்சாரியார் யார்? என்ற கேள்வியும் அதற்கான பதிலும் அவற்றில் இல்லாதிருந்திருக்கலாம்.

''யாரும் தன் வேலையாளுக்கு ஒரு பெரிய மனிதரல்ல'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதே போல் ''எந்த வக்கீலும் தம் குமாஸ்தாவுக்கு ஒரு பெரியவக்கீல் அல்ல.'' சட்ட சம்பந்தமான அவருடைய குறைகள் எல்லாம் குமாஸ்தாவுக்கு நன்றாகத் தெரியும். அவருக்குச் சட்ட 'பாயிண்ட்'கள் எடுத்துச் சொல்லிக் கொடுக்கும் திறமைசாலிகளான குமாஸ்தாக்கள் சிலரைப்பார்த்திருக்கிறேன். தம் வக்கீல் நீதி ஸ்தலத்தில் தவறாகப் பேசும்போது அவருக்குச் சைகை செய்து தவறை எடுத்துக் காண்பிக்கும் குமாஸ்தாக்களும் உண்டு. ஸர் நார்மன் பர்கெட் என்ற பிரபல பிரிட்டிஷ் வக்கீலின் குமாஸ்தா தமது யஜமானின் வழக்குகள் சம்பந்தப்பட்ட ருசிகரமான விஷயங்களைத் தெரிவிக்கும் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்.

சென்ற வாரம் சென்னையில் வக்கீல் குமாஸ்தாக்கள் சங்கத்தின் பொன் விழாக் கூட்டம் நடைபெற்றது. அதில் பேசிய ராஜாஜி, 'வக்கீல்களுக்குத் தனி உடை இருப்பது போல், வக்கீல் குமாஸ்தாக்களுக்கும் தனி உடை இருக்க வேண்டும்'' என்று யோசனை கூறினார். வக்கீல் குமாஸ்தாக்கள் இந்த யோசனையை வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இப்போது நீதி ஸ்தலங்களுக்குச் சென்றால் யார் வழக்காளிகள், யார் குமாஸ்தாக்கள் என்று அடையாளம் புரிவதில்லை.

குமாஸ்தாக்களும் நீண்ட பைகள் உள்ள நீல வர்ணக் கோட்டுகள் அணிந்து கொள்ளலாம். ஒரு தாளில் வழக்குக் கட்டுகள் வைக்கப்பட்டிருக்கும் உருவமுள்ள சின்னத்தைப் பையின்மீதுபொருத்திக் கொள்ளலாம்.

இப்போது ஸ்திரீ வக்கீல்கள் இருக்கிறார்கள். ஆனால் இதுவரை பெண் வக்கீல் குமாஸ்தாக்கள் என்று ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கூடிய சீக்கிரத்தில் அந்த வர்க்கமும் தோன்றக் கூடும். அவர்களும் குமாஸ்தாக்களைப் போன்ற கோட்டுகளை அணியலாம்.

— என். ஆர்.

புயல் தரும் படிப்பினை



சீறும் புயலுக்கு ஆளான தனுஷ்கோடியின் நிலையைக் கண்டறிந்து வருவதற்காக நமது பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைத்தோம். சற்றும் எதிர்பாராத சூழ்நிலையில் மரண தேவதை அங்கு எப்படிக் கோர தாண்டவமாடி, ஈவு இரக்கமில்லாமல் பல குடும்பங்களைக் கூண்டோடு கொள்ளை கொண்டு விட்டாள் என்பதை நிருபர் கூறும் பல சம்பவங்கள் தெரிவிக்கின்றன. அப்படிக் கூண்டோடு போகாமல், பெற்றோரையும், மக்களையும், கணவனையும், மனைவியையும் பறிகொடுத்து 'சாகக் கொடுத்து வைக்கவில்லையே' எனத் தவிப்பவர்களின் சோகக் கதைகளையும் கொண்டு வந்திருக்கிறார். அந்தக் கோரத்தையெல்லாம் வாசகர்களுக்குச் சொல்லி அவர்கள் மனத்தைப் புண்படுத்த நாம் விரும்பவில்லை.

அதே சமயத்தில் இந்தப் பெரு வெள்ளத் துன்பத்திலும் மனிதத் தன்மை மலர்ந்திருக்கும் அற்புதத்தையும் ஆங்காங்கு காண்கிறோம். அமானுஷிகமான சில விவரங்களையும் காண்கிறோம். புயல் செய்த உற்பாதம் மக்களைப் பாதிக்காமல் ஓரளவு பாதுகாத்திருக்க வேண்டியவர்கள் கவனமாக இல்லை என்பதைக் கண்டு ஒரு படிப்பினையும் பெறுகிறோம். இன்னலுக்கு ஆளாகி இன்று அரசாங்க உதவி பெறுவோரின் கூற்றுக்களிலிருந்து கஷ்ட நிவாரணப் பணி பற்றியும் சில உண்மைகளை அறிகிறோம். இவற்றை நேயர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

மேலே: 1. வெள்ளத்திலும் பாதிக்கப்படாத இராமநாத சுவாமி ஆலயம், 2. அக்னிதீர்த்தம் அருகேயுள்ள சங்கர மடம், எவ்விதச் சேதமுமடையவில்லை.

கீழே: வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாம்பன் பாலத்தின் ஒரு பகுதி. 2. பாம்பன் — மண்டபம் ரயில் விபத்துக்குப் பிறகு தண்டவாளங்கள் ஊஞ்சல்போல் வளைந்தாடுகின்றன.

மனிதத்தன்மை மலர்ந்தது!


சீறும் புயல் பற்றி வெளி இடத்துக்கு முதன் முதலில் தகவல் கொடுத்தவர் போலீஸ் வயர்லஸ் துறையைச் சேர்ந்த ஏட் சுப்பையா. இவர் கொடுத்த தகவலுக்குப் பின்தான் நிலைமை எல்லோருக்கும் தெரிந்தது. தம் உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றிய ஏட் சுப்பையாவின் தீரச் செயலைப் பார்ப்போம்:

தனுஷ்கோடியில் புயல் வேகமாக அடித்தது. உடனே ஏட் சுப்பையா வயர்லெஸ் செட்டின் மூலம் தகவல் தெரிவிக்க முயன்றார். அவருடைய வயர்லெஸ் செட்டை வெள்ளம் அடித்துச் சென்றது. சுப்பையா சிறிதும் கலங்காமல் தனுஷ்கோடி ரயில் நிலையத்துக்கு ஓடினார். அங்கு ரிசர்வ் வயர்லெஸ் செட் ஒன்று இருந்தது. ஆனால் இடுப்பளவு வெள்ளத்தில் சுப்பையா சிக்கிக் கொண்டார். ரயில் நிலையத்திலும் வெள்ளம் புகுந்து விட்டது. கழுத்து உயரத்துக்கு வெள்ளம் வந்து விட்டது. அந்த வெள்ளத்









1. இராமேசுவரம் போர்டு ஹை ஸ்கூல் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. 2. இராமேசுவரத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட வீடுகளின் அலங்கோலம்.

திரும்ப சுப்பையா நீரந்துடன் சென்று ரயில் நிலையத்திலிருந்த வயர்லெஸ் செட்டை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார். ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ஏர்கண்டிஷன் வகுப்புப் பெட்டியில் ஏறிக் கொண்டார். அங்கே வயர்லெஸ் செட்டை வைத்துவிட்டு வெள்ளத்தில் சிக்கித் தவித்தவர்களை ரயில் பெட்டிக்குள் இழுத்து இழுத்துப் போட்டார். தம் சக்திக்குட்பட்டு எத்தனை பேரைக் காப்பாற்ற முடியுமோ அத்தனை பேர்களைக் காப்பாற்றினார். இவர் சுமார் இருபது பேர்களைக் காப்பாற்றியதாகத் தெரிகிறது. தவித்தவர்களை முடிந்தமட்டும் காப்பாற்றி விட்டு வயர்லெஸ் செட்டை எடுத்தார். என்ன சோதனை! அதன் பேட்டரி தண்ணீரில் நனைந்து கெட்டுப் போய்விட்டது. வயர்லெஸ் வேலை செய்யவில்லை. ஏர்கண்டிஷன் பெட்டிக்குள் தாவிக் குதித்து அதிலிருந்த பேட்டரியைப் பிடுங்கி எடுத்து வந்து, வயர்லெஸ் செட்டுடன் இணைத்து அதனை இயக்கியே விட்டார். அரசாங்கத்துக்குத் தகவல் கொடுத்துவிட்டார். உடலெங்கும் பலத்த காயத்துடன் இவ்வீரர் தற்போது ஜுரத்தினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்.

மனிதர்தானா?

மனிதத் தன்மையோடு அரக்கத் தன்மையும் அங்கே இழைந்தோடுவதை எண்ணவே வேதனையாயுள்ளது. 'இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா?' என்று வெட்கப்படத் தான் தோன்றுகிறது.

ஒதுக்கப்படும் சடலங்களில் உள்ள நகைகளையும் வேறு சொத்துக்களையும் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் இப்பகுதிகளில் தலைமறைவாக இருந்து வருவதாகச் சொல்கிறார்கள். தீய எண்ணத்துடன் மறைந்துள்ளவர்கள் இறந்தவர் பட்டியலில் இடம் பெற்றாலும் ஆச்சரியமில்லை. எனினும் இப்படிப்பட்டவர்களைக் கண்காணிக்கத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது ஆறுதலாயிருக்கிறது.

தனுஷ்கோடியில் வாழ்ந்த மீனவர்கள் பொதுவாகத் தாங்கள் சேமித்த பணத்தைப் பெட்டிக்குள் வைத்துப் பூமிக்குள் குழி வெட்டிப் புதைத்து வைத்திருப்பது வழக்கமாம். இப்படி இங்குள்ள குடும்பங்கள்

வடநாட்டு யாத்திரிகர்கள் விபத்துக்குப் பின்னரும் விடாப்பிடியாக இராமேசுவர தரிசனத்துக்குச் செல்லுகின்றனர்.

தனுஷ்கோடியில் உயிர்தப்பியவர்கள் தங்கள் உடைமைகளோடு இராமேசுவரம் செல்கிறார்கள்.



சேர்த்து வைத்த செல்வத்தை யெல்லாம் கடல் கொள்ளை கொண்டு போய் விட்டது என்கிறார்கள்!

அமானுஷ்ய அதிசயம்

ரயில் வண்டிகளின் இரைச்சலும் ஆள் நடமாட்டமும் மிகுந்திருந்த ராமேசுவரம் இன்று வெறிச்சோடிக் கிடக்கிறது. ''எமன் பாதை ஒழிந்தாலும் இராமன் பாதை ஒழியாது'' என்ற மொழிக்கு ஏற்ப, பாதிக்கப்பட்டுள்ள இராமேசுவரம் மக்களுக்கு இராமநாத சுவாமி ஆலயமும், ஸ்ரீ காமகோடி பீட சங்கராசாரிய சுவாமிகளின் மடமும்தான் இன்று புகலிடமாக உள்ளன.

வெள்ளத்தினால் இராமேசுவரம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்ட போதிலும் எதுவுமே நடக்காதது போல் கம்பீரமாகக் காட்சி யளிப்பவை இராமநாதசுவாமி ஆலயமும் ஸ்ரீ சங்கராசாரியார் திருமடமும்தான்.

டிசம்பர் 23ந் தேதி காலை 3–30 மணிக்கு இராமநாதசுவாமி ஆலயத்தின் கீழச் சந்நிதித் தெருவில் மட்டுமே வெள்ளம் புகுந்தது: பெரிய அலைகள் மோதின. அக்கினி தீர்த்தம் அருகிலுள்ள சங்கராசாரியார் மடத்திலும் அலைகள் வந்து மோதின. கடல் கொந்தளிப்பைக் கண்ட ஆலய அர்ச்சகர்கள் ஹோமம் வளர்த்தனர்; மந்திரம் ஜபித்தனர். ஒரு பட்டுத் துண்டு எடுத்து அதில் தங்கக் காசு, திருமாங்கல்யம், தேங்காய் பழம், திருநீறு ஆகியவற்றை வைத்துக் கட்டினர். அதனை ஒரு தட்டில் வைத்துச் சமுத்திரத்தில் விட்டனர். சிறிது நேரத்தில் கடல் அலைகளின் வேகம் தணிந்தது. பொங்கியெழுந்த கடலன்னை அங்கு மங்கித் திரும்பினாள்.

இந்தத் தகவலை நமது பிரதிநிதியிடம் தெரிவித்த வயோதிகப் பிராமணர் ஒருவர் இது போன்ற பழைய சம்பவம் ஒன்றைப் பற்றியும் தகவல் கூறினார்.

1903ம் வருடம். சமுத்திரத்தில் இதேபோன்று கொந்தளிப்பு ஏற்பட்டது. இராமநாத சுவாமி கோயிலுக்குள்ளும் சிறிது வெள்ளம் புகுந்தது. அப்போதும் இம்மாதிரி ஹோமம் வளர்த்துத் தட்டில் தங்கக் காசும், தாலியும் வைத்து விடப்பட்டன. பின் வெள்ளம் வடிந்து விட்டது. இந்த விவரம் இராமநாதசுவாமி கோயிலின் செப்புப் பட்டயத்திலும் பொறிக்கப்பட்டிருக்கிறதாம்.

இராமேசுவரம் தேவஸ்தானம் அபயம் என்று வந்துள்ள மக்களுக்கு உணவு வழங்குவதுடன் உறையுளும் அளிக்கிறது. இராமநாத சுவாமி ஆலய தேவஸ்தானத்தின் மூலமாக ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பலசரக்குச் சாமான்களைக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. தெய்வப் பணியுடன், மனிதனையும் தெய்வமாகக் கருதிப் புரியும் பணி நடக்கிறது.

படிப்பினை

பயங்கரப் புயலாலும் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பினாலும் எவ்வளவு பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை. எனினும், இத்தனை உயிர்ச் சேதத்துக்கும், உடைமை நஷ்டத்துக்கும் மீன் வள இலாகாவினரும் அகில இந்திய வானொலித் துறையினரும் ஓரளவுக்குப் பொறுப்பு ஏற்றுக்தானாக வேண்டும் என்று நமது பிரதிநிதி எண்ணுகிறார்.

கடுமையான புயல் வீசப் போகிறது என்று வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். இந்தச் சமயங்களில் இப்பகுதிகளில் புயல் எச்சரிக்கை பற்றி மீன் வளத் துறையினர் தமுக்கு அடித்து அறிவிப்பது வழக்கமாம். ஆனால் டிசம்பர் 23ந் தேதியன்று வீசிய புயல் பற்றி மீன் வளத் துறையினர் தமுக்கு மூலம் ஊர் முழுவதற்கும் எவ்வித எச்சரிக்கையும் கொடுக்கவில்லை என்று கூறுகிறார்கள். புயல் வீசுவதற்கான அறிகுறிகள் தென்பட்டதும் தனுஷ்கோடி, இராமேசுவரம் பகுதி மக்கள் சமுதாய வானொலி நிலையம் சென்று, புயல் எச்சரிக்கை பற்றி ஏதாவது அறிவிப்பு கிடைக்குமா என்று கூர்ந்து கேட்டதாகவும் துரதிர்ஷ்டவசமாக வானிலை பற்றி வானொலியில் தகுந்த எச்சரிக்கை செய்யப்படவில்லை என்றும் தெரிகிறது. எனவே, மக்கள் புயல் இவ்வளவு கோரமாக இருக்கும் என்று நினைக்கவேயில்லையாம். தெரிந்திருந்தால் பலர் வெளியேறியிருக்க முடியும். உடைமைகளில் பலவும் காக்கப்பட்டிருக்கும். உயிர் தப்பிய மீனவர்கள் நமது பிரதிநிதியிடம் இவ்விவரங்களை மனக் கொதிப்புடனும் எல்லையற்ற துயரத்துடனும் கூறினார்கள்.

புயல் வீசிய தினத்தன்று தனுஷ்கோடி நோக்கிச் சென்ற ரயில் விபத்துக்குள்ளானதற்குக் காரணம் ரயில் அதிகாரிகளின் தவறான உத்தரவு என்பதும் ஒருவாறு தெரிய வருகிறது. கடலின் கோரக் கொந்தளிப்பையும், கொட்டும் மழையையும் பார்த்த டிரைவரும், ரயில் புறப்படுவதற்கு முன் ரயில் பாதையை மேற்பார்வையிட்டு வந்த பர்மனென்ட் வே


தனுஷ்கோடியில் சரிந்து விழுந்துள்ள வீடுகள்.



பேய்க்காற்றில் சாய்ந்த பெரிய மரம்.



இன்ஸ்பெக்டரும் 'கடலின் கோரக் கொந்தளிப்பிலும் புயலிலும் ரயில் போக முடியாது' என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது. ஸ்தலத்திலிருந்த மற்ற அதிகாரிகளும் நிலைமையை உணர்ந்து 'ரயில் போக முடியாது' என்று சொல்லியும், தொலைவில் மதுரையில் உள்ள ரயில்வே கண்ட்ரோல் அலுவலகம் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று நமது பிரதிநிதிக்குச் சொல்லப்படுகிறது. கண்ட்ரோல் அலுவலகத்தின் தவறான உத்தரவு எத்தனையோ உயிர்களைப் பலி கொண்டு விட்டது என்று இந்தப் பகுதி மக்கள் ஆத்திரமடைந்திருக்கின்றனர். மதுரை கண்ட்ரோல் அலுவலகம் சற்று உஷாராயிருந்திருந்தால் இந்தக் கோர ரயில் விபத்தை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.



வெள்ளத்தில் பாம்பன் பாலம் அடித்துச் செல்லப்பட்ட பின் மண்டபத்துக்கும் பாம்பனுக்குமிடையே படகு போக்குவரத்து.

இவ்விஷயங்கள் குறித்து ஆழ்ந்த அரசாங்க விசாரணை நடத்தி அவற்றின் முடிவுகளை மக்களுக்கு வெளியிட வேண்டும்.

மனிதரால் யாருடைய உயிரையும் மீட்டுத் தர முடியாது; விதியை யாரும் மீற முடியாது என்பது உண்மை. ஆனால் தைவதமான விதியைப் போலவே அரசாங்க விதிகளையும் இலாகாக்கள் மீறக் கூடாது என்பதும் அதே போல் உண்மையல்லவா?

இறந்தவர்களைப் பற்றிய விஷயம் ஒரு புறம் இருக்க, இருப்பவர்களைப் பற்றிய விஷயத்திலும் அரசாங்கம் சமயோசிதத்துடன் நடந்து கொள்ளவில்லை என்கிறார்கள். ராமேசுவரத்துக்கு யாத்திரை செய்து கொண்டேயிருப்போர் பலர். புயல் சமயத்தில் அவ்வாறு யாத்திரை சென்றோரைக் குறித்து அவரவரது இல்லங்களில் எவ்வளவு கவலை கொண்டிருப்பார்கள்? எனவே, உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதில் சிரத்தை காட்டிய அரசாங்கம் உயிரிழக்காமல் இருந்தவர்களின் பெயர்களையெல்லாம் வானொலியில் அறிவித்திருந்தால், பல குடும்பங்கள் அநாவசியமாகக் கலங்கியிராது.

கஷ்ட நிவாரண நிலைமை

வெள்ளத்தில் சிக்கிக் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு கட்டிய துணியுடனும், கைக் குழந்தைகளுடனும் உயிர் தப்பியவர்கள் மண்டபம் முகாமில் உள்ளவர்கள்; வெள்ளத்துக்கு மனைவி மக்களையும், சொத்துக்களையும் பறி கொடுத்தவர்கள்; உயிர் பிழைத்தால் போதும் என்று வந்திருப்பவர்கள். உணவுக்கும் உடைக்கும் அரசாங்கம் ஏற்பாடுகள் செய்து கொண்டு தான் வருகிறது. ஆனாலும் வாடைக் காற்றில் நடுக்கும் குளிரில் தவிப்பவர்களுக்கு உணவை விடக்கூட உடை முக்கியம், அது மானத்தைக் காக்க மட்டுமல்ல, உயிரையும் காப்பதற்கு அவசியம் என்பதை யாவரும் இன்னும் சிறிது நன்றாக உணர வேண்டும் என்று நம் பிரதிநிதி கூறுகிறார். இரவில் குளிர் தாங்காமல் மரக்கட்டை போல் குழந்தைகள் விறைத்துக் கொண்டு பரிதவிக்கும் காட்சியைக் காணக் கண்கள் நீரைச் சொரிகின்றன. "உணவுகூட வேண்டாம்; முதலில் போர்த்திக் கொள்ள ஏதாவது உடை கொடுங்கள்" என்று அகதிகளாக நிற்கும் பேதை மக்கள் முறையிடுகிறார்களாம்.

"மேல் துணிக்குக்கூட வழியில்லாமல் குளிரில் அவதிப்படுகிறோம். அதுதான் எங்களுக்கு முதலில் வேண்டும். அரசாங்கம் எங்களுக்கு மறு வாழ்வு கொடுக்கிற வரை எங்கள் உற்றார் உறவினர் உள்ள ஊர்களுக்கு அனுப்ப வழி செய்து கொடுங்கள். எங்கள் பெயரையும், உற்றார் உறவினர் பற்றியும் தகவலைப் பதிவு செய்து கொண்டு அனுப்பி விடுங்கள்" என்று அந்த முகாமில் உள்ளவர்கள் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'இந்த முறையீட்டை ஏற்றுக் கொண்டால் ஏராளமானவர்கள் பொய்த் தகவல் கொடுத்து நிவாரணத்தில் பங்கு கேட்பார்களோ?' என்று அதிகாரிகள் தயங்குவதாகச் சொல்லப்படுகிறது. கடமையில் காருண்யமும் கலந்திருக்க வேண்டிய சூழ்நிலை இது என்பதை மட்டும் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறோம்.

நிவாரணத்துக்காக அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருப்பது உண்மை. நல்ல காரியம். சொத்துக்களையும் உற்றார் உறவினரையும் இழந்து நடைப்பிணம் போல் உள்ளவர்களுக்கு மறு வாழ்வளிக்கத் தொகை ஒதுக்கியவர்கள், அரசாங்கத்தின் புகழ் பெற்ற காலதாமதத்துக்கு இடம் தராமல் விரைவில் பணியை நிறைவேற்றி நொந்த நெஞ்சங்களின் வாழ்த்தைப் பெற வேண்டும். அதிகாரிகள் பறந்து பறந்து வருகிற வேகத்துக்கேற்பப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகள் குறித்த காலத்தில் கிடைக்கவில்லை என்ற தற்போதுள்ள குறை விரைவில் நீங்க ராமநாதசுவாமி அருள்வாராக!



Surf
AMAZING BLUE POWDER
WHITEST WASH!
வீட்டுச் சலவையின் பெருமை
ஸர்ப் சலவையின் அருமை

தொழில் நினைவுகள்

சுங்கமும் திங்கமும்

அரசியல் ரீதியாகத் இருவேறென்று பிரிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தின் எல்லையில் சுங்க ஏற்பாடுகளும் பாதுகாப்புச் சம்பந்தமான கண்காணிப்புகளும் தீவிரமாக அமுலுக்கு வந்திருந்தன. எல்லைக்கு இரு பக்கங்களிலும் இருந்த ராஜ்யங்கள் தங்கள் தங்கள் பொருளாதாரத் தொழில் சூழ்நிலைகளை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் எண்ணத்தில் சுங்கக் கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வரும் நேரம்.

ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதியிலிருக்கும் உறவினர்களைப் பார்க்கப் போய்த் திரும்ப விரும்புபவர்கள், முன் அனுமதிச் சீட்டு வாங்கி, சுங்கப் பரிசோதனைக்கு இலக்காக வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு.

ஓர் ஆசாமி, மறு பக்கம் இருக்கும் தம் நீண்ட நாள் நோயுற்ற உறவினரைத் தொடர்ந்து சில நாட்கள் முன்னிரவு வேளைகளில் போய்ப் பார்த்து ஆறுதல் சொல்லி விட்டுத் திரும்ப அனுமதிச் சீட்டு வாங்கியிருந்தான். அதன்படி முதல் நாள் தன் சைக்கிளில், எல்லையின் சுங்க அதிகாரிகள் முன் வந்து இறங்கினான்.

அந்தச் சைக்கிள் கைப்பிடியில் ஒரு துணிப் பை தொங்கிக் கொண்டிருந்தது. அதை எடுத்துப் பார்த்த சுங்க அதிகாரிகள் வியப்படைந்தார்கள். அந்தப் பை நிறைய சாதாரண மண் இருந்தது. ''பிரிவினைக்கு முன்னும் இந்தப் பகுதியில் வசித்து வந்த உறவினர் குறிப்பிட்ட தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சில பூஞ்செடிகளைத் தொட்டிகளில் வைத்து மறு பகுதிக்குக் கொண்டு போயிருந்தார் என்றும், இப்போது அந்தப் பூஞ்செடிகள் வாடத் தொடங்கி விட்டதாகச் செய்தி வந்திருக்கிறதென்றும், அவைகளுக்குப் புத்துயிர் அளிக்கப் பழைய தோட்டத்து மண்ணைக் கொஞ்சம் எடுத்துப் போவதாக விளக்கம் கொடுத்தான் சைக்கிள் ஆசாமி. சுங்கப் பரிசோதகர்கள் ஆட்சேபணை எழுப்பவில்லை. சைக்கிள் ஆசாமியை அனுமதித்தார்கள்.

இப்படி அவன் பல தினங்கள் மறு பகுதிக்குப் போய் மறுநாள் காலையில் திரும்பி வந்துகொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் மண் நிறைந்த பையைக் கொண்டு போகத் தவறவில்லை.

சில ஆண்டுகள் கழித்து உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்ற அந்த எல்லைச் சுங்க அதிகாரி எதிர்பாராதவிதமாக அந்தச் சைக்கிள் ஆசாமியை ஒரு ஹோட்டலில் சந்தித்தார். அடையாளம் கண்டு கொண்டார். ''ஒரு சிறு சந்தேகம். முடிந்தால் தெளிவுபடுத்துங்கள். முன்பு ஒரு சமயம் தொடர்ந்தாற்போல் சில நாட்கள் மறு பகுதிக்கு மண் நிறைந்த பை ஒன்றைக் கொண்டு போய்க் கொண்டிருந்தீர்களே!... நிஜமாகவே அது மண்தானா.... இல்லை......'' என்று சந்தேகத்துடன் நிறுத்தினார்.

மாஜி சைக்கிள் ஆசாமி சிரித்தார். ''நீங்களும் இப்போது சுங்க இலாகாவிலிருந்து ஓய்வுபெற்று விட்டீர்கள். நோயுற்ற என் உறவினரும் பூரண குணமடைந்து விட்டார். ஆகையால் எனக்கு இனிமேல் மறு பகுதிக்குப் போக வேண்டிய அவசியமில்லை. உண்மை இதுதான். நான் தினசரி சைக்கிளில் கட்டிக் கொண்டு போன மண் மூட்டை ஒரே மூட்டை தான்! ஆனால் ஒவ்வொரு நாளும் ஒரு புது சைக்கிளில் மறு பகுதி போவேன். அதிகாலையில் நான் நடந்தே திரும்பி விடுவேன். அப்போது வேறு சுங்கப் பரிசோதனைகோஷ்டி 'டியூட்டி'யில் இருப்பார்கள். நான் முதல் நாள் மாலையில் சைக்கிளில் போனது அவர்களுக்குத் தெரியாது. மறு பகுதியில் சைக்கிள்களுக்கு கிராக்கி அதிகம் என்றும் இந்தப் பகுதியிலிருந்து அந்தப் பகுதிக்குச் சைக்கிள்கள் விற்கத் தடை உண்டு என்பதும் உங்களுக்குத் தெரியுமே' என்று சொல்லி நிறுத்தினார்.

'அட, ஆண்டவனே! கண்ணில் மண்ணைத் தூவுவது என்பது சம்பிரதாயமான பேச்சு என்றுதான்



திரு ஏ. என். சட்டநாதன்

நினைத்திருந்தேன். நீர் நிஜமாகவே கண்ணில் மண்ணைக் காட்டிக் கடத்தல் வேலை செய்திருக்கிறீரே!" என்று பெருமூச்சு விட்டாராம்.

சுங்க இலாகாவில் பல உயர்ந்த உத்தியோகங்கள் வகித்து, சுங்கக் கலெக்டராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு ஏ. என். சட்டநாதன் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது மேலே குறிப்பிட்ட கதை தான் நினைவுக்கு வந்தது.

ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு உட்கார்ந்து அந்தப் பாதையில் போய் வேறு ரக உத்தியோகங்களில் அமர்ந்திருக்க வேண்டிய திரு சட்டநாதனை ஒரு சிறு சம்பவம் திசை மாற்றி விட்டது.

முன்னாளைய திருவாங்கூர் ராஜ்யத்தின் எல்லையில் அமைந்திருந்த செங்கோட்டையைச் சேர்ந்த அவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் 1926ம் ஆண்டு மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று ஹானர்ஸ் பரீட்சையில் வெற்றி பெற்றார். சூட்டோடு சூடாக ஐ. ஸி. எஸ். பரீட்சையில் உட்கார அனுமதி கோரி மனுப் போட்டு விட்டு மதுரையில் உள்ள கல்லூரிகள் ஒன்றில் ஆசிரியராக வந்து சேர்ந்தார்.

மாணவர் உலகிலிருந்து அப்போதுதான் வெளியே வந்து மீண்டும் ஒரு புதுக் கோணத்திலிருந்து மாணவர் குழாத்துடனேயே உறவாட வழி செய்த அந்த உத்தியோகம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் பழைய சம்பிரதாயங்களில் மூழ்கியிருந்த கல்லூரி முதல்வருக்கும் சட்டநாதனுக்கும் இடையே அத்தனை பிடித்தம் ஏனோ நிலவவில்லை. அதன் விளைவாகத்தானோ என்னவோ ஐ. ஸி. எஸ். பரீட்சைத் தேர்வுக்கான உடல் பரிசோதனைக்கு அவரைக் குறிப்பிட்ட தேதியில் சென்னைக்கு வரச்சொன்ன உத்தரவைக் கல்லூரி முதல்வர் தாமதப் படுத்தி அந்தத் தேதியில் சட்டநாதன் கையில் சேர்ப்பித்தார். இடையே சில விடுமுறை நாட்கள் குறுக்கிட்டதால் அந்தக் கடிதம் கல்லூரிக் காரியாலயத்தில் தங்கி விட்டிருக்கலாம் என்ற விளக்கமும் கொடுத்தார். ஆனால் அந்த விடுமுறை நாட்களில் மற்றக் கடிதங்களெல்லாம் அவர் கைக்குக் கிடைத்தனவே!

உடல் பரிசோதனைக்கு அவரால் புறப்பட இயலவில்லை. அத்துடன் ஐ. ஸி. எஸ். ஆசையும் போய்விட்டது. உள்ளம் வெதும்பி அங்கிருந்து ஜெம்பித் திருச்சிக் கல்லூரி ஒன்றில் போய் ஆசிரியராக அமர்ந்தார். அங்கிருந்தவாறே ஐ. ஏ. அண்டு ஏ. எஸ். என்னும் சர்க்கார் போட்டிப் பரீட்சைக்கு உட்கார்ந்து வெற்றி பெற்றார். சுங்க இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட அவர் 1928ம் ஆண்டில் சென்னை சுங்கக் காரியாலயத்தில் பயிற்சி பெற வந்து சேர்ந்தார். சுங்க இலாக்காவில் அந்த நாளைய சர்க்கார் ஐம்பது சதவிகித உத்தியோகங்களை வெள்ளையர்களுக்கு ஒதுக்கிய காலம். சில ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களுக்கும் அங்கு இடம் உண்டு. இன்று பாரத சர்க்காரில் பல பெரிய பொறுப்புக்களை வகித்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் திரு என். ராகவன் பிள்ளை ஐ. ஸி. எஸ். அன்று சட்டநாதன் பயிற்சி பெற வந்து சேர்ந்தபோது சென்னையில் உதவி சுங்க கலெக்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

1941ம் ஆண்டு வாக்கில் அவர் கல்கத்தா நகரில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை. மலேயப் பெண்ணா, சீனத்தைச் சேர்ந்தவளா, பர்மிய மாதுதானா என்று நிர்ணயித்துச் சொல்லமுடியாத ஒரு மாது கல்கத்தா நகரில் பெரிய மனிதர்கள் வட்டாரத்தில் வளைய வந்து கொண்டிருந்தாள். இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலம் அல்லவா? அவள் வேவுகாரியாக இருக்கலாமோ என்று சந்தேகித்தார்கள். ஆனால் அதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. சுங்க இலாகாவுக்கு மாத்திரம் அவள் மீது பிரத்தியேகக் கண் இருந்தது.

அப்போது கல்கத்தாவுக்கும் சுங்கிங் நகருக்கும் விமானப் போக்குவரத்து உண்டு. ஒரு நாள் காலை நான்கு மணிக்குப் புறப்படவிருந்த விமானத்தைப் பிடிக்க அவள் பெட்டி படுக்கைகளுடன் விமான நிலயத்துக்கு வந்து சேர்ந்தாள். முன்னதாகவே அவளைப் பற்றி எச்சரிக்கப்பட்டிருந்த சுங்க இலாகா சிப்பந்திகள் அந்தச் செய்தியைத் தொலைபேசி மூலம் திரு சட்டநாதனுக்குத் தெரிவித்தார்கள். அவள் எடுத்துப் போகும் பெட்டிகளைத் தீவிரமாகப் பரிசோதனை செய்யும்படி பதில் வந்தது.

பெட்டி, பைகளில் ஆட்சேபிக்கக் கூடிய எந்தப் பொருளோ, தஸ்தாவேஜோ கிடையாது! இந்தத் தகவலும் உடனுக்குடன் சட்டநாதனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவருக்கு என்னவோ அந்த நபரின்மீது நம்பிக்கை இல்லை. அவளை அடிக்கடி பார்த்தும் இருக்கிறார். அப்போதெல்லாம் பிரயாணிகளை யெல்லாம் பரிசோதனை போடலாம் என்ற சட்டம் இல்லை. போதாக் குறைக்கு அவள் ஒரு வெளிநாட்டுப் பிரஜை. ஒரு கணம் திகைத்த சட்டநாதன் எப்படியாவது அந்த நயநாகரிகப் பெண் மணியின் எடையை நிறுவை யந்திரத்தின் மூலம் தெரிந்து சொல்லும்படி டெலிபோன் செய்தார். அதற்குச் சட்டப்படி இடம் இல்லாதபோனாலும் சிப்பந்திகள் எப்படியோ தாஜா செய்து அந்த அம்மையாரை யந்திரத்தில் நிறுத்தி நூற்று ஐம்பத்திரண்டு பவுண்டு என்று கண்டு அதையும் தங்கள் மேலதிகாரிக்குத் தெரியப்படுத்தினர்.

அவள் அடிக்கடி சட்டநாதனின் கண்களில் பட்டிருப்பவள். ஒற்றைநாடி தேகம், விடிய விடிய நூற்றுப் பத்துப் பவுண்டுகளுக்கு மேலாக இருக்க மாட்டாள். நூற்றி ஐம்பத்திரண்டு பவுண்டுகள் என்ற தகவல் வந்ததும் உஷாரானார். அவளை உடனடியாகத் தம் வாசஸ்தலத்தை ஒட்டிய காரியாலயத்துக்குப் பந்தோபஸ்துடன் அழைத்து வரச் செய்தார். வந்தவளுக்கு மரியாதையுடன் வணக்கம் தெரிவித்து விட்டு, ''சற்று அந்த அறைக்குப் போகிறீர்களா? என் மனைவி உங்களைச் சந்திக்க விரும்புகிறாள்''

என்றார் நிதானமாக; அந்த நாணயச் சட்டங்களுக்குப் புறம்பாகவே தன்னைச் சோதனையிடத் தீர்மானித்து விட்டார் சுங்கக் கலெக்டர் என்று தெரிந்ததும் அந்த அம்மாவுக்கு உடலில் உதறல் எடுத்தது. நாற்பது பவுண்டு தங்கத்தைப் பாளங்களாக்கி கைகால், வயிறு எல்லாம் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்தாளே!

தங்கம் பறி முதலானதோடு அல்லாமல் அவள் பிரயாணமும் தடைப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு அவள் கல்கத்தா நகரிலேயே யாராலேயோ கொலை செய்யப்பட்டாள். அப்புறம்தான் அவள் கடத்தல் கோஷ்டியைச் சேர்ந்தவள் என்பதை ஊர்ஜிதம் செய்தார்கள்.



''இத்தனூண்டு பொங்கலுக்காக இந்தப் பனியிலே எழுந்து ஓடறீங்களே?''
''போடி' பைத்தியம்! எங்க பஜனை சபாவிலே மட்டும்தான் அரிசிப் பொங்கல்!''

1942–44ம் ஆண்டுகளில் சென்னைக்கே பணியாற்றவந்தார். அந்தக் காலத்தில்தான், புகையிலை, காப்பி, டீ இலை மீது எக்சைஸ் வரிகள் விதிக்கும் சட்டம் அமுலுக்கு வந்தது. அதை உருவாக்கினதில் இவருக்கு நிறையப் பொறுப்பு இருந்தது. இங்கிருந்து டில்லிக்குப் போய் மத்திய ரெவின்யூ போர்டில் பதவி ஏற்றுக் கொண்டார். கிழக்கு, மேற்குப் பாகிஸ்தான் எல்லைகள் வரையறை செய்யும் கமிஷனில் சேர்ந்து ஓராண்டு காலம் அந்த எல்லைப்புறங்கள் முழுதும் பிரயாணம் செய்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் புத்தாண்டு தினத்தன்று நியூயார்க் நகரத்தில் மூன்று தேசங்களைச் சேர்ந்த நண்பர்களுடன் ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார். ஒருவர் அமெரிக்கர், மற்றவர் யுகோஸ்லேவியர், மூன்றாமவர் ரஷ்யர். ரஷ்ய நண்பருக்கு ஆங்கிலம் அறவே தெரியாது என்ற காரணத்தால் அவர் மற்றவர்கள் சம்பாஷணையில் கலந்து கொள்ளவில்லை. அப்போது பேச்சு நேருஜியைப் பற்றி எழுந்தது. நேருஜியின் 'டிஸ்கவரி ஆப் இந்தியா' புத்தகத்தின் அருமை பற்றிக் குறிப்பிட்டு விட்டு ஆங்கிலம் தெரிந்த அமெரிக்க, யுகோஸ்லேவிய நண்பர்களுக்குத் தம் கையிலிருந்த அந்தப் புத்தகப் பிரதிகளைப் புத்தாண்டுப் பரிசாகக் கொடுத்தார்.

ரஷ்ய நண்பர் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார். பிறகு திடீரென்று துல்லியமான ஆங்கிலத்தில் ''எனக்கும் ஒரு பிரதி கொடுங்கள். நானும் அதைப் படிக்க விரும்புகிறேன்'' என்றார். மற்ற மூவருமே திடுக்கிட்டார்கள். ஆங்கிலமே தெரியாது என்று குறிப்பிடப்பட்டவரல்லவா அவர்!

''என்ன செய்வது? நான் பல காரணங்களுக்காக ஆங்கிலம் தெரியாது என்று நடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னையே மறக்கச் செய்து விட்டது'' என்றாராம் அந்த ரஷ்ய ஆசாமி.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட பல பொருளாதார வரி விதிப்பு, போதைப் பொருள்கள் கட்டுப்பாடு குழுக்களில் திரு சட்டநாதன் கலந்துகொண்டிருக்கிறார்.

வருமான வரியைத் தவிர, மற்ற வரிகள் சம்பந்தப்பட்ட சீரமைப்பை எல்லா சமஸ்தானங்களிலும் ஒன்றுபடுத்த சட்டநாதன் பாரதத்திலிருந்த அத்தனை சமஸ்தானங்களுக்கும் போயிருக்கிறார்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய இடங்களிலே பணியாற்றினாலும் பாரதத்தின் மூலை முடுக்குகளை யெல்லாம் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. தமிழர் சமூகம் எங்கிருந்தாலும் அவர்களுடன் எந்த வித ஜபர்தஸ்தும் இல்லாமல் அன்யோன்யமாகக் கலந்துகொள்வது அவர் சுபாவம். எந்த விசேஷத்துக்கு அழைக்கப்பட்டாலும் உற்சாகமாக வேட்டியைக் கட்டிக்கொண்டு போய்க் கலகலப்பாக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட விதம் அவரை, அவரையொத்த மற்ற அதிகாரிகளிடமிருந்து தனித்து நிற்கச் செய்து நிறைந்த அபிமானத்திற்குள்ளாக்கியது.

பம்பாயில் இருந்தபோது அவர் பம்பாய் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தார். பல தமிழர்களுக்குத் திரு சட்டநாதனைச் சுங்க கலெக்டர் என்று தெரியாதாம்! தமிழ்ச் சங்கத் தலைவர் என்றுதான் தெரியுமாம்!

1956ல் கல்கத்தாவில் சுங்கக் கலெக்டராக இருந்தபோது உடல் நலம் பாதிக்கப்பட்டதால் ஐம்பத்தி ஒன்றாவது வயதிலேயே உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற திரு சட்டநாதன் இன்னும் தம் கவனத்தைப் பயில்முறை நாடகத் துறையில் செலுத்துகிறார். அவரது முக்கியமான பொழுதுபோக்கு இப்போது வடமொழி பயில்வதுதான்.

''அன்னியச் செலாவணி, நாணய நிர்ணயம், ஏற்றுமதி, இறக்குமதி விதிகள், 'அண்டர் இன்வாய்ஸிங்' போன்ற அம்சங்கள் இந்நாளைய சுங்க அதிகாரிகளின் பொறுப்பைப் பன்மடங்கு உயர்த்துகின்றன. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைத் திட்டமிடுபவர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அத்தனை பொறுப்பு இந்தப் பொருளாதாரப் பாதுகாப்பாளர்களான சுங்க அதிகாரிகளுக்கும் இருக்கிறது'' என்று கூறி விடை கொடுத்தனுப்பினார் திரு சட்டநாதன்.

— கோமதி ஸ்வாமிநாதன்

24. மோதிரம் செய்த மோசம்

பாமினிப் பாவை



கௌசிகன்

விஜயதசமி விழாவிலிருந்து திரும்பும் கணவனை மங்கள ஆரத்தி எடுத்து வரவேற்கக் காத்திருந்தார்கள் அந்தப்புரத்திலே. தங்கத் தாம்பாளத்திலே மஞ்சளும் சுண்ணமும் கலந்த குங்கும வண்ண நீரிலே ஜோதிகள் சுடர் விட்டுக் கொண்டிருக்க, அந்த நந்நீரிலே வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், பவழம், முத்து ஆகிய நவமணிகளையும் தூவி இருந்தார்கள். தீபஒளியிலே அவை ஜ்வலித்துக் கொண்டிருந்தன. அரவீட்டுச் சோதரர் அரண்மனை வாயிலை அடைந்ததும் அவர்களின் பத்தினிமார் அகமும் முகமும் மலர முன் வந்து தங்கத் தாம்பாளத்தைத் தாங்கி நின்ற பாங்கியரிடமிருந்து அந்த ஆரத்தியை வாங்கி இருஷ்டி சுற்றி வீரத் திலகமிட்டு வரவேற்றுத் தங்கள் கணவன்மார்களை அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். ராஜபுவரா ராமராயரின் ராணிகள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடுவது இந்த ஒருநாளில் தான். ஒன்பது நாளும் உபவாசமிருந்து தேவியை வழிபட்டு வரம் பெற்று வரும் தங்கள் கணவரைத் தேவிமார் கடவுள் ஸ்தானத்தில் வைத்து உபசரிப்பார்கள், இந்த ஒப்பற்ற விஜயதசமி விழாவுக்குப் பிறகு.

அலியா ராமராயரை நவரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்ட இருக்கையொன்றில் அமர்த்திச் சூழ்ந்து கொண்டார்கள் அவரது பத்தினிகள். திருமலாம்பா, தெய்வசிந்தாமணி, சத்தியபாமா, சுபத்ரா, மித்ரவிந்தா, ஜாம்பவதி, ராதா, மோஹினி, காமவாரிணி என்று இப்படி ராமராயரின் ராணிகள் அத்தனைபேருமேஅங்குவருகை தந்திருந்தார்கள். துங்கபத்திரையாற்று நீர் அவர்கள் இருந்த வசந்த மண்டபத்தைச் சுற்றிச் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. புண்ணிய தீர்த்தங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் பொற்குடங்களில் வைக்கப்பட்டிருந்தன அபிஷேகத்துக்காக. வாசனைத் திரவியங்களும், பாலும், பழமும், பன்னீரும், பாங்காக இடம் பெற்றிருந்தன. மங்கள ஸ்நானத்துக்குப் பிறகு அணிந்து கொள்ள ஆடை ஆபரணங்களை அழகாக அடுக்கி வைத்திருந்தார்கள். அறுசுவைக்கும் மேலாகப் பல்சுவையோடு கூடிய பாரணை உணவு தயாராகிக் கொண்டிருந்தது.

மகா மண்டலேசுவரராகிய தங்கள் கணவருக்குத் தைலக் காப்பிட்டார்கள் பத்தினிகள். பாட்டும் பரிகாசமும் வேடிக்கையும் விளையாட்டுமாக, மனைவிமார்களின்மனம் கோணுதபடி மங்கள ஸ்நானத்தை முடித்துக் கொண்டு அவர்கள் அன்புக்குக் கட்டுப்பட்டு அலங்காரங்களையும் செய்து கொண்டு விருந்துண்ண உட்கார்ந்த போதுதான் அவர்கள் அவரைக் கேள்விகளால் மொய்க்கலானார்கள். எல்லாமே அவர் மேற்கொண்டுள்ள மகத்தான போர்ப் புறப்பாட்டைப் பற்றித்தான்.

''நம் மகன் ஆதில்ஷாகூடவா அந்தச் சதிகாரர்களோடு சேர்ந்து கொண்டு விட்டான்?'' என்று கேட்டாள் தேவி திருமலாம்பா.

''ஆதில்ஷாதான் அவர்களுக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறான். நம் நாட்டையும் உறவையும் முறித்துக் கொள்ள விரும்பாத அவனை வற்புறுத்துகிறார்கள். இனத்தையும் மதத்தையும் எதிரே வைத்து. இன்று வரை அவன் நம் எதிரியல்ல. நாளை எப்படியோ?'' என்றார் ராமராயர்.

''இந்தப் போரைத் தவிர்ப்பதற்கான மார்க்கம் ஏதுமில்லையா? அல்லது பயன்படுத்தவில்லையா?'' என்றாள் இளமனைவி சத்தியபாமா ஏக்கமுடன். அவள் கண்கள் கலங்கின. ஏதோ ஓர் இனந்தெரியாத திகில் அவள் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருந்தது. தாம்பூலம் தயாரிப்பதில் வல்லவளான அவள் அதில் ஈடுபட்டிருந்தாள்.

''வளர்ந்து விட்ட விஜயநகர சாம்ராஜ்யத்தின் புகழிலே பொறாமை கொண்டவர்கள் போருக்கு வருகிறார்கள். அவர்களை ஓட்டுவது ஒரு பெரிய காரியமே இல்லை. எத்தனை பேர் சேர்ந்து வந்தாலும் இந்தச் சாம்ராஜ்யத்தை அசைக்க முடியாது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்யப் போகிறேன். வெற்றி நிச்சயம் என்று தெரிந்தே செயல்படும் ஒரு போர்



இரு! ஆகவே உங்களில் யாருமே கொஞ்ச நேரம் அஞ்ச வேண்டாம்'' என்று ஆறுதல் கூறினார் அரவீட்டு முதல்வர்.

"ஆதில்ஷாவின் தூதுவன் யாரோ வந்திருந்ததாகக் கேள்விப்பட்டோமே. பலனுள்ள செய்தியாக ஏதாவது அனுப்பி இருந்தாரா பீஜப்பூர் சுல்தான்?''

''தூதுவனாக வந்தது சாதாரண ஆளல்ல. தம் தளபதி சித்திஹானையே அல்லவா அனுப்பி இருந்தார் அலி ஆதில்ஷா. அவன் என்னுடன் ஓர் ஒப்பந்தமே செய்து கொண்டு போயிருக்கிறான்'' என்றவர் அதைப் பற்றி விளக்கிய போது மகாமண்டலேசுவரரின் மனைவிகளிடையே மகிழ்ச்சி கலந்த புகழ்ச்சிக் குரல்கள் கிளம்பின. தாம்பூலத்தைச் சுவைத்துக் கொண்டே மனைவிமார்களின் மனத்தையும் குளிர்வித்துக் கொண்டிருந்தார் ராமராயர்.

இந்தக் குதூகலமான காட்சியைக் கண்டும் காண விரும்பாதவாறு ஒதுங்கிப் பதுங்கிக் கிடந்ததோர் உருவம், ராமராயர் சித்திஹானுடன் தாம் செய்து கொண்டுள்ள திட்டத்தைப் பற்றி விளக்கியதைக் கேட்டுத் திடுக்கிட்டது. அதை உன்னிப்பாக ஒரு வார்த்தை விடாமல் உற்றுக் கேட்டுக் கொண்டபின் மெல்ல அங்கிருந்து நழுவியது நடுங்கும் உள்ளத்துடன்.

யூசப்கான் கைதியான செய்தியோடு குதுப்ஷாவிடம் போய்ச் சேர்ந்தார்கள் ஒற்றர்கள் இருவரும். சிறந்ததொரு வீரனை இழந்த வேதனையில் மனம் வருந்தினார் இப்ராஹிம். அந்த இழப்புக்கு ஈடு செய்வது போல, தப்பி வந்தவர்கள் பல காரியங்களைச் சாதித்து வந்திருந்தார்கள். விஜயநகரத்து ராணுவத்திலே பணி புரியும் இஸ்லாம் இனத்துத் தளபதிகள் பலரைத் தக்க சமயத்திலே தங்களுக்குச் சாதகமாகச் செயல் புரியும் படி உறுதிமொழி வாங்கி வந்திருந்தனர் ஓடி வந்திருந்தவர்கள்.

பாமினி ராஜ்யங்கள் போருக்கான ஆயத்தங்களிலே அதிதீவிரமாக ஈடுபட்டிருந்தன. அகமதுநகர் கோல்கொண்டா, பீடார் ஆகிய ராஜ்யங்கள் படைகளையும் படைக்

களைக்களையும் குவிக்கலாயின: 'முஸ்லிம் களாகிய நாம் மதிப்போடு, தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானல் இந்தப் போரிலே வெற்றி பெற்றாக வேண்டும்' என்ற வேகத்தை உண்டாக்கி இருந்தார்கள் மக்களிடையே. திட்டமிட்டபடி எல்லாமே திருப்திகரமாக நடந்து வந்தது. ஆனல் ஒப்புக் கொண்டபடி ஆதில்ஷாவின் ஒத்துழைப்புத்தான் இருக்கவில்லை. இது குதப்ஷாவையும் நிஜாம்ஷாவையும் குழப்பத்திலாழ்த்திக் கொண்டிருந்தது. கூட்டணிப் படைகள் பீஜப்பூர் பகுதியில்தான் வந்து குவிய வேண்டும் என்பது ஒப்பந்தம்; படைகளைக் கொண்டு வந்து குவிப்பதற்கு அனுமதியளித்து விட்டார் ஆதில்ஷா. ஆனல் அவரோ போர்ச் செயலில் அக்கறை இல்லாதவரைப் போல் ஆர்வம் காட்டாமல் அமைதியாகவே இருந்தார். அவரைக் குற்றம் சாட்டிக் குறை கூறவும் வழியில்லை? பீஜப்பூரும் போர்க் கோலம் பூண்டே விளங்கியது. அதன் பெரும் படையணிகள் தயாராகவே இருந்தன. ஆனல் இவர்களோடு வந்து சேரவில்லை. தனித்தே நின்றது தன்னிச்சைப்படி. படைபலத்தில் மட்டுமல்லாது பல விதங்களிலும் பலம் பெற்ற பீஜப்பூரை ஒதுக்கி விட்டு ஒன்றும் செய்வதற்கில்லை; ஆகவே நிஜாம்ஷாவும் குதப்ஷாவும் எப்படியாவது ஆதில்ஷாவைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளுவதற்கான வழி வகைகளைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாத்தின் ஏற்றத்துக்கான இந்தப் போரிலே இதயபூர்வமாகப் பங்கு கொள்ளும்படி அவர் மனத்தை மாற்ற மதத் தலைவர்களை அனுப்பினர்கள்; பீஜப்பூரின் பெருங்குடி மக்களையும் அரசாங்க அதிகாரிகளையும் தங்களுக்குச் சாதகமாகப் பேசும்படி தூண்டி விட்டார்கள். இத்தனை செய்ததின் பலன் முஸ்லிம் அரசுகளின் ஒற்றுமையிலிருந்து பீஜப்பூர் விலகி நிற்கவில்லை, விரோதியாகவுமில்லை; ஆனல் ராமராயருடன் நட்பையும் முறித்துக் கொள்ளவில்லை; இந்த நிலை மற்ற முஸ்லிம் மன்னர்களுக்கு மனத்தாங்கலாக இருந்தது.

''இந்தப் புனிதப் போரை நடத்தும் பொறுப்பையே அவரிடம் சுமத்தி விட்டால்?'' என்று வினு எழுப்பிக் கூடி இருந்தவர்களைக் குறிப்பாகப் பார்த்தார் குதப்ஷா. ''அதாவது முஸ்லிம் அரசுகளின் கூட்டணிப் படையை நடத்திச் செல்லும் தலைமையை ஆதில்ஷாவிடமே ஒப்படைத்து விட்டால் ?''

''நல்ல யோசனைதான். ஆனல் அவர் அதை ஏற்க வேண்டுமே? தம் தளபதி சித்திஹானவைத்தான் அவர் மகாசேனபதியாக்குவாரே யொழிய தம்மை அச்செயலுக்கு உட்படுத்திக் கொள்ள மாட்டார்'' என்று நிஜாம்ஷா அபிப்பிராயப்பட்டார்.

''இருக்கட்டுமே! எப்படியானுல் என்ன? அந்தச் செயலின் விளைவுக்கு அவர் காரணமாகி விடுகிறாரல்லவா? நம் அதிருப்தியை வெளிப்படுத்தவோ அதட்டிக் கேட்கவோ அப்போது முடியுமே'' என்று கூறி எல்லோரையும் இணங்க வைத்தார் குதப்ஷா; எதிர் நோக்கியுள்ள பெரும் போருக்கான திட்டங்கள் பற்றிய விவாதத்தில் ஆதில்ஷா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று அழைப்பு அனுப்பினர்கள். பாசறையின் விசேஷக் கூடாரத்திலே பாமினி சுல்தான்கள் கூடினர்கள். ஆதில்ஷாவும் ஆஜராகி இருந்தார். படையெடுப்பின் பலதரப்பட்ட விவாதங்களுக்குப் பின் ஆதில்ஷாவின் ஒத்துழைப்பு வற்புறுத்தப்பட்டது. முடிவில் இணைப்புப் படைகளைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் தகுதி ஆதில்ஷாவுக்கே உண்டென்று பாராட்டிப் பேசி அந்தப் பதவியையும் அவருக்கு உரிமையாக்கியபோது அவர் அடக்கமாக அதை ஏற்க மறுத்தார். வற்புறுத்தியபோது நிஜாம்ஷா கூறியபடியே சேனுபதி சித்திஹானவே அதற்குத் தகுதியானவன் என்று சிபாரிசு செய்தார். அந்த அபிசீனியனை விடத் திறமைசாலிகள், ஆற்றலுடையவர்கள் இருந்தும் ஆதில்ஷாவின் ஆதரவுக்காக அது அப்படியே அங்கீகரிக்கப்பட்டது.

பழி தீர்த்துக் கொள்ளத் தருணத்தை எதிர்பார்த்திருந்த சித்திஹானவன் இந்த முடிவினுல் பூரித்துப் போனன். சர்வ சேனுபதியாக்கப்பட்ட மறு நாளே இரவோடிரவாக விஜய நகரத்துக்குக் குதிரையில் பறந்தான் அந்த அபிசீனியன். அரவிட்டாருடன் ஓர் அந்தரங்கமான உடன்படிக்கை செய்து கொண்டு திரும்பினன். சுல்தான் ஆதில்ஷாவிடம் தனக்குள்ள சலுகையைத் தவருகப் பயன்படுத்திக்கொண்டு ஒரு சதித் திட்டத்தையே உருவாக்கிக் கொண்டு வந்தான் அந்த அபிசீனியன். இந்த விவரம் ஆதில்ஷாவுக்கும் தெரியாது. அலியா ராமராயரோ அது ஆதில்ஷாவின் திட்டமென்றே நம்பினர்.

விஜயநகரம் போர்க் கோலம் பூண்டிருந்தது. பெரும் போரின் முஸ்தீபுகளுக்கான திட்டங்களெல்லாம் வகுத்துவிட்டார் ராமராயர். அஷ்டப் பிரதானிகளின் அவையைக் கூட்டி, அதிலே தளவாய்கள், பாளையக்காரர்கள், சேனுபதிகள் ஆகியோரை எல்லாம் தக்கபடி கௌரவித்து, களத்திலே அவர்கள் யார் தலைமையின் கீழ் எப்படி, எங்கே போரிட வேண்டும் என்பதையெல்லாம் திட்டமிட்டு முடித்த பின் சாஸ்திரிகளைக் கொண்டு வெளிகிளம்புவதற்கான மங்கல வேளையைக் கணித்துச் சொல்லும்படி உத்தரவிட்டார். தான தருமங்களைச் செய்தார். இறைவனின் ஆலயத்துக்குச் சென்று தான் மேற்கொண்டுள்ள காரியத்தை அரசர்க்கரசரான ஆண்டவனிடம் அறிவித்துக் கண்ணீர் மல்க அவனுடைய அருளையும், ஆசியையும் வேண்டி நின்றார். ஏதோ ஒரு காரணமற்ற ஏக்கம், வேதனை, அவர் இதயத்தின் ஒரு மூலையைக் கடித்துக் கொண்டிருந்தது. கலங்காத உள்ளம் படைத்த அவரையே அந்த வலி அலைக்கழிக்கலாயிற்று. எத்தனையோ போர்க் களங்களைக் கண்டவர் அரவீட்டு முதல்வர். ஆகவே இந்த உறுத்தலை உதறிவிட்டு அந்தப்






தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது



**ப்ராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.**

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட (இந்தியா) பிரைவேட் லிட்

PPY. 55. TAM

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ் மோஜி அண்டு கம்பெனி, சென்னை-1
தபால் பெட்டி 1902

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்
—ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா! தாங்க முடியாத அரிப்பா! எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா! ரத்தக் கசிவா! உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதியாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங்களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தியைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்பதோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக்கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்க்கு காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.

ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

சிறந்த மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

53-DOL-3 A TM

புரத்துக்கு விரைந்தார்; இளம் மனைவி சத்தியபாமாவிடம் விடைபெற்று அவள் மடித்துக் கொடுக்கும் தாம்பூலத்தைத் தரித்துக்கொண்டு கிளம்புவதற்காக.

இதே நேரத்தில் வேங்கடாத்திரியும் விரைந்து கொண்டிருந்தான் திருமலாம்பாவின் மாளிகையை நோக்கி. போர்க்களத்துக்குப் போகு முன் அவன் செய்ய வேண்டிய காரியம் ஒன்று அங்கு இருந்தது: நினைவை விட்டு அகலாது நெஞ்சத்தில் நிறைந்துவிட்ட சகோதரி ஆயிஷாவிடம் விடை பெறாமல் அவனால் எப்படிக் கிளம்ப முடியும்? ஆயிஷாவைத் தேடிப் போன போது தனிமையிலே அவள் சோகமே வடிவாய் அமர்ந்திருந்தாள். தான் இருக்கும் இடத்துக்கே ஒரு தனி அழகைத் தரக்கூடியவள் தன் நிலை மறந்து போய்ப் பார்வையைச் சூனியத்தில் பதியவிட்டவாறு உட்கார்ந்திருந்தாள். பாழடைந்த பளிங்கு மண்டபத்தைப் போலப் பொலிவிழந்து காணப்பட்ட அவளைப் பார்த்ததும் வேங்கடாத்திரி வேதனை யடைந்தான். 'ஆயிஷா...' என்றழைத்து அருகில் சென்ற போதும் அவள் இவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. சிரிப்பை இழந்த சிங்காரி, சிலையாக வீற்றிருந்தாள். சினந்தாலும்கூட அழகு சுடர் விடும் அந்தச் சுந்தர முகம் சோபை இழந்துகிடந்தது. 'போர்க் கோலம் கொண்ட நகரம் பூரித்துக் கிடக்கும்போது இந்தப் பெண் எதை நினைத்து இப்படி ஏங்கிப்போய் உட்கார்ந்திருக்கிறாள்?' என்று அவளைப் பார்த்து மற்றப் பாங்கியர் அதிசயிக்கும்படி இருந்தது அவள் நிலை. ஆனால் அரவீட்டு இளவலுக்கு அதன் காரணம் தெரியுமே!

''என்ன ஆயிஷா, அந்தக் கெட்ட கனவின் மயக்கம் இன்னும் உன்னை விட்டகலவில்லையா? அந்த ஒற்றனை முற்றும் மறக்க முடியவில்லையா?'' என்று கேட்டபோது அபலை அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவள் கயல்விழிகள் கண்ணீரில் மிதந்தன. ஏந்திழையாளின் அந்த ஏக்கப் பார்வையைக் கண்ட வேங்கடாத்திரி 'அவளை ஏன் அப்படிக் கேட்டோம்' என்றுகூட நொந்து கொண்டான்.

'இதயம் உள்ளவர், இங்கிதம் தெரிந்தவர் என்று உங்களை நினைத்திருந்தேனே அண்ணா! நீங்களா இப்படிக் கேட்கிறீர்கள்?' என்று விழியால் மொழி பேசினாள், வாய் பேசாத வடிவழகி.

''ஆயிஷா, உனக்கு வெறுப்பைத் தரும் காரியத்தைச் செய்வதற்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். உன் இனத்தவர்களின் மீது படையெடுத்துச் செல்லும் என்னை நீ வெற்றியோடு திரும்ப வேண்டும் என்று வாழ்த்தி வழியனுப்புவாயா?'' என்று குறும்பாகக் கேட்டான், அவள் கோபம் கொள்ள வேண்டுமென்பதற்காகவே.

ஆனால் கோதையவள் குமுறும் தன் உள்ளத்தை வெளிப்படுத்தவில்லை. கொவ்வைக் கனி இதழ் திறந்து பேசவுமில்லை. கவசமணிந்து வீர திலகமிட்டு வந்து நிற்கும் வேங்கடாத்திரியை வேதனை வழியப் பார்த்தாள். 'இனத்தை ஏன் அண்ணா இங்கு இழுக்கிறாய்? என் அருமை அண்ணாவின் நல்வாழ்வுக்காக நான் ஆண்டவனை வேண்ட மாட்டேனா?' என்று பார்வையால் கேட்டாள். அன்று அவன் பேசாதிருந்து அவளைப் பொங்க வைத்தது போலவே இன்று அவள் தன்மௌனத்தால் அவனை ஆட்டிவைத்தாள்.

''ஆயிஷா! என்னோடு பேச உனக்கு விருப்பமில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். குற்றம் புரிந்தவள் நீ. அந்த நிலையிலும் உன்னை மன்னித்து மதிப்போடு நடத்துவதற்கு நீ காட்டும் நன்றியா, உன் உதாசீனத்தை வெளிப்படுத்தும் இந்த மௌனம்?'' என்று கேட்டபோதும் அவள் வாய் திறக்கவில்லை. ஆனால் விசாலமாகிக் கொண்ட அவளது விழிகளிலே வியப்பும் வெறுப்பும் வழிந்தன. 'இதைச் சொல்லத் தான் என்னைக் காண வந்தீர்களா?' என்று வினாக் குறியிட்டு நின்றது நிமிர்ந்த அவளது பார்வை. அதைச் சந்திக்க மனமில்லாத வேங்கடாத்திரி, ''ஆயிஷா! யுத்த களம் போகிறேன். நான் இங்கு இல்லாதபோது உன் பத்திரத்துக்கு ஏதாவது ஆபத்து நேருமானால் அதிலிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்ள இது உனக்குப் பயன்படும், இந்தா'' என்று கூறித் தன் விரலிலிருந்த விலையுயர்ந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி அவளிடம் நீட்டிக்கொண்டே, ''வாய் திறந்து பேசி உன் வன்மத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டாம். ஆனால் கை நீட்டி இதை வாங்கிக்கொள்ளலாமென்று நினைக்கிறேன்'' என்றான்.


அவனது குத்தலான வார்த்தைகளைக் கேட்ட குமரியின் நயனங்கள் குளமாயின. மோதிரம் தாங்கி நின்ற கைகளைப் பற்றியவள் அதில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மலானாள். அவளது அழுகை அவனது நெஞ்சை நெகிழ்த்தி விட்டது. கத்திக்குக் கலங்காதவன் கண்ணீரிலே



முதல்வர்: 'பிரதர்ஸ்' என்று சொல்லி இரண்டு பேராகப் பாடுகிற கச்சேரிக்குத்தான் நான் போறது. அதான் பிடிச்சிருக்கு.

மற்றவர்: அது ஏன்?

முதல்வர்: மிச்சப்பேர் எல்லாம் ஒருவர் என்று போட்டுக்கொண்டு நாலைந்து பேராகப் பாடுகிறார்கள்!



கரைந்து போனான். வாஞ்சையுடன் அந்த வடிவழகியின் வதனத்தை நிமிர்த்தினான்.

"சோதரி, உன் உணர்ச்சிகளை நான் அறிவேன். ஆனால் இன்றுள்ள நிலையில் ஏதும் செய்ய முடியாதவனாக இருக்கிறேன். இது வரை வெற்றியையே கண்ட எனக்கு இப்போரில் அதற்குப் புறம்பான வேறொன்று நேருமானால், ஒருவேளை நான் திரும்ப முடியாமலே போக நேர்ந்தால்..." அவன் குவிந்த கரங்களுக்குள் கன் மூடிக் கிடந்தவள் பதறிப் போய்ப் பரபரப்புடன் அவனது வாயைப் பொத்தினாள் — அவலத்தைக் கேட்க விரும்பாதவளாக.

வேங்கடாத்திரி மெல்ல நகைத்தபடியே அவளது தளிர்க் கரங்களை அகற்றி அதைத் தன் கைகளுக்குள் புதைத்துக் கொண்டவனாக, "நெருப்பென்றால் வாய் சுட்டுவிடாது. எத்தனையோ போர்களைக் கண்ட என் நெஞ்சம் இன்று ஏனோ சஞ்சலமடைகிறது. அதனால் கூறினேன். இந்த சாம்ராஜ்யத்தை ஆட்டிப் படைக்கும் மூன்று சக்திகளுள் ஒன்றுக்கு உரியது இந்த மோதிரம். ஆகவே, இதை உபயோகிக்கு முன், அதன் அவசியம் அவசரம், ஆபத்து இவைகளைப் பற்றித் தீர யோசிக்க வேண்டும். இது சாதிக்காத காரியம் இந்த சாம்ராஜ்யத்தில் ஏதுமில்லை. இதை உபயோகிக்கும் ஒரு நிலை உனக்கு வரவே வேண்டாம். அப்படி ஏதாவது நேருமானால்..." என்று கூறி மோதிரத்தை அவளது தந்த விரலில் தானே அணிவித்தான். பிறகு, பார்வையால் அவள் இதயத்தை ஊடுருவியவாறு, "சொல் ஆயிஷா.. இதைத் தவறாகப் பயன்படுத்திவிட மாட்டாயே?" என்று கேட்டான்.

உணர்ச்சியற்ற முகத்திலே ஒளிர்ந்த கண்களால் அவனை நோக்கியவளிடமிருந்து உஷ்ணமானதொரு பெருமூச்சுத்தான் பதிலாக வந்தது.

அதே சமயத்தில் படையணிகள் கிளம்புவதற்கான பேரிகைகள் அதிர்ந்தன.. பீரங்கிகள் முழங்கின. கொம்பு வாத்தியங்கள் கோஷமிட்டழைத்தன அவனை. "ஆயிஷா! நான் இல்லாத வேளையில் மறுபடியும் இங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சி செய்ய மாட்டாயே? நீ ஓடுவதற்கு உதவுவதற்காக என் முத்திரை மோதிரத்தை உனக்கு நான் தரவில்லை. உன் தன்மானத்துக்கோ கற்புக்கோ ஆபத்து வருமானால் அப்போது உன்னைக் காத்துக் கொள்ளவே இதைக் கொடுத்து விட்டுப் போகிறேன். இதைக் கொண்டு தப்பிச் செல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு" என்று அவன் தன் கையை நீட்டியபோது கன்னியவளால் பேசாதிருக்க முடியவில்லை.

"அண்ணா! என்னை ஏன் இப்படி வார்த்தைகளால் வதைக்கிறீர்கள்? உங்கள் தகுதியைக் குறைக்கும் காரியம் எதையும் செய்ய மாட்டேன் அண்ணா. இனத்திலே மாறுபட்டவளாக இருக்கலாம். குணத்திலே குறைந்தவள் அல்ல அண்ணா உங்கள் சகோதரி ஆயிஷா. எந்த அபாயங்கள் வந்தாலும் இங்கிருந்து போக மாட்டேன். நீங்கள் நம்பிக்கையோடு போகலாம்" என்ற போதுதான் வேங்கடாத்திரியின் முகத்திலே மலர்ச்சி ஏற்பட்டது. வாஞ்சையுடன் அவள் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு வேகமாக அங்கிருந்து வெளியேறினான். அவனது சகோதர அன்பிலே, பாசத்திலே அசைவற்றுப்போய் அவன் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றாள் ஆயிஷா.

சின்ன அண்ணா திருமலையினால் அவனுக்கு ஏதாவது அபாயம் வரலாமென்றே தனது மோதிரத்தைப் பாதுகாப்பாக அவளிடம் அளித்துப் போக வந்தான் அவன். சமீபகாலமாக எந்தப் போரிலும் திருமலையைக் களத்துக்கு அழைத்துச் செல்லாத பெத்தண்ணா இந்தப்போரிலும் அப்படியே செய்வார் என்று எண்ணினான் வேங்கடாத்திரி. தலைநகரில் இருக்கும் அவன் தன் இட்டப்படி சதாசிவராயரின் இச்சையைப் பூர்த்தி செய்ய முனைவானோ என்று பயந்தான். ஆனால் ராமராயரோ இம்முறை வேறு விதமாக முடிவு செய்திருந்தார். மன்னர் சதாசிவராயருடன் சதி செய்யத் தலைநகரிலே திருமலையைத் தனித்திருக்க விட விரும்பாமல் தம்முடனேயே யுத்த முனைக்கு வரும்படி செய்துவிட்டார். அணிவகுத்து நின்ற படையணிகளின் முன்னால் திருமலையும் அலங்கரித்துக் கொண்டு வந்து நின்றபோதுதான் விஷயத்தை அறிந்தான் வேங்கடாத்திரி. முதலில் வியந்தாலும் பெத்தண்ணாவின் அரசியல் சாதுரியத்தையும் ஆயிஷாவின் பத்திரம் பாதுகாக்கப்பட்டதையும் எண்ணி மகிழ்ந்து போனான்.

கடலன்ன சேனைகள் களத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. திரும்பிய பக்கமெல்லாம் படைவெள்ளம். பத்து லட்சம் காலாட்படைகள், ஒரு லட்சம் குதிரைப் படைகள், ஐயாயிரம் யானைகள், பதினையாயிரம் பீரங்கி வண்டிகள். இத்தனை பேர்களின் தேவைகளையும் நிறைவு செய்யச் சாரிசாரியாக எண்ணி மாளாத காளை மாட்டு வண்டிகளில் உணவுப் பொருள்களும் படைக்கலங்களும் மற்றும் பல பொருள்களும் போய்க் கொண்டிருந்தன. போர்க்களத்தோடு ஒரு கடை வீதியே பெயர்ந்து நகர்ந்து செல்வது வழக்கம். புகழ் பெற்ற கிருஷ்ண தேவராயர் நடத்திய போர்களிலே கூட இத்தனை பெரும் படைகள் பயன்படுத்தப்படவில்லை.

அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த பட்டத்து யானை மீது அளியா ராமராயர் கம்பீரமாக வீற்றிருந்தார். வலப்புறத்திலே வேங்கடாத்திரியும், இடப்பக்கத்திலே திருமலையும் குதிரைகளில் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். விஜயநகரத்து வீர புருஷர்களான இவர்களுக்கு முன்னும் பின்னும் புகழ் பெற்ற தளவாய்களும், பாளையக்காரர்களும், சேனாபதிகளும் தளபதிகளும் தகுதிக்கேற்பச் சென்று கொண்டிருந்தார்கள். விஜயநகரப் படைகளின் அந்த அணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது: இத்தனை படைகளின் புறப்பாட்டினாலும் செந்தூள் கிளம்பிச் சூரிய ஒளியையே மறைத்துக் கொண்டது. உப்பரிகைகளில் நின்ற பெண்கள் மலர்களைத் தூவி வீரர்களை வழியனுப்பி

ஞர்கள்: ஆலய மணிகள் ஆடி கூவிக்கொண்டிருந்தன. இந்நிலை சோலா கான்களுடன் துங்கபத்திரை நதியைக் கடந்து தவரகிரி, கன்னெகிரி ஆகிய ஊர்களுக்கிடைப்பட்ட பரந்த வெளியில் பாடிவிறங்கிப் பகைவர்களின் செயலை எதிர்பார்த்துக் காத்திருந்தார் ராமராயர்.

தலைநகரிலோ அன்றாட அலுவல்களில் எவ்வித மாற்றமும் இல்லை. களத்திலுள்ள படைகளுக்குக் களஞ்சியங்களிலிருந்து அவ்வப்போது உணவுப் பொருட்களும் ஆயுத சாலையிலிருந்து தளவாடங்களும் போய்க்கொண்டிருந்ததைத் தவிர எவ்விதப் புதுமையுமில்லை. அடிக்கடி குதிரை வீரர்கள் பாசறையிலிருந்து அரண்மனைக்கும் அரண்மனையிலிருந்து பாசறைக்குமாகப் பறந்து கொண்டிருந்தார்கள். போரைப் பற்றிய அச்சமோ, பரபரப்போ, ஆவலோ ஏதுமில்லை நாட்டு மக்களிடம். தங்களுக்குத்தான் வெற்றி என்ற உறுதியோடு உற்சாகமாகவே அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தனர்.

உற்சாகமிழந்த நிலையில் அந்த விஜய நகரத்திலிருந்தது ஆயிஷா ஒருத்திதான். அவள் இதயத்திலே இடம் பெற்றவன் பாதாளச் சிறையிலே பரிதவித்துக்கொண்டிருக்கும்போது அவளால் எப்படி மகிழ்ச்சியோடிருக்க முடியும்? தன் காதலனின் வாழ்வு அந்தக் காராக்கிருகத்தோடு முடிய வேண்டியதுதானா? அதை அவளால் நினைக்கவே முடியவில்லை. நெஞ்சம் நடுங்கியது. யூசப்கானை எப்படியாவது விடுதலை செய்து இங்கிருந்து அனுப்பிவிட்டால் போதும். அவனோடு நடக்கும் ஆனந்த வாழ்வைக் கூட அவள் விரும்பவில்லை. தன் விடுதலையை விட அவன் விடுதலையையே பெரிதாக நினைத்தாள் இப்போது. ஆனால் அது எப்படிச் சாத்தியமாகும்? விஜயநகரத்தின் சிறையிலிருந்து ஒருவனை விடுவிப்பதென்பது இலேசான காரியமல்லவே! இதே நினைவால் ஏங்கலானாள் ஆயிஷா. 'வேங்கடாத்திரி கொடுத்துச் சென்ற மோதிரத்தைப் பயன்படுத்தி யூசப்கானின் விடுதலைக்கு வழி செய்தால் என்ன?' என்று அடிக்கடி அவள் உள்மனத்தில் ஓர் எண்ணம் குடையலாயிற்று. ஆனால் அந்த எண்ணத்தை வளரவிடாமல் கிள்ளிக் கொண்டே இருந்தாள். ஆனால் அதுவோ கிள்ளக் கிள்ளத் துளிர்விடலாயிற்று. வேங்கடாத்திரி தன்னிடம் கொண்டுள்ள நம்பிக்கையை நாசமாக்கித் தான் துரோகியாக மாறுவதை விரும்பவில்லை அவள். விவகாரம் பேசிய காதல்



"பார்த்தீரா சார், மினியேச்சர் டிரான்ஸிஸ்டர் செட், ரொம்பச் சின்னது!''

"அதைப் பார்த்து அவருக்கு என்ன ஆகணும்? மினியேச்சர் டவரா செட் இருந்தால் சொல்லும்!''

உள்ளத்துக்கு விசுவாசமுடன் 'மாட்டேன்', 'முடியாது' என்று வீம்பாக மறுத்து வந்தாள். ஆனால் அதை மறுக்க மறுக்க மறக்க முடியாமல் அதுவே அவள் நினைவெல்லாம் நிறைந்து நின்றது. தன் பார்வையை உறுத்திக் கொண்டு விரலில் இருக்கும் அந்த மோதிரத்தைக் கழற்றி உள்ளே வைத்தாள். ஆனால் உள்ளத்திலுள்ளே பதிந்து விட்ட அந்த எண்ணத்தை அவளால் ஒளிக்க முடியவில்லை. நாளாக ஆக அந்த எண்ணமே மெள்ள மெள்ள அவளை ஆட்கொண்டு விட்டது.

'இதன் உதவியால் நான் தப்பிச் சென்றால் தானே தவறு. அவருக்கு விடுதலை அளித்தால் என்ன?' என்று நினைக்குமளவுக்கு, அவள் உறுதி வளர்ந்து விட்டது. அந்த உறுதியோடு அவள் உள்ளத்திலுள்ளே வெகு நாட்களாக அமுந்திக் கிடந்த பழிதீர்க்கும் வெறிக் குணமும் தலை தூக்கியது. 'உன் பெற்றோர்களைக் கொன்ற கொடுமையாளர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்கும் தருணம் வாய்த்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள். நழுவ விடாதே!'' என்று நச்சரித்தது பேய்க் குணம். 'பலஹீனங்கள் உள்ள பெண்ணாக வாழ்ந்து புண்ணானது போதும். உடனே புறப்படு. உன்னால் விடுதலை செய்யப்படுபவன் உன் இனத்துக்கே வாழ்வளிக்கலாம். இந்தப் போரின் போக்கையே மாற்றியமைக்கலாம். மயங்காதே!' என்று விரட்டியது.

'இது சாம்ராஜ்யத்துக்கு எதிரான செயல். மோதிரத்தைத் தவறாகப் பயன்படுத்த மாட்டாய் என்ற நம்பிக்கையில்தான் உன்னிடம் அதைக் கொடுத்துச் சென்றிருக்கிறேன் வேங்கடாத்திரி'' என்று நியாயம் பேசிய மனம் வலுவிழந்து போயிற்று. சகோதரனின் கட்டளையைக் காதலின் வேகம் கடந்து நின்றது. மோதிரத்தின் உதவியால் யூசப்கானைக் காப்பாற்றிவிடுவது என்ற முடிவுக்கு வந்தபோதும் குற்றமிழைக்கும் மனப்பான்மையின் உறுத்தலை அவளால் தாங்க முடியவில்லை. அந்தத் தாபமும் தயக்கமுமே அவளிடம் போலியானதோர் உறுதியையும் வளர்த்தது.

ஒரு நாள் இரவு ஆயிஷா ஆண் வேடம் தரித்துக் கொண்டு கிளம்பினாள். அவள் இடக்கை விரலிலே தளபதி வேங்கடாத்திரியின் முத்திரை மோதிரம் மின்னியது. தான் செய்யப் போகும் காரியத்துக்குக் கற்பித்துக் கொண்ட பொய்யான சமாதானம் எப்படி உள்ளத்தில் ஒட்டாமல் நின்றதோ அதைப் போலவே அவள் ஒட்ட வைத்துக் கொண்டிருந்த பொய்யான மீசை

யும் ஓட்டுதலில்லாமல் மேஜுதட்டிக் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. தலையிலே கம்பீரமான தலைப்பாகையும், உடலை மூடி மறைத்து இறுக்கமாக அணிந்திருந்த அங்கியும் ஆயிஷாவை ஒரு முறுக்கான வாலிபனாகவே ஆக்கியிருந்தன.

பாசறையிலிருந்து தளபதி வேங்கடாத்திரியின் உத்தரவைத் தாங்கி வரும் வீரனாக வேகம் காட்டி நின்றாள் ஆயிஷா. அரண்மனை அசுவசாலை அதிகாரியிடம், இரண்டு குதிரைகள் வேண்டும் என்றும், சிறைச்சாலையில் கைதியாக உள்ள அந்நிய நாட்டு ஒற்றனை அழைத்து வரும்படி கட்டளை என்றும் கூறி மோதிரத்தைக் காட்டினான். மிடுக்குடன். வீரனின் வார்த்தையைக்கேட்டு நம்பிக்கைப்படாதவன் மோதிரத்தைக் கண்டதும் ஓடி வந்தான். இரண்டு குதிரைகளுடன்.

வேங்கடாத்திரியின் மோதிரத்துக்குள்ள மதிப்பைக் கண்டு அவள் வியப்படைந்தாள். அவள் வியப்பை அதிகமாக்கும் செயல்கள் சிறைச்சாலையிலும் நடந்தன. மோதிரத்தைக் கண்டதும் சிறைச்சாலையின் மூடிய கதவுகள் திறந்து கொண்டன. வணங்கி வழி விட்டு ஒதுங்கி நின்றார்கள் காவலாளிகள். இருள் கவிந்த பாதாளச் சிறையிலிருந்து யூசப் கானைக் கொண்டு வரச் செய்தாள். திடீரென்று இருளிலிருந்து ஒளிக்கு வந்த போது ஒன்றையுமே காண முடியாமல் கூசும் கண்களோடு கஷ்டப்பட்டான் யூசப் கான். ஒருவிதத்தில் அவனுடைய இந்த நிலை அவளுக்குச் சாதகமாகவே இருந்தது. காவலாளிகளின் மனத்தில் சந்தேகத்தின் சாயல் கூட விழாதிருப்பதற்காக முன்னதாகவே, "அவன் கைவிலங்குகளை அகற்றுங்கள். அந்தக் காரியத்தை நான் பாசறையில் தளபதியாரின் முன்னிலையில் செய்துகொள்கிறேன்" என்று கூறி விலங்குகளுக்கான சாவியைத் தான் வாங்கிக் கொண்டாள்.

அசுவசாலையிலிருந்து தயாராகக் கொண்டு வந்திருந்த குதிரையின் மீது விலங்கிடப்பட்ட யூசப் கானை ஏற்றி விடுவதற்கும் சிறைக் காவலாளிகளின் உதவியையே நாடி அவர்களிடம் விடை பெறும்வரை அவள் உள்ளம் பட்டபாடு? அவள் அருகில் யாராவது போயிருந்தால் அந்த இதயத்தின் துடிப்பை நன்றாகக் கேட்டிருக்கலாம்.

பிணைத்த கரங்களோடு பிரமிப்பு நீங்காத நிலையில் குதிரைமீதமர்ந்தான் யூசப்கான். பாதாளச் சிறையிலிருந்து வெளிவந்தாகி விட்டது. இனி விதியின் வழியே போவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று உறுதியோடு உட்கார்ந்திருந்தான். அவனது குதிரையின் கடிவாளமும் ஆணுடையிலிருந்த ஆயிஷாவின் பிடியிலேயே இருந்தது. வெகு தூரம் குதிரைகளை விரட்டிக்கொண்டு போனவள் நகருக்கு வெளியே ஓர் இடத்துக்கு வந்ததும் குதிரைகளை நிறுத்திக் கீழே இறங்கினாள். அது நள்ளிரவு நேரம். நிழல் மூடிய பூமியிலே நிலவின் ஒளி சிந்திக் கிடந்த மாந்தோப்பிலே அவர்கள் இருந்தார்கள்.

"பாமினி ராஜ்யத்தின் ஒற்றரே! குதிரையிலிருந்து கீழே இறங்கலாமே" என்ற ஆயிஷா தன் ஆணுடைக்கான மேலங்கியை மெல்ல விலக்கியவாறே நிலவொளிக்கு வந்து நின்றாள். அந்தக் குரல் அவனைக் குதூகலத்தில் ஆழ்த்தியது. குதிரையிலிருந்து குதித்தோடி வந்தவன் "ஆயிஷா!" என்று அவளை அணைக்க முயன்றபோதுதான் தன் கைகளை விலங்குச் சங்கிலி பிணைத்திருப்பதை உணர்ந்தான்.

"ஆயிஷா! ஆயிஷா! நீ... நீயா? நான் நினைக்கவேயில்லை. என்னைப் பாதாளச் சிறைக்கு அனுப்பியவள் நீதான் என்று உன் மீது எத்தனை வெறுப்பை வளர்த்துக் கொண்டிருந்தேன் தெரியுமா?" என்ற போது உணர்ச்சிவசப்பட்ட அவன் குரல் அடைத்துக் கொண்டது.

"ஆண்கள் அவசர புத்திக்காரர்கள்தானே? உங்கள் முடிவும் அதுவாகத்தான் இருக்கும் என்று எனக்கும் தெரியும்." அவன் விலங்குகளைத் தன்னிடமுள்ள சாவியால் அகற்றலானாள் ஆயிஷா.

ஆனந்த அதிர்ச்சியினால் பேச முடியாமல் அவன் உதடுகள் துடித்தன. விலங்கின் பிணைப்பிலிருந்து விடுதலை பெற்ற தன் கரங்களால் அவள் முகத்தை ஏந்திக்கொண்டு நீர்த் திரையிட்ட நயனங்களால் அந்த முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் யூசப்கான். உணர்ச்சிகள் ஒருநிலைப்பட்டதும் "ஆயிஷா! உன் விடுதலைக்கு உதவுமாறு என்னிடம் ஓடிவந்தாயே, அந்த நாளையும், இன்று நீயே என் விடுதலைக்குக் காரணமாக இருக்கும் இந்த நிலையையும் எண்ணிப் பார்க்கும்போது எனக்கே வெட்கமாக இருக்கிறது. ஆயிஷா, இதை எப்படி உன்னால் சாதிக்க முடிந்தது?" என்று கேட்டான்.


மோதிரத்தின் நினைவிலே வேங்கடாத்திரியின் முகமும் முன்னால் வந்து அவள் அறிவைக் குதறலாயின. பரபரப்புடன் "அன்பரே, இங்கு நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் உங்களை அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. விஜயநகரத்தின் காற்றுக்கும் உணர்வு உண்டு என்பதை உணர்ந்திருப்பீர்கள். ஆகவே இந்த உடைகளை அணிந்து கொண்டு இந்துவாக மாறி உடனே இங்கிருந்து வெளியேறுங்கள்" என்று அவனிடம் ஒரு சிறு மூட்டையை நீட்டினாள். அவள் முக மாறுதலையும் முடிவான பேச்சையும் கேட்ட யூசப்கான் திகைத்துப் போனான்.

"அப்படியானால் என்னுடன் நீ வரவில்லையா?" என்று கேட்டான்.

"நான் வருவதற்கில்லை. இங்கிருந்து வெளியேறுவதில்லை என்று என் சகோதரருக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். அதன் விளைவுதான் உங்கள் விடுதலை. இதோ இந்த மோதிரத்தைக் காட்டினால் கோட்டைக் காவலாளிகள் உங்களை எவ்வித விசாரணையுமின்றி வெளியே செல்ல அனுமதிப்பார்கள்" என்ற ஆயிஷா பொங்கி வரும் அழுகையைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டவாறு வேங்கடாத்திரியின் முத்திரை மோதிரத்தை அவன் முன் நீட்டினாள். (தொடரும்)



கால்கேட் டூத் பிரஷ்
மேலும் துப்புரவாக உங்கள்
பற்களை சுத்தம் செய்யும்படி
அமைக்கப்பட்டிருக்கிறது!
ஷார்ட் • மீடியம் • ஸாப்ட்
COLGATE
NYLON TOOTH BRUSH
ADULT
HARD
Colgate
புதியது
மிகவும்
கவர்ச்சியானது!!
கால்கேட்
சூப்பர் டீலக்ஸ்
டூத் பிரஷ்
வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி
TBG-15 TAM



பிலிப்ஸ்
லாம்புகள்
வாங்குங்கள்
—அவற்றிலும்
சிறந்தவை
வேறொன்றுமில்லை!
பிலிப்ஸ் ஆர்ஜெண்டா
PHILIPS
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
JWTP 177



கல்கத்தாவில் தமிழோசை

கல்கத்தா பாலிகஞ்ச் பகுதியிலுள்ள ஏரிக் கரை ரஸ்தா—சென்ற டிசம்பர் மாதம் இருபத்தியொன்றாம்தேதி நள்ளிரவு. நடுக்கும் குளிரில் அதைக் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாது ஓர் உருவம் மேலேயும் கீழேயும் கையை ஆட்டிக் கொண்டு வருகிறது. கூடவே பாட்டு ஒலியும் எழுகிறது:

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே!—எங்கள்
தந்தையர் நாடென்னும் பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே."

பாட்டினிலே ஓர் அழுத்தம், கம்பீரம்.

எதிர்ப்பக்கமிருந்து கொட்டும் பனியையும் வெட்டும் குளிரையும் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாது தார் பாய்ச்சிய வேட்டிக்குத் துணையான ஒரே ஒரு வேட்டியுடன் தாடி மீசை சகிதம் மெதுவாக வரும் மற்றோர் உருவம் பாடிக்கொண்டு வரும் முண்டாக முரட்டு மீசை, கருப்புக் கோட்டு நபரைக் கவனித்து விட்டு, ஒரு கணம் தயங்கி நிற்கிறது. முண்டாக ஆசாமி வேகமாக முன்வந்து பனிப் படலத்தை ஊடுருவி வீசும் மின்சார விளக்கின் ஒளியில் சட்டையில்லாதவரை உற்று நோக்கினர்.

"வள்ளுவப் பெருந்தகையே, வருக! வருக! வணக்கம்!" என்று கரம் கூப்புகிறார். தாடிக்காரர் முகத்தில் புன்னகை மிளிர்கிறது.

"ஆஹா!... தமிழகத்தின் தவப் புதல்வன் பாரதி! கவிஞரே! வருக... இது வங்கத்தில் உள்ள கல்கத்தா இல்லையோ? நீவிர் இந்த வேளையில் செந்தமிழ் நாட்டைப் பாடியதன் காரணம்?"

பாரதியார் தமக்கே உரித்தான கர்ஜனைச் சிரிப்புச் சிரிக்கிறார். "மன்னிக்க வேண்டும், வள்ளுவப் பெருமானே! சிறுவன் உற்சாகத்தால் சிரித்து விட்டேன். காரணம் நிறைய இருக்கிறது. நீங்கள் எழுதிய இருக்குறள் வரிகள் இரண்டையே சான்றாகச் சொல்லி விளக்குகிறேன்.

'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது'

என்று எழுதிவைத்தீர்களே! அந்த உதவியை இன்று வங்கத்தவர்கள் தமிழ் மொழிக்குச் செய்து விட்டார்கள்: உதவியாகச் செய்யவில்லை! தொண்டாகவே செய்துவிட்டார்கள். தமிழ் நாட்டையே, தமிழ் வளர்ந்ததையே தங்களுடன் இணைத்துக் கொண்ட மாதிரி கடந்த நாட்களாக இந்த வங்கத்தின் தலைநகர்த் தெருக்களிலே தமிழ் தேனைப் பாலாக ஓடிற்றே பெருமானே! நாம் எடுத்த முயற்சிகள் வருங்காலச் சந்ததிகளுக்குப் பயன் கொடுக்கிறது. அவை தமிழ்ச் சந்ததிகள், மற்ற சந்ததிகள் என்று பாகுபாடு செய்யவில்லை. பன்மொழிகளிலும் பயன் அளிக்கின்றன. ஜெய்! பராசக்தி!"

வள்ளுவர் ஆனந்தப் பெருமூச்சு விடுகிறார். பாரதியார்,

"தேவர் வருகவென்று சொல்வதோ? ஒரு
செம்மைத் தமிழ் மொழியை நாடுதல்
ஆவல் அறிந்து வருவீர் கொலோ?"

என்று ஏரிக்கரை எதிரொலிக்கப் பாடுகிறார்.

"நானும் அந்தத் தமிழ் மணத்தில் மயங்கித்தான் வந்தேன்! வாருங்கள், போகலாம்" என்கிறார் வள்ளுவர்! இரு வானவர்களும் நடக்கிறார்கள்.

கடந்த டிசம்பர் மாதம் 18, 19, 20, 21 தேதிகளில் கல்கத்தா நகரில் இலக்கியப் புயல் இன்பமாக அடித்தது. தமிழ் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. கவி மழை கனமாகப் பெய்தது. காரணம், முதல் நாள் தென்னிந்தியச் சங்க அரங்கில் நடந்த தமிழ் இலக்கிய கலாசாரக் கழகத் தொடக்க விழாவும் அடுத்த இரண்டு நாட்களில் தியாகராச அரங்கில் நிகழ்ந்த அனைத்திந்திய எழுத்தாளர் பெரு மன்றத்தின் மூன்றாவது மகாநாடும், நான்காம் நாள் கொண்டாடப்பட்ட கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழாவும்தான்!

தமிழ் இலக்கியம் கலைச் செல்வங்கள் ஆகியவற்றைப் பிறமொழி வல்லுநர்களின் உதவி கொண்டு சிறப்பாக மொழிபெயர்த்துப் பாரதம் எங்கும் பரப்ப வேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் தொடங்கப்பட்டிருக்கும் தமிழ் இலக்கிய கலாசாரக் கழகத்துக்கு, பன்மொழிப் புலவர் தேசியப் பேராசிரியர் டாக்டர் சுநீதிகுமார் சாட்டர்ஜி (நன்னெறி முருகன்) தலைவராகப்

பாணியற்ற முன்வந்திருக்கிறார். இந்தக் கழகத்தை நல்ல முகூர்த்தத்தில் தொடங்கி வைக்கும் பேறு பேராசிரியர் அ. சீநிவாச ராகவனை அடைந்தது.

மறுநாள் எழுத்தாளர் பெருமன்றத்தின் தலைவர் என்ற முறையில் திரு சீநிவாச ராகவன் தம் தலைமை உரையில் 'இந்த மகாநாடு பரம்பரம் புரிந்துகொள்ளுதல் என்னும் தத்துவத்தைப் பரப்பும் நிகழ்ச்சியாகும்' என்று குறிப்பிட்டார்.

அன்றைய மாலை நிகழ்ச்சிகள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தன. வரவேற்புக் குழுத் தலைவரும் கல்கத்தா பிரமுகருமான திரு எஸ். பி. வெங்கடபதி, கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கையை வற்புறுத்தித் தம் வரவேற்புரையை நிகழ்த்தினர்.

இதுவரை தமிழ் இலக்கியங்கள் பற்றி ஆங்கிலத்தில் வெளியாயிருக்கும் அத்தனை நூல்களையும், ஆங்கில மொழிபெயர்ப்புகளையும், ஒவ்வொன்றிலும் எட்டு எட்டுப் பிரதிகள் சேகரித்துக் கல்கத்தா நகரில் உள்ள அத்தனை பல்கலைக் கழகங்களுக்கும் வங்க இலக்கிய கலாசார சங்கங்களுக்கும் அனைத்திந்திய எழுத்தாளர் பெருமன்றத்தின் சார்பில் அன்பளிப்பாக அளிக்கப்பட்டன.

இந்த நூல்களை யெல்லாம் வாங்கி அன்பளிப்புச் செய்யப் பெரு மன்றத்துக்குப் பெரிதும் உதவிய பெரியோர்கள் ராஜா சர் முத்தையா செட்டியார், தொழிலதிபர் பொள்ளாச்சி என். மகாலிங்கம், திரை உலகப் புகழ் எம். ஜி. ராமச்சந்திரன் ஆவர். இந்த அன்பளிப்புத் திட்டத்தை வெற்றியுடன் நடத்தி மன நிறைவுபெற நிறையத் துணை செய்தவர் ஸ்ரீ டி. கே. ஷண்முகம்.

எழுத்தாளப் பெரியோர்களுக்கு விருதுகளாக வழங்க வெள்ளிக் குத்துவிளக்கு அளித்தவர் திரு ஏவி. மெய்யப்பன்.

அன்றைய மாலை விழாவில் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் பாரத மொழித் துறைத் தலைவரும் பிரபல நாவலாசிரியருமான பேராசிரியர் பிரமதநாத் பிசி அவர்களும் கலந்து கொண்டார். சாகித்திய அகாடமி பிராந்தியச் செயலாளர் திரு லஹிஷ் ராய் தமிழ் எழுத்தாளர் சங்கச் சிறப்பு வெளியீடான 'தமிழ் இலக்கியம்' என்ற ஆங்கிலத் தொகுப்பு நூலை வெளியிட்டார்.

மறுநாள் காலை நிகழ்ச்சி என்றும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கும் கவியரங்கம். 'எழுதுகோல் தெய்வம். இந்த எழுத்தும் தெய்வம்' என்ற தலைப்பில் பல கவிஞர்கள் தங்கள் அஞ்சலிகளைச் செலுத்தினார்கள். மாலை நிகழ்ச்சியில் 'இந்திய மொழிகளில் மறுமலர்ச்சி' என்ற பொருள் பற்றிய கருத்தரங்கத்தைக் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி பி. பி. சக்கரவர்த்தி தொடங்கி வைத்தார். பல பேராசிரியர்கள் அற்புதமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள்.

நான்காம் நாள் இரவு கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது ஆண்டு



வங்கக் கவிஞருக்குக் குத்துவிளக்குப் பரிசு.


விழா, சென்னை எழுத்தாளர் திரு ஜானகிராமன் தலைமையில் தொடங்கியது.

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தவரும் தமிழர்கள் விழாக்கள் அத்தனையிலும் ஆர்வமுடன் பங்கு கொண்டவருமான காலஞ்சென்ற திரு ஆ. க. கிருஷ்ணனின் திருவுருவப் படத்தைத் திரு சீநிவாசராகவன் திறந்து வைத்தார்.

பிறகு, குருதேவரின் கவிதைகளைத் தமிழில் தந்திருக்கும் திரு சீநிவாசராகவனுக்கும் தமிழ் வளர்ச்சிக்குச் சேவை செய்துவரும் கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதனுக்கும் தமிழ் எழுத்தாளர்களின் வளர்ச்சியையும், நலனையும் தம் மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டு பாடுபடும் கவிஞர் அ. வே. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியாருக்கும் திரு எஸ். பி. வெங்கடபதி விருதுகளாக வெள்ளிக் குத்துவிளக்குகளை வழங்கினர். திரு கி. வா. ஜகந்நாதன் எதிர்பாராத காரணங்களினால் கல்கத்தாவுக்கு வர இயலாமல் போனதால் அன்னாருக்கான விருதைத் திரு ரெட்டியார் அவர் சார்பில் பெற்றுக் கொண்டார்.

கல்கத்தா தமிழர் என்றதும் நினைவின் முன் வரிசையில் வந்து நிற்பவர் அன்பர் ப. ந. தியாகராஜன். அவரும் அவர் நண்பர்கள் எஸ். பி. வெங்கடபதி, ஆர். கே. சாரி, கருப்பையா போன்ற உற்சாகமே உருவான எத்தனையோ கலை அன்பர்களும் உணவு உறக்கத்தை மறந்து இந்த விழாக்களைச் சிறப்புறச் செய்ய உழைத்தார்கள்; வெற்றியும் கண்டார்கள். தமிழ்க் கொடியை வங்கத்தில் உயர்த்தினார்கள். வங்கத்தில் எழுந்த தமிழோசை என்றும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும்.





பிறந்த நாள்

எம்.டி. வாசுதேவன் நாயர்

நாளை தினம் என் பிறந்த நாள்.

எனக்கு ஞாபகம் இருக்கவில்லை. அவன் கடிதத்திலிருந்துதான் அது எனக்குத் தெரிய வந்தது.

அவன் எழுதியிருக்கிறான்: "வருகிற வியாழன் அன்று உங்கள் பிறந்த நாள் வருகிறது. காலையில் குளித்துவிட்டுத்தான் ஏதாவது சாப்பிட வேண்டும். நான் இங்கே சிவன் கோவிலில் அர்ச்சனை செய்கிறேன். அங்கே பக்கத்தில் ஏதாவது கோவில் உண்டா? இருந்தால் குளித்துவிட்டுக் கோவிலுக்குப் போய்க் கும்பிடவும்..."

அவனது அந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்கு என்னென்னவோ நினைவுக்கு வந்தன. சிறு பையனாக இருந்த அந்தக் காலம் - சென்று மறைந்த அந்தப் பிறந்த நாட்கள், சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் வந்த ஒரு பிறந்த நாள்; அது சிந்தையில் தெளிவாகத் தேங்கி நின்றது.

அந்தப் பிறந்த நாளை வட்டமிட்டு வேதனை தருகிற நினைவுகள் நிறைய உள்ளன. அது மட்டுமல்ல; வேறொரு முக்கியமான விஷயமும் உண்டு. அன்று நான் ஒருவரைக் கொல்ல வேண்டும் என்று தீர்மானித்தேன்!

அந்த மனிதரைக் கொல்ல வேண்டும் என்ற துடிப்பு கட்டுக்கடங்காமலிருந்தது. எப்படியாவது கொன்றுதான் ஆக வேண்டும். விஞ்ஞான முறையிலே கொல்ல ஆறு அல்லது ஏழு வயதுச் சிறுவனான எனக்கு அன்று தெரிந்திருக்கவில்லை. கடைசியாகக் கொலை செய்ய ஒரு நூதனமான வழியைக் கையாண்டேன். அதுதான் குளித்துத் தெய்வத்தை வேண்டுவது!

யார் இதைப் பற்றிச் சொல்லித் தந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. விஷயம் இதுதான். ஊர்த் தெய்வங்களிலே கொல்லுவதற்குப் பெயர் போன தெய்வங்கள் சில உள்ளன. அவர்களைக் கும்பிட்டுப் பிரார்த்தித்தால் எதிரியின் கதி அதோகதிதான்.

நான் வேண்டினேன். மனமுருகி வேண்டினேன். ஆனால் என்ன காரணமோ என் எதிரி சாகவில்லை. அவரைக் கொல்ல நினைத்தது என் பிறந்த நாளன்றுதான்.

இந்தப் பிறந்த நாள் ஒரு முக்கியமான நாள் என்று எனக்குத் தெரிந்திருந்தது.

எங்கள் பள்ளியில் வருஷத்தில் ஒரு நாள் எல்லோருக்கும் அவலும் வெல்லத் தண்ணீரும் கிடைக்கும். அன்றுதான் பள்ளி மானேஜரின் பிறந்த நாள். மத்தியானம் மானேஜர் வீட்டில் பிரமாதமான விருந்து. பாயசம், பப்படாம், வறுவல் கிடைக்கும். எங்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் அன்று மத்தியானம் மானேஜர் வீட்டில்தான் சாப்பாடு.

ஓணம் பண்டிகையை விடப் பெரிதா, இந்தப் பிறந்த நாள்? எங்கள் வீட்டில் ஓணத்தன்று விருந்து உண்டு. ஆனால் பாயசம் இருக்காது.

எங்கள் பள்ளி மானேஜரின் பிறந்த நாளைப் போலவே, எங்கள் மாமாவின் பிறந்த நாளும் ஏகத் தடபுடலாக இருக்கும். அன்று மத்தியானம் எங்கள் வீட்டுக்கு நிறையப் பேர் சாப்பிட வருவார்கள். வராந்தாவிலும் உள்ளேயும் வரிசை வரிசையாக இலை போடுவார்கள்.

வீட்டிலே விருந்து என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். தாமோதரனைச் சேர்த்து நாங்கள் ஐந்து பேர். தாமோதரன் பள்ளிக்கூட விடுமுறையின்போதுதான் எங்கள் வீட்டில் இருப்பான். அவன் எங்களை விடப் பலசாலி. தடிமாடு என்றுதான் நாங்கள் அவனை ரகசியமாகக் கூப்பிடுவோம். வெளியே தெரிந்தால் ஆபத்து. மாமா பிள்ளையாயிற்றே! கோலி விளையாடும் போதும் அவன்தான் ஜயிப்பான். அவன் எங்கள்

முட்டியில் அடித்தால் கேட்க வேண்டாம்: விரல்கள் நொறுங்கும். நாங்கள் புன்னைக்காயால் தான் கோலி விளையாடுவது. தாமோதரனிடத்தில் நிறக் கோலி உண்டு. ஆகையால் அவனிடமிருந்து அடி வாங்கினால் மூன்று நாட்கள் வலிக்கும்.

மாமாவின் பிறந்த நாளன்று எங்களுக்குச் சாப்பாடு கிடைக்கும்போது மத்தியானம் கடந்து விடும். ஏனென்றால் விருந்தாளிகள் எல்லோரும் சாப்பிட்டு முடிந்த பின்தான் நாங்கள் உட்கார வேண்டும். ஆனால் தாமோதரன் மட்டும் விதிவிலக்கு.

மற்ற நாட்களில் கூடத் தாமோதரன் மாமாவோடு உட்கார்ந்து சாப்பிடுவதற்குத் தடையில்லை. உள்ளே மனை போட்டு இலை வைத்தாயிற்றென்றால் நாங்கள் எல்லோரும் அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்று கட்டளை. போகாவிட்டால் கேட்கலாம்: ''இந்தப் பாழாய்ப் போனதுங்க ஒன்றும் செய்ய விடமாட்டேங்குதுங்களே! அடப் பிசாசுங்களா! என்ன கூத்துடா இங்கே பார்க்கறதுக்கு இருக்கு?''

பாழாய்ப் போனதுங்க மொத்தம் நாங்கள் நாலு பேர். நான், கோபி, அப்பு, குட்டியம்மாளு. தாமோதரன் இதிலே சேர மாட்டான்.

அம்மாவோ சித்தியோ எங்களிடத்தில் சொல்லுவார்கள்: ''நீங்க போய்க் குளிச்சுட்டு வாங்க. சாப்படறதுக்காச்சுன்னு கூப்பிடறேன்.''

மாமாவும் தாமோதரனும் சாப்பிடுவதை நாங்கள் கதவு இடுக்கு வழியாகப் பார்ப்பதுண்டு. பப்படாம், தேங்காய்ச் சட்னி, வடாம், வறுவல், எல்லாம் இலையில் காணலாம். காராமணி வறுவல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். தாமோதரன் காராமணி வறுவலைக் கறுகறுன்னு கடிக்கும்போது என் வாயில் தண்ணீர் ஊறும்.... எட்டிப் பார்ப்பது மாமிக்குத் தெரியக் கூடாது.

நாங்கள் நால்வரும் சர்க்கரைக்கட்டி மாமரத்தடிக்குப் போவோம். சர்க்கரைக் கட்டி என்று அதற்குப் பெயர் வரக் காரணம் அது சின்னதாக எலுமிச்சம் பழ அளவே இருந்தாலும் ருசியில் சர்க்கரையைத் தூக்கியடிக்கும்.

மரத்தைச் சுற்றி நான்கு பக்கமும் வெய்யில் பற்றி எரியும். நாங்கள் நான்கு பேர் மட்டுமாக இருந்தால் எந்தச் சண்டையும் இருக்காது. பக்கத்து வீட்டுப் பையன்கள் வந்தால் சண்டைதான். நாங்களெல்லாம் ஒன்று சேர்ந்து அவர்கள் ஆக்கிரமிப்பை எதிர்ப்போம்.

மாமரத்தில் அணில் ஏறினாலோ, அல்லது காற்று வீசினாலோதான் மாம்பழம் கீழே விழும். அணில் ஏறுவதையும் காற்று வீசுவதையும் எதிர்பார்க்கும்போது மனம் மட்டும் என்னமோ வீட்டுக்குள்ளேதானிருக்கும்; கூடக் கூடச் சாதம், வடாம், வறுவல், பப்படாம் இவைகளைப் பற்றி எண்ணியபடியே.

''நாமும் மாமா பிள்ளைங்களா இருக்கக் கூடாதா?''

அப்புவினுடைய இந்த அபிப்பிராயம் எல்லோருமே அங்கீகரித்ததுதான்.

தாமோதரன் நீட்டி இழுத்து ஏப்பம் விட்டுக் கொண்டு வயிற்றைத் தடவி எங்கள் பக்கத்தில் வரும்போது குழம்பின் ரம்மியமான வாசனை மூக்கைத் துளைக்கும். அது பெருங்காயத்தின் வாசனையா? வறுவலைப் பற்றிக் கேட்டறிய வேண்டும் என்று ஆசை எழும்; இருந்தாலும் கேட்கமாட்டோம்.

சில சமயங்களில் இலையில் பரிமாறின வறுவலை அவன் தின்னாமல் கையில் வைத்திருப்பான். எங்கள் எதிரில் வந்து தின்பதற்கு அவனுக்கு என்ன சந்தோஷமோ? ஒரு துண்டு வறுவல் கிடைக்காதா என்று நான் ஏங்குவதுண்டு. அப்புவும், கோபுவும் இருக்கும் போது கேட்க ஒரு வெட்கம்.

ஒரு தடவை நான் மெதுவாக அவனிடம் கேட்டேன்: ''டேய், ஒன்னே ஒன்னு எனக்குக் கொடுடா.''

அவன் வாய் திறந்து கோணி காட்டிச் சொன்னான். ''ஆசையைப் பாரு, ஆசையை!''

என்னுடைய தன்மானம் கீறிக் காயமுற்றது.

மாம்பழம் கிடைத்தால் ஒரு துண்டுகூட அவனுக்குக் கொடுக்காமல் சாப்பிட்டு நான் அதற்குப் பழி வாங்குவது வழக்கம்.

தாமோதரன் பேராசைக்காரன். ஆனால் மாமியின் அபிப்பிராயப்படி நான்தான் பெரிய பேராசைக்காரன்!

வெகு நேரம் காத்திருந்த பிறகு அம்மா கூப்பிடுவது கேட்கலாம்: ''கிருஷ்ணு, எல்லாம் வாங்கடா.''

எங்களுக்குப் பரிமாறி வைத்திருப்பார்கள். சாதம் அல்ல; வரிசை வரிசையாகக் கிண்ணங்களில் கஞ்சியும், மஞ்சள் நிறக் குழம்பும். அதைப் பார்க்கும் போது எனக்குக் கோபம் வரும். யாருடன் என்று எனக்கே தெரியாது. உலகம் முழுவதையும் சபித்துக் கொண்டே நான் அதை உள்ளே தள்ளுவேன்.

கஞ்சி குடிக்கும் போது வேண்டுமென்றே நான் அம்மாவிடம் சண்டை இடுவேன். அம்மாவால் ஒன்றும் ஆகாது என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் கஞ்சி குடிக்கப் பிடிக்காத நான், ''வீட்டுக் களஞ்சியத்திலே தான் நிறைய நெல் இருக்கிறதே! மாமாவுக்கும் தாமோதரனுக்கும் மட்டும் சாதம்; நமக்கு மட்டும் ஏன் இந்தக் கஞ்சி?'' என்று காய்வேன்.

மாமாவுக்கு எங்களிடத்தில் ஏன் இந்தப் பகைமை? எவ்வளவோ யோசித்தும் பிடிபடவில்லை. தாமோதரனுக்கு வாங்கிக் கொடுப்பது போல் ஓணத்தின் போது பந்தும், சரிகை வேட்டியும் வாங்கித் தர வேண்டாம். திட்டாமலாவது இருக்கக் கூடாதா?

மாமா எப்பொழுதும் திட்டிக் கொண்டே இருப்பார்.

''டேய், பிசாசுங்களா, இங்கே என்னடா சுத்திச் சுத்தி வாரீங்க!''

நாங்கள் வாயில் நெருப்பை வைத்துக் கொண்டு நடு இரவில் நடமாடுவதில்லையே! பின்னே எப்படிப் பிசாசுகள் ஆவோம்? எங்களிடம் மட்டும் என்ன? வீட்டிலுள்ள எல்லோரிடத்திலுமே மாமாவுக்கு ஒரே வெறுப்பு.

ஆடைபற்றி இவருடைய ருசி என்னவோ...



B/RD-32

ஆடை விஷயத்தில் நல்ல ருசியுள்ளவர்களுக்காகவே டான் ஜெர்க்கினும், சட்டைகளும் தயாரிக்கப்படுகின்றன. டானின் 'ஸ்போர்ட்ஸ் அணிகள்' எவ்வித விளையாட்டுக்கும் ஏற்றவை. சிறந்த உடை ரசனையுள்ளவர்கள் உடுத்துவது டானின் உறுதியான, வசீகர ஆடைகளாகும்.

DAWN

சில்லறை விற்பனைக் கடைகள் :

மதுரை : 1, 2 & 2A, அம்மன் சந்நிதி தெரு   சென்னை : 33, ராட்டன் பஜார்

டான் மில்ஸ் கம்பெனி லிட்., ஸ்டேட் பாங்க் பில்டிங், பாங்க் தெரு, போர்ட், பம்பாய்

இவர்களுடைய
வளமான வருங்காலம்
இப்பொழுதே
திட்டமிடப்படுகிறது



இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் ரெக்கரிங்
டிபாஸிட் திட்டத்தின் சேமிப்பைக்கொண்டு

குறைந்த பட்சம் ரூ. 5/-லிருந்து அதிக பட்சமாக அதன் பெருக்குத் தொகை ரூ. 500/- வரையில், டிபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரதிமாதம் டிபாஸிட் செய்யும் தொகையான :

	ரூ. 5/-	ரூ. 10/-	ரூ. 50/-	ரூ. 100/-	ரூ. 500/-
கீழ்க்கண்டபடி பெருகும் :					
12 மாதங்களில்	ரூ. 61.00	ரூ. 122	ரூ. 610	ரூ. 1,220	ரூ. 6,100
24 மாதங்களில்	,, 124.50	,, 249	,, 1,245	,, 2,490	,, 12,450
36 மாதங்களில்	,, 192.00	,, 384	,, 1,920	,, 3,840	,, 19,200
48 மாதங்களில்	,, 262.00	,, 524	,, 2,620	,, 5,240	,, 26,200

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் லிட்.

தலைமைக் காரியாலயம் : 151, மவுண்ட் ரோட், சென்னை-2

உங்களுக்கு சேவை செய்வதற்காக 100 க்கு மேற்பட்ட கிளை அலுவலகங்கள் இந்தியாவின் முக்கிய இடங்களில், இதில் தமிழ் நாட்டில் மட்டும் 60 க்குமேற்பட்ட கிளை அலுவலகங்கள் உள்ளது.

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

கே. எம். நஞ்சப்பா
ஜெனரல் மானேஜர்

IOB-17-SA

"இந்த வீட்டைப் பாழடிக்க இரண்டு சரித்திரங்கள் இருக்கு."

தரித்திரம் என்றால் என்ன என்று எங்களுக்குத் தெரியாது. பல தடவை கேட்டோம். பிறகுதான் அம்மாவுக்கும் சித்திக்கும் மாமா வைத்திருக்கும் பெயர் அது என்று தெரிய வந்தது.

பாட்டியிடம்கூட மாமாவுக்குப் பயம் கிடையாது. என் அம்மா என்னை அடிப்பதுண்டு. அதே போல் மாமாவை இந்தப் பாட்டி அடித்தால் என்ன?

ஒரு தடவை கோபியைத் தென்னந் தூணோடு பிடித்துக் கட்டிப் போட்டு ஒரு பிரம்பாலே, அது துண்டு துண்டாகப் போகிற வரையில் மாமா நையப் புடைத்தார். அதைப் பார்த்துப் பாட்டி சொன்னாள்: "டேய், இந்த மாதிரி துஷ்டனாகாதேடா. குழந்தைங்க சாபம் பொல்லாதுடா."

அதைக் கேட்டு மாமா சொன்னார். "கிழமே! சும்மா ஒரு மூலையிலே கெட. சாகப் போகிற கட்டைக்கு...."

பாட்டி பிறகு ஒன்றுமே பேசவில்லை.

பெரியவங்க பிறந்த நாளன்று மட்டும்தான் விருந்திருக்கும் என்று முதலில் எண்ணியிருந்தேன். பள்ளிக்கூட மானேஜரும் மாமாவும் வயதானவர்கள்தானே?

எனவே, பெரியவனான பிறகு நம் பிறந்த நாளையும் தடபுடலாகக் கொண்டாடணும், ஊரில் உள்ளவர்கள் அனைவரையுமே விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று மனத்தில் எண்ணிக் கொண்டேன்.

என் பிறந்த நாள் ஒரு சாதாரண நாள் போலத்தான். காலையில் குளிப்பதுதான் அன்றைய ஒரு முக்கிய நிகழ்ச்சி. அது எனக்குப் பிடிக்காது. அம்மா கட்டாயப்படுத்துவாள். வேறு வழி?

பெரியவங்களுடைய பிறந்த நாட்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகள் பிறந்த நாட்களுக்கும் விருந்து இருக்கும் என்று முதல் முதலாகச் சொன்னது எங்கள் வகுப்பில் படிக்கும் மணிதான். மணி பிறந்த நாளன்று விருந்திருக்குமாம். அவனுடைய பிறந்த நாளுக்கு மட்டுமல்ல, அவன் தங்கையின் பிறந்த நாளுக்குக்கூட விருந்திருக்குமாம். என்னமோ என்னாலே நம்ப முடியவில்லை. மணி அண்டப் புளுகன். அவன் வீட்டுத் தோட்டத்திலே பாம்புப் புற்றுக்குக் கீழே மூன்று குடம் நிறையத் தங்க நாணயம் இருக்கு என்று சொன்னவனல்லவா?

ஆனால் பிறந்த நாளைப் பற்றி மணி சொன்னது உண்மை என்று தெரிய வந்தது. எங்கள் வீட்டில்கூடத் தாமோதரன் பிறந்த நாளை முதல் முதலாகக் கொண்டாடினார்கள்.

சாதாரணமாகத் தாமோதரன் தன் பிறந்த நாளன்று அவன் மாமா வீட்டில் இருப்பது வழக்கம். எங்கள் வீட்டில் அவன் இருப்பது இதுதான் முதல் முறை.

அதற்கு முன் தினம் மாமரத்தின் கீழ் இருக்கும் போது தாமோதரன் சொன்னான்: "டேய், நாளைக்கு என்னுடைய பிறந்த நாள், தெரியுமா....?"



டாக்டர்: சினிமாவுக்குப் போகும் பழக்கம் உங்களுக்கு உண்டா?
நோயாளி: கிடையவே கிடையாதுங்க.
டாக்டர்: அதான் கூடாது... ஒரு சினிமா விடாமல் எல்லாவற்றையும் நாள் பூராவும் பார்த்தபடியே தான் இருக்கணும்... அப்ப தான் உங்க உடம்பு சரியாகும்!
நோயாளி: அதென்னங்க நூதனமாச் சொல்றீங்க?'
டாக்டர்: சினிமாக் கொட்டகைக்குள் புகைபிடிக்கக்கூடாது. உங்க பழக்கத்தை நிறுத்தத்தான் அந்த யோசனை.

எங்களுக்கென்ன அதனாலே பயன்? நாங்கள் ஒன்றுமே பதில் சொல்லவில்லை.

"நாளைக்குப் பாயசம் பண்ணுவாங்களோ?"

"போடா போ!" எங்களுக்குச் சிரிக்கணும் போல் இருந்தது. 'என்ன 'டூப்பு' விடறான்!'

ஆனால் மறு நாள் நாங்கள் வியந்து போனோம். தாமோதரனின் பிறந்த நாளுக்கு நிசமாகவே விருந்து வைத்திருந்தார்கள்! அப்போ, குழந்தைங்க பிறந்தநாளுக்குக்கூட விருந்து வைக்கலாமா? அடடா! அம்மாவுக்கு இத்தனை நாட்களும் இது தெரியாமல் போய் விட்டதே!

என் பிறந்த நாள் வரட்டும். ஆடி மாதம் வரையில் காத்திருந்தேன்.

பாட்டிக்கு ஊரில் இருக்கும் அத்தனை பேர்களது பிறந்த நாளும் தெரியும். நான் கணக்குக் கூட்டிப் பார்த்துப் பாட்டி சொன்னாள்: "வருகிற புதன்கிழமை உன் பிறந்த நாள் வருது!"

நான் மனத்துக்குள் சொல்லிக் கொண்டேன், 'பாட்டி பார்த்துண்டே இரு' என்று!

மறு நாள் நான் அம்மாவிடத்தில் விண்ணப்பம் கொடுத்தேன்: "அம்மா, என் பிறந்த நாளன்னிக்கு விருந்து வைக்கணும்."

"உனக்குப் பைத்தியமா, என்ன?"

அம்மா இவ்வளவு அசட்டை செய்வாள் என்று நான் நினைக்கவில்லை.

எனக்கு அழுகை வந்தது.

''தாமோதரன் பிறந்த நாளுக்கு....''

''என்னமோ சொல்லுவாங்களே, மயில் ஆடுவதைப் பார்த்து வான்கோழியும்.... டேய், தாமோதரன் உங்க மாமா பிள்ளே டா. இது தெரியாதா உனக்கு?''

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அம்மாவுக்கு என் மன வேதனை கொஞ்சம் தெரிவது போலிருந்தது. ''என்னடா, பண்ணறது? மாமா தானே நெல் அளந்து தாணும்!''

அது என்னமோ சரிதான். மாமாதான் வீட்டுச் செலவுக்கு நெல் அளந்து கொடுப்பது வழக்கம். களஞ்சியங்களின் சாவிகளெல்லாம் மாமாவிடத்தில்தான் இருந்தன.

வாரத்தில் ஒரு நாள் மாமா நெல் களஞ்சியங்களில் ஒன்றைத் திறப்பார். பிறகு உரத்த குரலில் கூப்பிடுவார்: ''யாரம, அங்கே உள்ளே?''

அம்மா உடனே வரவில்லை என்றால் மாமாவின் குரல் இன்னும் உயரும். ''இந்தச் சனியன்கள் ஒன்றுக்குமே காது கேட்காதா?''

அதற்குள் அம்மா கூடையைத் தூக்கிக் கொண்டு வந்து நிற்பாள். மாமா மூன்று மரக்கால் நெல் அளந்து கொடுப்பார். அது போதாது என்று பாட்டி ஒரு தடவை புகார் செய்த போது மாமா கர்ஜித்தார். ''இதாவது என்றைக்கும் நிலைத்திருக்கட்டும் என்று வேண்டிக் கொள்!''

ஆகலால், என் பிறந்த நாளைக்கு நெல் வேண்டும் என்றால், மாமா அதிகமாக நெல் கொடுக்க வேண்டும். அவர் கொடுத்தால் என்ன? களஞ்சியங்களில்தான் நிறைய நெல் இருக்கிறதே!

நானே மாமாவிடம் நெல் கேட்கலாமா? உதைத்தால் என்ன செய்வது என்று பயம். அம்மா கேட்கலாமே!

மாலையில் குளித்துவிட்டு வரும்போது நான் அம்மாவிடத்தில் சொன்னேன்: ''அம்மா, நீ கொஞ்சம் கேட்டுப் பாரேன்.''

''என்னடா கேட்டுப் பார்க்கிறது?''

''மாமாகிட்டே....''

''போடா, போ! பைத்தியக்காரா?''

என் கண்களில் நீர் நிறைந்தது. என்ன சொன்னாலும் எனக்குப் பைத்தியமாம்!

அம்மா என் முகத்தைப் பார்த்தாள். என் கண்கள் பெருக்கெடுத்தன.

''தலையெழுத்து நல்லா இருக்கணும். என்ன செய்யறது?'' அம்மா சரத் துணியாலே என் கண்ணீரைத் துடைத்தாள்.

அவனைத்தான் பிரம்பாலே நாலு போடணும். என் தலையிலும், அம்மா தலையிலும் தப்புத் தப்பா எழுதியிருக்கானே, அவனை...!

புதன்கிழமை பொழுதும் விடிந்தது. எனக்கு உற்சாகமே இல்லை. என் பிறந்த நாள் விஷயம் தாமோதரனுக்குத் தெரியக்கூடாதே.

அன்று நெல் அளந்து கொடுக்கும் நாள். காலையிலே களஞ்சியம் திறக்கப்பட்டது. மாமா கூப்பிட்டார்: ''யாரம, உள்ளே!''

அம்மா கூடையை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

வாசலில், மேற்குப் பக்கத்துத் தூணில் சாய்ந்து நான் உட்கார்ந்திருந்தேன்.

சன்னல் வழியாகப் பார்த்தால் மாமா நெல் அளந்து கொடுப்பதைப் பார்க்கலாம்.

மூன்று மரக்கால் நெல் அளந்து கொடுத்தாகி விட்டது. மாமா களஞ்சியக் கதவைச் சாத்த விருந்தார். அப்போ அம்மா மெதுவாகச் சொன்னாள்..... ''இன்னிக்குக் கிருஷ்ணன் பிறந்த நாள்.....''

என் இதயம் துடித்தது. நான் நினைத்தது போல் இல்லை. என் அம்மா எவ்வளவு நல்லவள்!

''அதுக்கு?''

''கோவிலிலே பொங்கலுக்கு வேண்டிண்டிருக்கேன். மூன்று படி கூட....''

இடி முழக்கம் போன்ற குரலிலே மாமா சொன்னார்: ''யாரம, உங்கிட்டே அப்படி வேண்டிக்கச் சொன்னது? யார் வேண்டிக் கொண்டார்களோ, அவங்களே அதுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்க.''

''அவன் படுத்தப் படுக்கையா இருந்தப்போ வேண்டிக் கொண்டது.''

''போய்ச் சொல்லமை, அவன் அப்பா கிட்டே. காலணாவுக்குக் கதி இல்லாதவன்.''

''அது என் இஷ்டத்துக்கா நடந்தது?''

''என்னமை, மனசிலே என்னமோ உனக்கு? பொம்பளைங்க இந்த வீட்டிலே காரியம் பேச என்னையிலேயிருந்து ஆரம்பிச்சது?''

''உங்ககிட்டே நான் சொல்லாமல் வேறு யார்கிட்டே அண்ணா சொல்ல முடியும்? உங்கள் பையனு.....''

''மூடு, வாயை. உன்னை நான்....''

ஓர் அடி விழும் சத்தம் கேட்டது. சன்னல் வழியாகப் பார்த்தேன். அம்மா களஞ்சியத்தின் மீது குப்புற விழுந்து கொண்டிருந்தாள்.

''அம்மா....!'' என்னை அறியாமலேயே சத்தமிட்டேன்.

உள்ளே இருந்தவர்கள் எல்லாம் வெளியே வந்து எட்டிப் பார்த்துத் திரும்பிப் போனார்கள். பாட்டி மட்டும் இரண்டு மூன்று தடவை உரக்க ஜபித்தாள். ''நாராயணா, நாராயணா, நாராயணா....''

சிறிது நேரம் சென்ற பிறகு நெல் கூடையைத் தூக்கிக் கொண்டு அம்மா உள்ளே வந்தாள். அப்பொழுது கன்னங்கள் வழியாகக் கண்ணீர் பெருக்கெடுத்திருந்தது; இடது புருவத்துக்கு மேல் ரத்தம் வந்திருந்தது.

அந்தப் பிறந்த நாளன்று நான் குளிக்கவில்லை; அம்மாவும் என்னைக் கட்டாயப் படுத்தவில்லை.

அதற்குப் பிறகு எனக்கு இருபது பிறந்த நாட்கள் வந்து போய்விட்டன. இன்று அம்மாவும் மாமாவும் பாட்டியும் இவ்வுலகில் இல்லை.

இருட்டு நுழைந்த வானத்துக்கு என் பார்வை சென்றது. அப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. 'நாளைய தினம் எனக்குப் பிறந்த நாள்.'

[குறிப்பு: நாயர் சமுதாய வழக்கப்படி வீட்டுக்குத் தலைவன் 'மாமா'. அப்பா அல்ல. இதை மருமக்கத்தாயம் என்பார்கள்.]

[மலையாளத்திலிருந்து: கே. நாராயணன்]



தெய்வம்தான்

கோவி. மணிசேகரன்

வயிற்றுக்குச் சோறுண்டோ, இல்லையோ, ஆனால் திரைப்படக் கொட்டகையில் கும்பலைப் பார்க்க வேண்டுமே! உலகத்து ஜீவக் கர்ப்பக் கிருகமான இந்த வயிற்றுக்கு—இந்த அரிசிப் பஞ்ச காலத்தில் 'கியூ'வாகிய வரிசையில் நிற்க வெட்கப்படுகிறான்; ஆனால் திரைப்படக் கொட்டகைகளில் 'கியூ'வாகிய வரிசையில் நிற்பதில் என்ன சிறப்பு வந்து விடுகிறதோ?

சென்னை மௌண்ட்ரோட் சாலையில் பிரபலமான அந்தக் கொட்டகையில் புதிதான ஒரு படம் வெளியாகியிருந்தது. 'கௌரவ மனிதர்கள்' பலர் பலவிதமான ஆடையணிகளுடன் வரிசை கட்டி நின்று கொழுக்கட்டையாக வெந்து கொண்டிருந்தனர். அரசியல் தெரிந்தவன் கையில் தமிழ்த் தினசரிகள் சிறுமைப்பட்டும், ஆங்கிலம் தெரியாதவர்கள் கையில் அமெரிக்கத் துப்பறியும் நாவல்கள் பெருமைப்பட்டும் தத்தளித்தன. இந்தத் தவிப்பெல்லாம் அந்தக் கிழவிக்கு—பாஞ்சாலிக்கு என்ன தெரியப் போகிறது? அவளுடைய தவிப்பே வேறு. அது உயிர்த் தவிப்பு; உணர்வுத் தவிப்பு; ஏன் ஒருவிதத்தில் மரணத் தவிப்பு என்றும் சொல்லலாம்!

கொட்டகையின் தலையில் பூச்செண்டுகளைப் போல் வண்ண வண்ணமான பெரிய பெரிய ஓவியத் தலைகள். அந்தத் தலைகளையெல்லாம் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு விழிக்க விழிக்கக் கவனித்தாள் பாஞ்சாலிப் பாட்டி. அவள் தேடிய தலையைக் காணோம். வெறுமை நிறைந்தது. கண்கள் ஏங்கிக் கவிந்தன. அவள் பேரனின் தலையைக் காணோம். அந்த விளம்பரச் சித்திரத்தில் அவனைப் போட மறந்து விட்டார்களோ?

தலை 'தொண தொண' வென்று ஆடுவது, மணிப்புரி நாட்டியப் பொம்மையைப் போல! பாஞ்சாலிப் பாட்டியின் தவிப்பு, இரண்டு மணி நேரமாக 'கியூ' வரிசையின் கடைசிக் கட்டத்தில் நிற்கும் ஒரு வாலிபப் பெண்ணுக்கு இருக்கும் 'கிடைக்குமோ, கிடைக்காதோ' என்ற தவிப்பை விடச் சற்று அதிகமாகவே இருந்தது; இருக்க நியாயமுமிருந்தது. இந்த மூன்று நாட்களாகத்தான் வருவதும் திரும்புவதுமாக எத்தனை எத்தனை வேதனைப்பட்டு விட்டாள்! ஆனைப்பட்ட 'பருவத' குமாரிகளெல்லாம் இடிபாதை தாங்கிய நிலையில் நின்று, கால் கடுக்கக் காத்து, முடிவில் 'ஹவுஸ் ஃபுல்' பலகையைப் பார்த்து ஏக்கமும் ஏமாற்றமுமாகத் திரும்பி விட்டனர் என்றால், 'பூ' என்றால் பஞ்சாகப் பறக்கும் இந்த எலும்புக் கூட்டுப் பாட்டிக்குத்தானா கிடைக்கப் போகிறது?

எப்படியும் விரைவில் அந்தப் படத்தைப் பார்த்து விட வேண்டும் போல ஒரு துடிப்பு; ஒரு தவிப்பு; அடங்காத தாகம்! இருக்காதா? ஆசைக்கும், அணைப்புக்கும் ஆதரவுக்குமாக இருந்த ஒரே பேரப் பிள்ளை நடித்திருக்கும் படமாயிற்றே! பேரன் செல்வக் குமார் அந்தப் படத்தில் நடிக்கப் புகுந்தானே, பாதியில் அநியாயமாய் அகால மரணமடைந்தானே! பாவம், அவன் புகுந்த வேளை அப்படி! அவன்தான் இந்த நாடகம், சினிமாவென்று எத்தனை நாட்கள் திரிந்திருப்பான்; பட்டினி கிடந்திருப்பான்; தன்னை நம்பி வாழும் வயதான பாட்டியையும் பட்டினி போட்டிருப்பான்!

இந்த எட்டு மாதங்களாக அந்தக் கிழவி—பாஞ்சாலி எப்படி உண்டாளோ, உறங்கினாளோ, வாழ்ந்தாளோ! இதைப் பற்றி அவளே கவலைப்படவில்லை; நினைத்துப் பார்க்கவில்லை. பேரன் செல்வக் குமாரின் படம் வெளி வந்ததும், அந்த ஆசை முகத்தைப்

பார்த்து விட்டு அகம் குளிர வேண்டும்? அடுத்த கணமே மண்டையைப் போட்டு விட்டாலும் நஷ்டமில்லே. பூமிக்கு ஒரு பளு குறைந்து விடும்; ஜனத்தொகைப் பட்டியலில் ஒரு தலை குறைந்து விடும். போகட்டுமே!

இடியுதை தாங்கிய நெரிசலினூடே 'இல்லே' என்ற ஏமாற்றத்தின் எதிரொலி எங்கும் பரவிச் சூன்யச் சூழலைப் பல இரை வெறியர்களுக்கு ஏற்படுத்தி விட்டது தலைவன் புகழ்! வந்த வழி நோக்கி எல்லாருமாகத் திரும்பிச் சென்றனர்.

பெற்ற பிள்ளைகளுக்கு 'பிஸ்கோத்து' வாங்கித் தர மனமில்லையானாலும், 'பிளாக் மார்க்கெட் டிக்கட்' வாங்க மனமுள்ள—பணமுள்ள சில ஜடங்கள் மட்டும் நின்று இருமிருவென்ற இருட்டு விழிகளை உருட்டிக் கொண்டிருந்தன. ''சார்! 84 — இரண்டு ரூபாய்; 1.66 — மூன்று ரூபாய்; 2.50 — ஐந்து ரூபாய்!'' — கறுப்புச் சந்தை கள்ளக் குரல்களை எழுப்பியது. அவர்களையெல்லாம் பார்த்த மாத்திரத்தில் நன்கு தெரிந்து கொள்ளலாம்!

''தம்பி..... என் ராஜா!'' — பாட்டி பரிதாபமாகக் குரல் விடுத்தாள். செல்வராசு, 'பிளாக் மார்க்கெட்' சீமான் திரும்பிப் பார்த்தான். சீ! இந்தக் கிழவி இந்த இரண்டு தினங்களாகத் தன் பிராணனை வாங்குறாளே!

நான்கைந்து 'சீமான்கள்' இருந்தும் செல்வராஜ் மட்டும் 'ஏனோ' அந்தப் பாட்டியின் கண்களில் மூன்று தினங்களாகவே பட்டு வந்தான். ஊழ்வினை என்பது இதுதானோ என்னவோ?

''ஏம் பாட்டி, இப்படியேன், என் உசுரை வாங்கறே! நேரத்தோடு வந்து கியூவில் நின்னு டிக்கட்டை வாங்கறதுதானே?''

''தம்பி, நீ என் பேரன்போலப்பா! ஒரே ஒரு டிக்கெட் கொடு.... சும்மா வேண்டாம்! பாவம், உனக்கு மட்டும் சும்மாவா வருது? பணம் கொடுக்கிறேம்பா! என்னாலே கியூவிலே நிக்க முடிகிறதாப்பா?''

''அட, சீ நீ ஒண்ணு! நீ இன்னும் பணம் கொடுப்பே? ஒண்ணுக்கு ரெண்டா கொடுப்பியா?'' என்று கேட்டான்.

''நான் எங்கேப்பா போவேன்?''

''உம் மூஞ்சிக்குச் சினிமா ஏன்? போ, வயித்துக்குச் சாப்பிடு!'' — கறுப்பிலும் ஒரு கருமை நிறைந்த சொற்கள் உதிரத்தான் செய்தன.

''சாப்பாடுகூட முக்கியமாகத் தெரியலே; இந்தச் சினிமாப் படம்தான் முக்கியமா தெரியுது. ஏம்பா, அப்படி முழிக்கிறே? எம் பேரன் இந்தப் படத்துலே சின்ன வேஷம் போட்டிருக்கான். ம்... நான் கொடுத்து வைக்கலே. அவன் செத்துத் தொலைஞ்சான். அவனைப் பார்க்கணும்னு மனசு துடிக்குது. எனக்கு ஒரு டிக்கட்டு குடுப்பா! நீ நல்லா யிருப்பே!'' — பாஞ்சாலிப் பாட்டி கலகல வென்று கண்ணீர் உகுத்து விட்டாள். செல்வராசுவுக்கும் கொஞ்சம் வேதனையாகத் தான் இருந்தது. இரும்பானாலும் கனிந்து வளையக் கூடியதுதானே! மனித மனம் அத்தனை மோசமா, என்ன?

செல்வராசுவுக்கு இரக்கம் சற்றே தலை தூக்கியது. ஏதோ பேச்சு முறைமைக்குச் சொன்னான்: ''ஏ, கிழவி! இப்போ தர்றதுக்கு இல்லே! ஒருவேளை டிக்கெட் ஸைவிப் போயிடுச்சின்னு உன் தலையில் கட்டறேன்!''

ஸைவோவது? போவதாவது! படம் அப்படியான நட்சத்திரத் தயாரிப்பாயிற்றே!

மணியடித்தும் படமும் ஓடத் தொடங்கி விட்டது. இன்னும் தொடங்க வேண்டிய படம் தொடங்கவில்லை. அதற்கு முன் ஓடும் சில தலைவலி மாத்திரைகள் தாம் ஓடிக்கொண்டிருந்தன. 'வருகிறேன் என்று சொல்லிச் சென்றவனைக் காணோமே! ஒரு வேளை டிக்கட்டுக்களை யெல்லாம் விற்று விட்டுக் கம்பி நீட்டி விட்டானோ? அவனுக்கென்ன தலையிலா எழுதியிருக்கிறது. இந்தக் கிழவி மேல் கருணை காட்ட வேண்டும் என்று! அட, ராசா! செல்வக் குமார்! உன்னுடைய படத்தைப் பார்ப்பதற்குள் இந்தக் கட்டையை மண் பதும் பார்த்துவிடக் கூடாதே!'

பொங்கி வந்த கண்ணீரை அந்தக் கிழவி தன்னுடைய கிழிந்த — அழுக்கேறிய புடவைத் தலைப்பால் ஆடிக் கொண்டிருக்கும் தலையை எப்படியோ பிடித்து நிறுத்தித் துடைத்துக் கொண்டாள். அப்போது பார்த்து அந்த மனிதன்—செல்வராசு எதிரே வந்து நின்றான். அவன் மட்டுமா வந்து நின்றான்? உடன் இரு போலீஸ்காரர்களும் வந்து நின்றனர். பாஞ்சாலிப் பாட்டி பேந்தப் பேந்த விழித்தாள். இது என்ன? இவனுக்கும்....

''பாட்டி!''.... கண்ணீர் மல்கச் செல்வராசுவின் தொண்டை கரகரத்தது. கிழவியின் வியப்பு மேலும் விரிந்தது. மிச்சம் மீதி ஏதேனும் டிக்கட் மிருந்திருக்குமா?

கிழவியிடம் எதையோ சொல்லத் துடிக்கும் தவிப்பு. அண்டையில் நின்று கொண்டிருந்த போலீஸ்காரர்களைப் பரிதாபமாக நோக்கினான். அந்த நோக்கலில் யானைத் தத்துவமிருந்ததோ? நாகத் தத்துவம் நடம் புரிந்ததோ?

''இவங்க என் பாட்டி! வீட்டுக்குச் சேதி சொல்லிட்டு வர்றேன். கொஞ்சம் தனியாப் பேசணும்!''

போலீஸ்காரர்கள் அந்தமட்டும் கருணை காட்டிச் சற்றே — சற்றே என்ன? ஒரு பத்தடி தொலைவில் அகன்றனர்.

''என்னடாப்பா, கண்ணு? என்ன நேர்ந்தது?'' — பாட்டியின் பொக்கை வாய் பொழிந்தது.

''பாட்டி! உனக்கு ஒரு டிக்கெட் தாரேன். எனக்கு ஒரு உதவி செய்வியா?''

'டிக்கட்' என்றதும் பாட்டியின் இதயத்தில் சொர்க்கமே இறங்கி விட்டது. ''சொல்லப்பா! என்ன நடந்தது?''

''வழக்கமானதுதான் பாட்டி! சில சமயத்திலே இப்படி ஏற்பட்டு விடும். இந்தா, இது 1.66 டிக்கட். அதோ அந்த வழியில் நுழையணும். பாட்டி! நீ எனக்குக் காசுகூடத் தர வேண்டாம். நான் ஒரு விலாசம் எழுதித் தர்றேன். என் பெண்டாட்டிகிட்டே தகவல் சொல்லணும். அதாவது, மாமியார் வீட்டுக்கு மறுபடியும் உன் புருஷன் போயிட்டான்னு சொல்லணும்!''

''நெசமாகவே மாமியார் வீட்டுக்குப் போறியா, தம்பி?''

அந்த நிலையிலும் அவன் சிரித்தான். ''சொந்த மாமியார் இப்பேர்ப்பட்ட மருமக

ளுக்கும் பொன்னைக் கொடுத்தோமென்று எப்படியோ செத்துப்போ விட்டா! இது சாகாத மாமியார் வீடு: அதாவது ஜெயில்!''

''ஜெயிலா?''

அவன் தலையசைத்தான்.

''டிக்கட் வாங்கி விக்கறது தப்பா, தம்பீ?''

மீண்டும் தலையசைத்தான்.

''தப்புன்னு தெரிஞ்சு ஏன் செய்யறே?''

அவன் சிரித்தான்: ''சில தப்புகளுக்கு லைசென்ஸ் உண்டு; சில தப்புகளுக்கு லைசென்ஸ் இல்லே. உனக்கு இது புரியாது. என்னமோ! நான் இப்படி வாங்கலேன்னு உனக்கு ஒரு டிக்கெட் கிடைக்குமா? நேரமாவது பாட்டி. இந்தா, இதோ எழுதித் தர்றேன்!''

முகவரியை எழுதிக் கொடுத்தான். அத்துடன் மிருந்த அந்த ஒரே ஒரு டிக்கட்டையும் கொடுத்து விட்டுப் போலீஸ்காரர்களைப் பின்பற்றிப் பலிபீடம் நோக்கிச் செல்லும் ஆட்டைப் போல் பின் தொடர்ந்தான். கிழவி ஒருகணம் தான் அந்தக் காட்சியைப் பார்த்தாள். மறு கணம்...: அவளுக்காகத்தான் பெரிய காட்சியொன்று காத்திருக்கிறதே!

கொட்டகையுள் நுழைந்து அவளுக்கென்று எங்கோ ஒருபுறத்தில் காத்திருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

சற்றைக்கெல்லாம் ரூலைப் படம் ஓடத் தொடங்கியது. கிழவியின் ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. பேரனைப் பார்க்கப் போகிறோம்! செல்வக் குமாரைச் சந்திக்கப் போகிறோம்! பெயர் செல்வக் குமார் என்று போடுவார்களா? இல்லே, அவனுடைய பழைய பெயர் சின்னசாமி என்று போடுவார்களா? இல்லே, பாட்டி இப்படி நினைத்து முடிப்பதற்குள் படத்தின் 'டைட்டில் கார்டு' - பெயரெழுத்துக்கள் ஓடி மறைந்தன. படம் தொடங்கியது.

அது ஆயிரம் ஆயிரம் அடிகளாக ஓடிக் கொண்டே இருந்தது. எத்தனையோ முகங்கள்; எத்தனையோ பேச்சுக்கள்; பாட்டுக்கள்! பெரிய உருவாய், சிறிய உருவாய் நெட்டையும் குட்டையுமாய், பூதாகாரமாகவும், பாதாளமாகவும் காட்சிகள்! ஆனால் அந்த முகம் — செல்வக் குமாரின் முகம், அந்தப் பேச்சு — பேரனுடைய கனிசென்ற குரல் எங்கே? எங்கே? கண்கள் தேடின; செவிகள் செருமின. காணோம்; கடைசி வரையும் காணோம். படமும் முடிந்து விட்டது. தேசிய கீதத்துடன்.



மனைவி: ஏன் இப்படித் திடீரென்று அலறுகிறேள்?''

கணவர்: ஒரு நாளைக்கு 'ஷேவிங்' பண்ணிக்காட்டா அதுக்காக முகத்தில் இப்படியா வளரணும்? முகமே தெரியல்லியே!

மனைவி: நன்னா! நன்னு இருக்கு! நீங்க பார்த்திண்டிருப்பது பிரஷ், கண்ணாடி பக்கத்திலே இருக்கு!

எல்லாரும் திரும்பினர்; ஏமாற்றத்தின் எதிரொலியாய்ப் பாஞ்சாலிப் பாட்டியும் திரும்பினாள். புரியாத மனநிலை! இந்தப்படம்தானே அவன் நடித்தது? பின் ஏன் அவனைக் காணோம்? பாட்டிக்குத் தெரியுமா, திரையுலக மாயவித்தை?

உண்மையில் புது முகமாகச் செல்வக் குமாரைத் தேர்ந்தெடுத்துத்தான் நடிக்கச் செய்தார்கள். மூன்று நான்கு காட்சிகளில் அவன் நடித்தான்.

ஒரு நாள் படப் பிடிப்பின்போது இடி விழுந்து இறக்க வேண்டிய காட்சி அது. அந்தப் படப்பிடிப்பில் அவனுடைய தலையிலேயே முடிய வேண்டியிருக்கிறதே! 'செட்லைட்' என்று சொல்லப்படும் பூதாகாரமான பெரிய விளக்கொன்று இடிக்குப் பதிலாக அதுவாகத் தலையில் விழுந்ததோ, அவன் விதி முடிந்ததோ?

படத் தயாரிப்பாளர்கள் அதனை அபசகுனமாக எண்ணி, செல்வக் குமார் நடித்த காட்சிகளையே வெட்டி எறிந்து விட்டனர்: இந்த வெட்டியெடுத்த செய்தி பாஞ்சாலிப் பாட்டிக்குத் தெரியாதே!

ஏங்கிய விழிகளும், சோர்ந்த மனமும், தாங்கிய பழுத்த உடலுமாய் இருப்பிடத்தை யடைந்தாள். இரவு முழுதும் தூக்கமில்லை. பேரன் நினைவாகப் பெருகிய கண்ணீர் தான். இனி மேல் நித்திய நிரந்தரத் தூக்கம் தான் தேவை. அதுவாவது சீக்கிரம் வந்து தொலையக் கூடாதா?

பொல்லென்று விடிந்த பொழுதைக் கண்டு கொல்லென்று சிரித்தன புள்ளினங்கள்.

சாம்பல் பூத்திருந்த கண்களை மலர்த்தி இந்த உலகைக் குடிசையின் பொத்தல் நிறைந்த கூரை வழியாகக் கவனித்தாள் பாஞ்சாலிப் பாட்டி. உலகமும் பொத்தல் நிறைந்ததுதானோ? மனம் சொற்களை உள்ளுக்குள் குமைந்து நடுக்கின. பொக்கை வாயில் ஒரு சவச் சிரிப்பு! இருந்த ஒரே ஆதரவு பேரன். அவனும் போய் விட்டான். படத்தோடு போய் விட்டான். படத்திலும் அவனைக் காணோமே! என்னமோ! சாகும் போது ஒரு சினிமாப் படம்!

மெல்லத் தட்டுத் தடுமாறி எழுந்தாள். பல்லென்று ஒன்று இருந்தால்தானே அதை விளக்குவதற்கு? ஏதோ வாயைக் கொப்புளித்துக் கொண்டாள். வயிற்றில் நீராகாரம் வானமுதாக இறங்கியது. ''சாவுக்கும் ஒரு வேளை, நாழி தேவைப்படுது....!'' எரிச்ச

...வான முனகல் அதிருப்தியான வாயிலிருந்து காற்றாக வெளி வந்தது.

இனாமாக டிக்கெட் கொடுத்தவனுடைய வேண்டுதலைச் செய்து முடிக்க வேண்டுமே! பழங்காலத்து மன்.... நன்றி இன்னமும் நெஞ்சில் வஜ்ரமாக ஒட்டிக் கொண்டிருந்தது. கைத்தடியை எடுத்துக் கொண்டு கால் நடையாகத் தளர்ந்து நடந்தாள். எழுதிக் கொடுத்திருக்கும் சீட்டிலிருந்த முகவரியை விசாரித்துக் கொண்டாள். திருவல்லிக்கேணியில் ஜாம்பஜாரில் வீடு. சைதாப் பேட்டையிலிருந்து நடந்தால் ஒரு மணி நேரத்தில் சென்று விடலாம், கிழவி நடையைப் பொறுத்தமட்டில்!

அந்த வீடு பழங் காலத்து ஒரு வீட்டைப் போல இருந்தது. மிகவும் பாழடைந்து காணப்பட்டது. ஏழெட்டுக் குடித்தனங்கள். எல்லாருமே அன்றாடம் காய்ச்சிகள்தாம். "இந்த வீட்டில் யாரம்மா அஞ்சுகம்?"— கிழவி தெருவாயிற்படியிலிருந்த வண்ணம் கேட்டாள்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வயிற்றைச் சாய்த்துக் கொண்டு வெளியே வந்து கவனித்தாள் அஞ்சுகம். தொண்டு கிழவி கையும் கம்புமாக நின்று கொண்டிருந்தாள். "யார் பாட்டி? நான்தான் அஞ்சுகம்!"

அஞ்சுகத்தை வியப்புடன் கவனித்த பாஞ்சாலிப் பாட்டியின் முகம் கூட ஆணி அடித்து மாட்டிய தோற்றத்தைப் போல் ஒரு கணம் அசையாமல் நின்று மறுகணம் ஆட்டம் கண்டது. பாவம், இந்தப் பெண் நிறை கர்ப்பிணி. இவளை இப்படி 'அம்போ' என்று விட்டுவிட்டுச் சிறைக்குச் சென்று விட்டானே அந்தப் பாவி மனிதன்!

"உன் புருஷன் அனுப்பி யிருக்காம்மா!"

'புருஷன்' என்றதும் ஏதோ பொன்னுலக நினைவு புண்ணுறையும் நெஞ்சிலே புறப்பட்டதாக உணர்ந்தாள் அஞ்சுகம். வந்த கிழவியின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்று அமரச் செய்தாள். ஏழைக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாலும் அவளிடம் பணக்காரர்களையும் மிஞ்சிய பண்பு நிறைவாக இருந்தது.

பாஞ்சாலிப் பாட்டி நடந்தவற்றைப் பிட்டுப் பிட்டு வைத்தாள். அதிலே தன்னுடைய ஏமாற்றமும், செல்வராஜின் தடுமாற்றமும் இழைந்தன. கேட்கக் கேட்க அஞ்சுகத்துக்கு அழுகையழுகையாக வந்தது. இரவு முழுவதும் கணவனைக் காணாததால் ஏற்பட்ட ஐயத்தின் காரணமாக அழுதழுது வீங்கியிருந்த முகம் மேலும் வீங்கியது. புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டாள்; ஏழைக்கு வாழ்க்கைப்பட்ட பெண்களின் கண்கள்தாம் காட்டாற்று வெள்ளத்துக்குச் சமானமாயிற்றே! அது பொங்கிப் பொங்கிக் கரை புரண்டு கொண்டே யிருந்தது.

"அழாதேம்மா அஞ்சுகம். பட்ட காலில் படும்; கெட்ட குடி கெடும்னு சொல்லுவாங்க. சோதனையே ஏழை பாழைங்களுக்குத்தானேம்மா!"

"பாட்டி! கல்யாணமாகிப் பத்து வருஷங்களுக்கு நான் கண்ட பலன் பசியும், கண்ணீரும்தான். இது நாலாவது தடவை அவரு ஜெயிலுக்குப் போறது. நானும் தலைப்பாடா அடிச்சிக்கிறது: எதனாச்சும் கூலி வேலை செஞ்சி பொழைக்கலாம், இந்தச் சட்ட விரோதமான வேலை வேண்டாம்னு? கேட்டால்தானே!"

"இப்ப நீ அழறியே! இதை யாரு பார்க்கறது....?"

"அவருக்கு என்ன பாட்டி, அதைப் பத்திக் கவலை? வேளைக்குச் சோறு; நேரத்துக்குப் பணம், போதாதா? இப்படி ஜெயிலுக்குப் போயிட்டார்னு நான் வீட்டு வேலை செஞ்சிப் பொழைக்கணும். என் தலையெழுத்து. இப்ப அதுக்குக்கூட முடியுமோ என்னமோ? வயித்துலே எட்டு மாசம். பிள்ளையே இல்லாமல் இருந்து இப்பத்தான் தங்கிச்சு. அதன் தலையெழுத்து பொறக்கும்போது அப்பாவை ஜெயிலுக்கு அனுப்பிச்சிடுச்சு!" மீண்டும் கண்ணீர் வெள்ளத்தை முந்தானையால் அணை போட்டாள் அஞ்சுகம். பாஞ்சாலிப் பாட்டி அடைந்த துன்பத்தைச் சொல்லி முடியாது: தன்னைப் போல் அல்லாது தன்னை விடவும் துன்பப் பிறவிகள் இந்த உலகில் நிறையப் பேர் இருக்கிறார்கள்: எழுந்து விடை பெறவே மனமில்லை. ஆயினும் எத்தனை நேரத்துக்கு உட்கார்ந்திருக்க முடியும்? எழுந்தாள்.

அஞ்சுகத்துக்குப் பாட்டியை அனுப்பி வைக்கவே மனமில்லை. "இருங்க, பாட்டி, சாப்பிட்டுட்டுப் போகலாம்!"

"நீ ஒன்னும்மா! உன் வயித்தைக் கழுவறதே ஏதோ லாபம். நான்வேற கனமா?"

"பாட்டி! அப்படிச் சொல்லாதே. நான் கேட்கிறேனென்று தப்பா நினைச்சிக்க வேண்டாம். அதுக்காக, என் புருஷன் டிக்கெட்டுதவி செஞ்சாரேங்கறதுக்காக நான் சொல்லலே; நீயும் என்னைப் போல. நானும் தெறைஞ்ச புள்ளத்தாச்சி. அது வயித்தை விட்டுக் கழியற வரைக்குமாவது எனக்குத் துணையா யிருந்தால் எவ்வளவோ தேவலே. ஏதோ நான் குடிக்கிற கூழோ கஞ்சியோ நீயும் குடியேன்!"

அஞ்சுகம் சொல்வதும் உண்மைதான்; இந்தக் கர்ப்பிணிப் பெண்ணை விட்டு விட்டுச் செல்ல எந்த மனத்துக்குத்தான் கேட்கும்?

பாஞ்சாலிப் பாட்டி ஒப்புக் கொண்டாள்; "ஆமாம், உன் புருஷன் பேரு என்னம்மா?"

"நான் எப்படிச் சொல்லுவேன்?"

கிழவி பகபகவென்று சிரித்தாள். "அடப் பைத்தியமே! இப்படியெல்லாம் இருக்கிறதனால்தான் ஆண்டவன் நம்மை ரொம்பச் சோதிக்கிறான். இந்தக் காலத்துப் பொண்ணுங்க புருஷன் பேரைச் சொல்றது ஒரு கௌரவம்னு இருக்காங்க! அது மட்டுமா? புருஷன் பேரை விட அவுங்களுக்குச் சினிமாக்காரனுங்க பேரை அடிக்கடி சொல்றது தேன் குடிக்கிற மாதிரி. சும்மா சொல்லு!"

"......"

"சொல்லும்மா!"

"செல்வராசு!" — எப்படித்தான் சொன்னாளோ! சொல்லிவிட்டு முதலில் வாயையும் பிறகு முகத்தையும் மூடிக் கொண்டாள்; கிழவி சிரித்ததுடன் சிந்திக்கவும் செய்தாள்; தன் பேரனுடைய பெயரையொத்து இருப்பதில் அவளுக்கு ஒரு நிறைவு. அதுவே அவ

னுடைய வாழ்வின் நிறைவாகவும் அமைந்து விட்டது போதும்!

காலக் கணக்கன் மனிதப் பேரேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். செல்வராகவுக்கு இரண்டு மாதச் சிறை வாசம். அனுபவம் புதிதல்ல. ஆயினும் மனைவியின் நினைவு அவனுக்குப் புதிதாக இருந்தது. எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்துத் தரித்த கருவின் நினைவாயிற்றே! பகலெல்லாம் சிறைக் கூடத்தில் இட்ட பணிகளைச் செய்வான். இரவு வந்ததும் கண்களைக் கசக்குவான். நெஞ்சின் புண்களைக் கிளறுவதுமாக இருப்பான். மனைவி சொன்ன சொற்களெல்லாம் நினைவுக்கு வந்து நிலைகுலைக்கும்.



மனைவி (விழித்தெழுந்து): இங்கே பாருங்கோ! திருடன் வந்தமாதிரி சொப்பனம் கண்டேன்.
திருடன் குரல்: சும்மா கனவு காணாதே! நிம்மதியாகத் தூங்கு!

அந்தக் கிழவி நினைவுக்கு வந்தாள். அவனுக்கிருக்கும் ஒரு பற்றும் பாசமும் கூடத் தனக்கில்லையே! அந்தக் கிழவி வீட்டுக்குப் போய்ச் செய்தியை அறிவித்திருப்பாளோ? இனாமாகக் கொடுத்த டிக்கட்டுக்காக இதைக் கூடவா செய்ய மாட்டாள்? யார் கண்டார்கள்? இந்தக் காலமே சுயநலம் நிறைந்த காலம்தானே?

அன்று நன்றாகவே உறங்கி விழித்தான். காலைக் கடனைக் கழிபேருவகையுடன் முடித்தான். அடைபட்டுக் கிடந்த கூண்டை விட்டு விடுபட்டு ஓடும் பறவையின் நிலை. விடுதலை கிடைத்தது. இத்தனை நாட்களாக அவன் சிறையில் செய்த பணிக்குக் கூலியும் கிடைத்தது. 'சிறையில் கூலி வேலை செய்தால் கூலி! வெளியிலிருக்கும் நாம் மட்டும் ஏன் உழைத்துச் சம்பாதிக்கக் கூடாது?' என்ற கேள்வியைப் பெரிதாகவும் வலுவாகவும் எழுப்பிக் கொண்டவனாய் வீடு நோக்கிச் சென்றான்.

வீட்டில் நுழைந்ததும் நுழையாததுமாகச் சவக் களைச் சூழல் தன்னை வரவேற்கும் என்று செல்வராக எதிர்பார்க்கவில்லை. குடித்தனக்காரர்களெல்லாம் பரிதாபமாக அவனைக் கவனித்தனர். அஞ்சுகம் அழுத கண்ணீருடன் ஓடிவந்து கணவனை எதிர்கொண்டு அழைத்துச் சென்றாள். அவளுடைய வயிற்றைக் கவனித்தான் செல்வராக. அது கரைந்திருந்தது. குழந்தை பிறந்து விட்டது. ஏன் இவள் அழுகிறாள்! ஒரே சவக்களை தாண்டவமாடுகிறதே! குழந்தை...குழந்தை ஒருவேளை... அது செத்துவிட்டதா? —ஐயோ, அஞ்சுகம்! - மனம் பகீரென்றது.

பின்கட்டை நோக்கி விரைந்தான்.

அங்கே—

பாஞ்சாலிப் பாட்டி பிணமாகக் கிடத்தப்பட்டுக் கிடந்தாள். முகத்தில் தெய்வக் களை புன்னகை புரிந்து கொண்டிருந்தது. இறக்கும்போது ஒரு நல்ல காரியம் செய்த நினைவு போதும் அது!

கண்களை வியப்புடன் மலர்த்திய செல்வராகவுக்கு நினைவு வந்தது: அன்று சினிமாக் கொட்டகையில் கண்ட அதே கிழவி.

அஞ்சுகம் அனைத்தையும் விளக்கினாள் அழுது கொண்டே. தெய்வம் போல் உதவி, பிரசவம் பார்த்துக் குழந்தைக்குப் பாட்டியாகி இறந்து விட்டாள் என்று கண்ணீரும் கம்பலையுமாகச் சொல்லி முடித்தாள்: இந்த இரண்டு மாத காலமாய்ப் பாஞ்சாலிப் பாட்டி செய்த பணிவிடைகளைக் கூறி ஒப்பாரியே வைத்தாள். அந்தச் சத்தத்தில் தூளியிலிருந்த குழந்தை விழித்துக்கொண்டு சன்னமாகக் கதறியது.

"அஞ்சுகம்....!"

"பெண் குழந்தை!"

செல்வராகவின் முகத்தில் சிரிப்பு உதயமாகவில்லை. நேரே இறந்து கிடந்த பாட்டியின் பிணத்தருகே சென்று மண்டியிட்டு அமர்ந்து கண்ணீர் மல்கினான். பாசமும் பற்றும், இரக்கமும் நிறைந்த ஒரு தெய்வமாகவே அவனுக்குத் தெரிந்தது. அவனைப் பெற்ற தாய் அவன் கண்டு களிக்கு முன் இப்படித்தான் மண்டையைப் போட்டாள்; இப்போது அன்று பார்த்துச் சிறையிலிருந்து வந்திருக்கிறான். பாஞ்சாலிப் பாட்டி பெற்ற தாயினும் பெருந் தாயாக அவனுக்குத் தெரிந்தாள்.

வீறிட்டலறிய குழந்தையை விம்மும் நெஞ்சத்துடன் தூக்கிக்கொண்டாள் அஞ்சுகம். அவளுடைய மனம் தெய்வத்தை வாழ்த்தியது. திக்கற்றுப் போய்விடாமல் பிரசவ நேரத்தில் தெய்வம் இந்தப் பாட்டியை அனுப்பியது. பாட்டியின் மரண நேரத்தில் அநாதைப் பிணமாகி விடாமலிருக்க இவரையே அனுப்பி வைத்து விட்டது! தெய்வம் தெய்வம்தான்!

ஆகவேண்டியதைக் கவனிக்க முயன்றான் செல்வராக. சிறை தந்த பணம் கிழவியின் சிதைக்குப் பயன்பட்டது. மகனில்லா, பேரனில்லாக் கிழவியின் குறையைச் செல்வராக தீர்த்து வைத்தான். தாய்க்கு எட்டாத கொள்ளியை அந்தத் தரும தேவதைக்கு இட்டான். அத்துடன் தனது தீச்செயல்களுக்கும், சட்ட விரோதமான எண்ணங்களுக்கும் சேர்த்துக் கொள்ளியிட்டான்.

சிதையிலிருந்து நெருப்பின் நீண்ட நாவுகள் வானோக்கியெ. தன்னையும் அதனுள் கட்டுப் படம் போட்டுக் கொண்ட செல்வராகவையும், அவனுடைய மனைவியையும், தானுதவி அவள் பெற்ற குழந்தையையும் வாழ்த்திக் கொண்டே வானுலகில் பேரனைத் தேடிப் பயணமாகிக் கொண்டிருந்தாள் பாஞ்சாலிப் பாட்டி.

பெண்களைப் பற்றி 10 உண்மைகள்

1: பெண் மனத்தை யாரும் அறிய முடியாது என்பது பொது வழக்கு. ஆனால் பெண்ணே ஆணை விடத் தன் அந்தரங்கத்தை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறாள் என்று சித்தப்பண்பு ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். நீண்டகால நண்பர்களிடம் மட்டுமின்றிப் புதிதாய் அறிமுகமானவர்களிடமும் பெண்கள் மனத்தைத் திறந்து காட்டுகிறார்களாம்.

2: பெண்களுக்குப் பேச்சு என்பதே மூச்சு என்ற உலகப் பிரசித்தமான கருத்தை ஆராய்ச்சியாளர் ஒப்புக் கொள்கிறார். இதற்கு ஒரு காரணம் சொல்கிறார். ஆண்களைவிடப் பெண்களுக்குத் தேக பலம் குறைவல்லவா? அதை ஈடுகட்டிக் காட்ட வேண்டும் என்ற உள்ளுணர்ச்சியாலேயே அவர்கள் பேச்சில் ஆண்களை மிஞ்சுகிறார்களாம். ஆண் குழந்தைகளை விடக் குழந்தைப் பருவத்திலேயே பெண் குழந்தைகள் பேசத் தொடங்குகின்றனவாம்.

3. பெண்களின் தேக பலம் குறைவாக இருப்பினும் கொடிய வியாதிகள் வராமல் தடுத்துக் கொள்ளும் சக்தி பெண்களுக்கே அதிகமாம். நிமோனியா, கபவாதம், [illegible], இருதய நோய் இவற்றால் பெண்களைப் போல் மும்மடங்கு ஆண்கள் மாண்டு போகிறார்கள்.

4. வியாதி அதிகம் வராவிடினும், வலிகள் பெண்களுக்கே உக்கிரமாக ஏற்படுகின்றன. ஆனாலும் மெல்லியலாரான அவர்கள் ஆண்களை விட நோவைப் பொறுமையுடன் சகித்துக் கொள்கிறார்களாம். பொறுமைதானே பெண்ணின் பெருமை?

5. ஆண்களை விடப் பெண்களே பொதுவாக அதிக காலம் உயிர் வாழ்கிறார்களாம். மரண சங்கியை எடுத்த எழுபத்தைந்து நாடுகளில் எழுபத்திரண்டில் இந்த உண்மை விளக்கப்படுகிறது. சராசரியில் ஆணைவிடப் பெண் ஐந்து, அல்லது ஆறு ஆண்டு அதிகம் ஜீவிக்கிறாள்.

6. பெண்களின் சுறுசுறுப்புக்காக அவர்களைப் பாராட்டி, ஆண்களைச் சோம்பியிருப்பதாகப் பழிக்கிறோம். இது அவரவர்களின் தேகக் கூறு அவரவர்க்கு அளித்த இயல்பாகும். பெண்ணின் தைராய்டு சுரப்பி ஆணுடையதைக் காட்டிலும் பெரிதானதாம். இதுவே அவர்களுக்குத் தம் வேலையில் அதிக ஊக்கம் தருகிறது. பெண்ணின் நாடித் துடிப்பும் ஆணுடையதை விட அதிகமானதால் சுவாச கோசத்திலிருந்து விரைவிலேயே அவளுக்குப் புது ரத்தம் கிடைத்து உற்சாகமூட்டுகிறது. சக்தியைத் தரும் க்ளைகோஜென் என்ற சத்தையும் பெண்ணே அதிகம் தேக்கி வைத்துக்கொள்கிறாளாம்.

7. ஆணுக்கு இல்லாத ஓர் அதிசய சீதோஷ்ண அமைப்பு பெண்ணின் உடலில் உள்ளது. சதையின் அடியில் அவளுக்கு உள்ள கொழுப்புப் பூச்சு காரணமாகத் தேக உஷ்ணம் அதிகமாக வெளியேறுவதில்லையாம். குளிரும் உள்ளே அதிகமாகப் புகுவதில்லையாம்.

8. மனோபாவங்களைப் பார்ப்போம். பெண்கள் எதற்கும் கலங்கி, எப்போதும் துன்பப்பட்டுக் கொள்வார்கள் என்பதுதானே நம் அபிப்பிராயம்? உண்மையில் அவர்களே ஆண்களைவிட உள்ளூற மகிழ்ச்சியுடனிருக்கிறார்களாம். திருப்தியும் அவர்களுக்கே அதிகமாம். ஆடவன் பல அபிலாஷைகளை எண்ணி, அவற்றைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் மனமிடிந்து போகிறான். பெண்ணோ, தனக்கென்று ஒரு வீடு இருந்தால் போதும், அந்த வீட்டுப் பொறுப்பு போதும் என்பது போன்ற சிறிய எல்லைக்குள் நாட்டத்தைச் செலுத்தி நிறைவு காண்கிறாள். பெண்கள் புலம்பிக் கொண்டிருப்பதுதான் அவர்களது மகிழ்ச்சியின் இரகசியம். ஆடவனால் புலம்ப முடிவதில்லை. உள்ளுக்குள்ளேயே குமைகிறான். அவளோ கஷ்டங்களை அவ்வப்போது கண்ணீரில் கழுவிக் கொண்டு, உடனுக்குடனே தெளிவு பெற்று விடுகிறாள். இதனால் அவளை 'க்ஷணச்சித்தம், க்ஷணப் பித்தம்' என்று ஆடவன் வேண்டுமானால் கேலி செய்யலாம். ஆனால் இது அவளது வரப்பிரசாதம். அவளது உணர்ச்சிகள் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பதால்தான், எந்த உணர்ச்சியும் அடர்ந்து குமுறல் உண்டாவதில்லை.

9. பெண்ணின் மூளையைவிட ஆணின் மூளை எடை அதிகம் என்றால் அது ஆடவனுக்குப் பெருமையாகத்தானே இருக்கும்? 'பெருமைப்படாதீர்' என்கிறார் ஆராய்ச்சியாளர். 'சராசரியில் ஆணின் மூளை 49 அவுன்ஸ்; பெண்ணின் மூளை 44 அவுன்ஸ்தான். ஆனால் எடைக்கும் அறிவுக் கூர்மைக்கும் தொடர்பில்லை. மூளையிலுள்ள மடிப்புக்களைப் பொறுத்ததே மதிநுட்பம். பெண் மூளையில் ஆண் மூளையின் அளவு மடிப்பு உள்ளது' என்கிறார் அவர்.

10. காதல் விஷயம்: காதல் என்பது ஆடவனின் பல அலுவல்களில் ஒன்று; பெண்ணுக்கோ அதுவே வாழ்க்கை என்கிறார்கள். ஆழ்ந்த காதல் உணர்ச்சி கொண்ட பெண்கள் பொதுவாக ஒரே மனிதனையே பற்றிக் கொண்டு அவனிடமே என்றும் விசுவாசமாயிருக்கிறாளாம். ஆணின் சித்த அமைப்பே பல தாரம் நாடுவதாகத்தான் உள்ளது; அவனுக்கே சபலமும், சலனமும் அதிகம் என்கிறார்கள்.

அதனால்தான் ஸ்வாமி, பெண்ணுக்குப் பூஜை செய்கிறோம்.


[ஆதாரம்: "ஹிந்து"வில் வெளியான டெர்மட் காளிங்கின் கட்டுரை]

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

கூந்தலின் எழிலை எடுத்துக் காட்டுகிறது


ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயில்

கூந்தலை மழமழப்பாகவும் கவர்ச்சியாகவும் ஆக்குகிறது



ஸ்வஸ்திக் ஹேர் ஸ்டைல் 'மயூர்'

சிறிதளவு ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயிலைத் தடவி, கூந்தலை வாரி மூன்று கால்களாக்கிக்கொண்டு நடுப்பாகத்தைச் சுழற்றி ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டை போடவும். இரு பகுதிகளையும், எதிரும் புதிருமாகக் கொண்டையைச் சுற்றிச் சொருகிவிடவும். பொருத்தமான அணிகளினால் கொண்டையை அலங்கரித்துக்கொள்ளவும்.



ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.



REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Ceylon